கல்கி

KALKI 6.12.92 ரூ. 3.00



“தட்டிக் கேட்கத்தான் தோழமைக் கட்சி!”

—மூப்பனார் சிறப்புப் பேட்டி


விலை குறைவாக
இருந்தால் மட்டும்
போதுமா?
''போதாது. தாயாகவும்
டாக்டராகவும் இருப்பதால்
என் குழந்தைக்கு எது
சரியானது என்பதை
நான் நன்றாக அறிவேன்
அதனால் தரமான
தூய்மையான
பொருட்கள்தான் என்
கண்களில் முதலில்
படும். ஆனால் அதே
உன்னதமான தரமும்
தூய்மையும் குறை
வான விலைக்குக்
கிடைத்தால், எதற்காக
நான் அதிக விலை
கொடுக்கணும்?
கூடவே கூடாது
அதனால்தான்
என் குழந்தைக்கு
நான் தூய்மையான,
மென்மையான, மற்றும்
ஸ்டெரிலைஸ் செய்த
விப்ரோ பேபி ஸாஃப்ட்
பவுடரை வாங்குகிறேன்.
விசேஷ ப்ளேட்லெட் கிரேடு
கொண்ட இந்த பவுடர் இதர
பவுடர்களைப் போல் சரும
துவாரங்களை அடைக்காது.
சருமத்தின் மேற்புறத்தில்
மட்டும் பரவுவதால்
சருமத்திற்கு எளிதாக
சுவாசம் கிடைக்கும். அதாவது
குழந்தைக்கு முற்றும்
பாதுகாப்பு. இத்தனை
சிறப்புகள் இருந்தும்
விலையும் மிக குறைவு.
இனியும் அதிக விலை
கொடுத்து இதர பவுடர்களை
வாங்குவீர்களா நீங்கள்?''
BABY SOFT
ரூ. 24/-
விப்ரோ
பேபி ஸாஃப்ட்
பவுடர்
குழந்தைக்கு தூய்மையானது. உங்களுக்கு சிக்கனமானது.
everest/92/WL/235-tm

TV மர்சனம்

கிரிக்கெட் துர்வாசர்களின் சாபம்!



* கபில் : முதல் பந்தில்...

* வெங்கட் : குண்டூசி வசனம்!



* தமிழ்வாணன் : படிக்கையில் த்ரில்.



* மபொசி : பிளாட்டினம்



●● செய்தி சம்பந்தப்பட்ட படம் மானிட்டரில் ஒளிபரப்புவதற்குள்ளான ஒரு சில வினாடிகளில் வாசிப்பை நிறுத்தி விட்டு, 'கிர்' காடுகளில் தனித்து விடப்பட்ட பிரஜையாக அம்போ என்று அத்தனை செய்தி வாசிப்பாளர்களும் முழிக்கிறார்கள். பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இந்த இடைவெளியைக் குறைக்க முடியாவிட்டால் இதுபோன்ற இக்கட்டான சமயங்களில், டெல்லி வாசிப்பாளர் சுகன்யா பாலகிருஷ்ணன் போல் குறும்பாகச் சிரிக்கவாவது செய்யலாமே. ஸ்டைலிஷ்டிக்காக இருக்கும்.

●● டி.வி. பாணியிலிருந்து சற்றே விலகிய இவ்வார டி.வி. நாடகம் 'திரை விலகுகிறது.' வெங்கட்டின் குண்டூசி வசனங்கள் ரசிப்புக்கு விருந்து. தொலைக்காட்சியின் ஸ்டார் மூலா நாடகாசிரியர்களுக்குக் கம்பல்ஸரி ரிடையர்மெண்ட் கொடுத்து விட்டு இதுபோன்ற தொழில் முறை நாடகர்களை டி.வி. அணுகுமானால், டி.வி. ஜோக் போட்டு உயிரை வாங்கும் பத்திரிகைகளிலிருந்து பெரிதும் தப்பிக்கலாம்.

●● புதன் கிழமை இரவு இரண்டாவது சேனல், இலக்கியச் சோலையில் மேலாண்மைப் பொன்னுச்சாமியும், தாமரைச்செந்தூர் பாண்டியும் கலந்துரையாடினர். நிகழ்ச்சி நேரம் இருபது நிமிட மும் யதார்த்தம் என்பதற்கான பதார்த்தம் (பத+அர்த்தம்) வழங்குவதற்கே சரியாகப் போய் விட்டது!

●● கொஞ்சம் கிரிக்கெட். வெள்ளி இரவு World this week ல் தென்னாப்ரிக்கா டெஸ்ட்டில் கபில் தன் முதல் பந்திலேயே விக்கெட் எடுத்ததைக் காட்டினார்கள். சரித்திரப் பிரசித்தி பெற்ற இம் மாட்சை ஒளிபரப்பாததன் மூலம் (கொள்கை முடிவாம்!) தூர்தர்ஷன் லட்சோபலட்சம் கிரிக்கெட் துர்வாசர்களின் சாபத்திற்கு ஆளாகி விட்டது. அப்படி சபித்த ஒருவர் "கொருக்குப் பேட்டை குப்புசாமி நினைவு 'கில்லி' போட்டிகளை எல்லாம் கர்மசிரத்தையாய் ஒளிபரப்பு வதே இவர்களின் 'கொள்கை' " என்று விளக்க உரை தந்தார்!

●● சனி இரவு 7:40க்கு, 'இந்தியச் சிந்தனை' என்று ம.பொ.சி. பேசினார். அப்பாடா! உருப்படியான ஒரு நிகழ்ச்சி. ஆயிரம் சொல்லுங்கள், old is platinum.

●● ஞாயிறு காலைகளில் சங்கர்லால் துப்பறிகிறார். படிக்கையில் கிடைத்த 'த்ரில்', பார்க்கையில் இல்லை. போன வாரம் வரைக்கும் அரை அம்மணமாக உலவ விட்ட கத்திரிக்காயை இந்த வாரம் சட்டை மாட்டி அனுப்பியிருக்கிறார்கள். மாலை திரைப்படம் 'எங்கிட்ட மோதாதே'. ஆகவே விட்டு விடுகிறேன்!

●● 23/11 திங்கள் இரவு 'மிருதங்க வீணை' என்ற புது வாத்தியத்தை அறிமுகப்படுத்தினார்கள். மிருதங்கம் மாதிரியும் இல்லாமல், வீணை மாதிரியும் இல்லாமல் அசப்பில் தடால் ஆயில் 'ரேக்' மாதிரி இருக்கிறது. முழுக் கச்சேரி பண்ண முடியுமா என தெரியவில்லை. ஒரு பாட்டாவது முழுக்க வாசித்திருக்கலாம்.

●● புகை பிடித்தலின் தீமை பற்றியதான டாக்குமெண்ட்ரி படம் ஒன்றை, போன வியாழன் அன்று ஒளிபரப்பினார்கள். டைட்டுலோ ஸைப்பில் வாய்ப்புற்று நோயாளிகள் எலும்பு சிரிக்க வைத்தார்கள். பல வருஷம் சர்வீஸ் போட்ட 'தம்மர்'களும், 'தம்பி'(!)களும் 'மலரும் நினைவுகள்' வழங்கினர். மறுநாள் 21J பஸ்ஸில் கேட்ட கமெண்ட் : "நேத்து டி.வி. பாத்தியா வாத்யாரே! அந்த பொம்பளை என்னா ஸ்டைலா தம்மடிக்கறா! சூப்பர் ஸ்டார் பிச்சை வாங்கணும்!"

– சின்னத் திரையன்

"தட்டிக் கேட்கத்தான் தோழமைக் கட்சி!"

கல்கி : 'காங்கிரஸ் தனியாகப் போட்டியிட்டு ஆட்சிக்கு வர வேண்டும்' என்று நீங்கள் சொல்கிறீர்கள்.... ஆனால், தமிழக மக்கள் இது பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

கருப்பையா மூப்பனார் : 'காங்கிரஸ்காரர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள்; ஆனால் தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க. வுடனோ அல்லது தி.மு.க. வுடனோ கூட்டுச் சேர்ந்து கொள்வார்கள்' என்கிற எண்ணம்தான் மக்களிடம் பரவலாக இருக்கிறது. இதை முதலில் மாற்ற வேண்டும். காங்கிரஸ்காரர்கள் தனியாக நின்று ஒரு நல்லாட்சியைத் தருவார்கள் என்கிற நம்பிக்கையை மக்களிடம் உருவாக்க வேண்டும். இந்த நம்பிக்கை உருவாக்கப்படாத காரணத்தால்தான் தி.மு.க - அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளிடமும் நம்பிக்கையற்றுப் போனவர்கள் கூட வேறு வழியின்றி அந்தக் கட்சிகளையே மாறி மாறித் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



கல்கி : காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டும் என்கிற எண்ணம் மக்களிடையே பரவலாக இருக்கிறது என்று நீங்கள் கருதுகிறீர்கள். ஆனால் டெல்லியிலுள்ள உங்கள் கட்சி மேலிடமும் இப்படித்தான் கருதுகிறதா?

மூப்பனார் : இன்றைக்குத் தமிழக காங்கிரஸ் இருக்கும் சூழ்நிலையில் 'நாங்கள் தனியாகப் போட்டியிடுகிறோம்' என்று சொன்னால் மேலிடத்தில் ஒப்புக் கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. முதலில் கட்சியை பலப்படுத்த வேண்டும். அதைச் செய்து விட்டு நாம் போய்க் கேட்கிற போது மேலிடம் எப்படி மறுக்க முடியும்?



- மூப்பனார் சிறப்புப் பேட்டி

கல்கி : மக்களிடம் கட்சியைப் பலப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்?

மூப்பனார் : முதலில் நாங்கள் தனியாக நின்று ஆட்சிக்குவரத் தயாராய் இருக்கிறோம் என்பதை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னாலே மக்கள், காங்கிரஸ் கட்சியை ஆட்சிக்கு வரும் கட்சி என்கிற கோணத்தில் பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். மக்களை அப்படியொரு கோணத்தில் சிந்திக்க வைப்பதே கட்சிக்குக் கிடைக்கும் மிகப் பெரிய பலம் என்று கருதுகிறேன்.

கல்கி : காங்கிரஸ் தனியாக நிற்க வேண்டும் என்று நீங்கள் சொல்வது, உண்மையில் காங்கிரஸ் தனித்து நின்று வெற்றி பெறுவதற்காக அல்ல; அது தி.மு.க. வெற்றி பெறுவதற்கு மறைமுகமாக உதவுவதற்காகத்தான் என்று வாழப்பாடி சொல்கிறாரே?

மூப்பனார் : எனக்கோ நானறிந்த காங்கிரஸ்காரர்களுக்கோ தி.மு.க. வர வேண்டும் என்கிற உணர்வு நிச்சயமாக இல்லை. வாழப்பாடி சொல்வதிலிருந்து என்ன தெரிகிறது? காங்கிரஸின் துணையில்லாமல் அ.தி.மு.க.வால் தி.மு.க வைத் தோற்கடிக்க முடியாது என்பதை வாழப்பாடி மறைமுகமாக ஒப்புக் கொள்கிறார். அப்படியானால், தி.மு.க. வைத் தோற்கடிக்க உதவுகிற காங்கிரஸ் கட்சிக்கு அதற்குரிய மரியாதை தரப்பட வேண்டாமா? அந்த மரியாதையைப் பெறுவதற்கான பலம் நம்மிடம் வேண்டாமா என்பதுதான் கேள்வி. அந்த பலத்தைக் கட்சிக்கு ஏற்படுத்த வேண்டும் என்று நான் சொல்வது எப்படித் தவறாகும்? ஓர் உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். சுப்பிரமணியம் சுவாமி பல குற்றச் சாட்டுகளைக் கூறிக் கொண்டிருக்கிறார். அவை ஒன்றும் புதியவை அல்ல; ஏற்கெனவே தி.மு.க. சொல்லிய குற்றச் சாட்டுகள்தாம் அவை. ஆயினும் தி.மு.க. சொன்னபோது மக்களிடம் ஏற்படாத ஒரு மரியாதை, சுப்பிரமணியம் சுவாமி வந்து சொல்கிற போது ஏற்படுகிறது என்றால் அதற்கு என்ன காரணம்? மூன்றாவதாக ஒரு சக்தியை மக்கள் எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள் என்பதுதான். மக்களின் இந்த எதிர்பார்ப்புக்கு ஏற்பக் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.

கல்கி : தோழமைக் கட்சியாக இருந்து கொண்டு எப்படிக் குற்றச் சாட்டுகளைக் கூறுவது என்று வாழப்பாடி நினைக்கிறார் போலிருக்கிறது....

மூப்பனார் : தோழமைக் கட்சி என்றால் அரசாங்கத்தின் காலைவாரி விடக்கூடாதே தவிர, தவறுகளைச் சுட்டிக்காட்டி ஆட்சியை நேர்வழிப்படுத்தக் கூடாது என்பதில்லையே! 'தட்டிக் கேட்கத் தைரியமில்லாத நண்பன் துணை நிற்கவும் தைரியமாக வரமாட்டான்,' என்று ஒரு பழமொழி கூட உண்டு.

கல்கி : அ.தி.மு.க. அரசின் தவறுகளை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டாமலிருந்தால், பின்னால் அ.தி.மு.க.வுக்கு மக்களிடம் ஏற்படக்கூடிய அவப் பெயர் காங்கிரஸுக்கும்தானே ஏற்படும்?

மூப்பனார் : அதைத்தான் நானும் சொல்கிறேன். ஆளுங்கட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டி அதன் மூலம் கிடைக்கும் அரசியல் லாபங்களை அடையப் பார்ப்பது தான் தோழமைக் கட்சிக்கு அழகல்லவே தவிர, ஆளுங்கட்சியின் தவறுகளைச் சுட்டிக் காட்டி, நேர்வழிப்படுத்தி, ஒரு நல்ல ஆட்சியை மக்களுக்குத் தரும் பொறுப்பு தோழமைக்கட்சிக்கு உண்டு என்று சொல்கிறேன்.

கல்கி : இப்படியொரு பொறுப்பை நீங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றியிருப்பதாகக் கருதுகிறீர்கள்?

மூப்பனார் : அப்படி ஒரு பொறுப்பை நிறைவேற்றுகிற தீவிர முயற்சியே இது வரை இல்லை; அந்த முயற்சியைக் காங்கிரஸ் செய்ய வேண்டும் என்றுதான் சொல்கிறேன்!

கல்கி : தவறுகளைச் சுட்டிக் காட்டுவது ஒருபுறம் இருக்கட்டும்; இப்போது சு. சுவாமி சொல்லுகிற குற்றச்சாட்டுக்களெல்லாம் பொய் என்கிற மாதிரிதானே டெல்லியிலிருந்து வருகிற காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள்?

மூப்பனார் : சுப்பிரமணியம் சுவாமி காங்கிரஸின் தூண்டுதலால் குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை; அவர் தனிப்பட்ட முறையில் சொல்லுகிறாரே தவிர எங்களுக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை என்பதைத்தான் தெளிவு படுத்தியிருக் கிறார்களே தவிர, சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையா பொய்யா என்பது பற்றி அவர்கள் ஏதும் சொல்லவில்லை.

கல்கி : அந்தக் குற்றச்சாட்டுகளில் உண்மை இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

மூப்பனார் : இந்த இடத்தில் நான் தோழமைக் கட்சியாக இருந்துதான் பதில் சொல்ல வேண்டும். தவறுகள் இருந்தாலும் நாங்கள் அதைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ள விரும்பவில்லை;

அடுத்த இதழில்.....



தேவர் மகன்

- சிவாஜி பேட்டி

+

பாலு மகேந்திராவின் விமர்சனம்

தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்.

கல்கி : நீங்கள் இந்த அளவுக்கு ஆளுங் கட்சிக்குத் தோழமையாக இருந்தாலும், மதுரையில் நடந்த மாநாட்டில் ஜெயலலிதா பேசும்போது ராஜீவ் காந்தியின் உயிர்த்தியாகத்தையே துச்சமாகத்தான் பேசினார். அது காங்கிரஸ்காரர்களைப் புண்படுத்தியதாகவே தெரியவில்லையே?

மூப்பனார் : அப்படி அவர் பேசிய பிறகுதான் பிரச்னையே எழுந்தது. கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் இந்த அளவுக்கு நாம் தாழ்ந்து போக வேண்டுமா என்று பலரும் யோசிக்க ஆரம்பித்தார்கள். கட்சிக்காரர்கள் மனது புண்பட்டது. காங்கிரஸ்காரர்கள் மட்டுமின்றி காங்கிரஸ் கட்சியின் மேல் அனுதாபம் கொண்டவர்கள் கூட, இனி காங்கிரஸ் தனித்துப் பலம் பெற வேண்டும்; தமிழகத்தில், தான் இழந்த பெருமைகளை மீண்டும் காங்கிரஸ் கட்சி பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னிடமே பலர் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்கி : பெருமையோடு இருந்த காங்கிரஸ், இன்று இப்படிப்பட்டதொரு நிலைக்கு வந்ததற்கு யார் காரணம்?

மூப்பனார் : காங்கிரஸேதான் காரணம்! வேறு எந்த மாநிலத்தில் எடுத்துக் கொண்டாலும் ஒன்று காங்கிரஸ் ஆளுங்கட்சியாக இருக்கும்; அல்லது பலமான எதிர்க்கட்சியாக இருக்கும். கூட்டணி என்றாலும் அது காங்கிரஸுக்கு கௌரவம் சேர்ப்பதாக இருக்கும். தமிழகத்தில் மட்டும்தான் மாநிலக்கட்சிகளுக்கு அடங்கிப் போகிற ஒரு கட்சியாக இருக்கிறது. இந்த நிலைக்கு நாங்களேதான் காரணம்.

கல்கி : இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்கிற உங்கள் நோக்கம் ஓர் உயர்ந்த நோக்கம்தான். இதற்கு உங்கள் கட்சியில் எந்த அளவுக்கு ஒத்துழைப்புக் கிடைக்கிறது?

மூப்பனார் : காங்கிரஸ் ஆட்சி ஏற்பட வேண்டும் என்று கருதுகிற பலரும் கேட்கிற கேள்வியும் இதுதான்! உங்கள் கட்சிக்குள்ளேயே இரண்டு பிரிவுகளாக இருக்கிறீர்களே, எப்படி உங்கள் நோக்கம் நிறைவேறும் என்றுதான் கேட்கிறார்கள். எனக்கும் அது ரொம்பக் கவலையாகத்தான் இருக்கிறது. ஆயினும் நிச்சயம் இன்றில்லாவிட்டாலும் நாளைக்குக் காங்கிரஸின் பழைய பெருமைகளை நிலைநாட்டுவதற்கு அனைவரும் ஒன்றுபடுவார்கள் என்றே நம்புகிறேன்.

கல்கி : தமிழ்நாடு காங்கிரஸுக்கு நீங்கள் தலைவராக இருந்தபோதும் சரி, உங்களைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிற பழனியாண்டி தலைவராக இருந்தபோதும் சரி, தமிழக காங்கிரஸில் கோஷ்டியே இல்லை. தாம் தலைவரான பிறகுதான் கோஷ்டியே உருவாகி இருக்கிறதென்று வாழப்பாடி கூறியிருக்கிறார். அதாவது இந்தக் கோஷ்டியை உருவாக்கியதே நீங்கள்தான் என்று அவர் சொல்லுகிறார்...!

மூப்பனார் : நானும் அவர் சொன்னதைப் படித்தேன். காங்கிரஸ் கட்சியில் பல முக்கிய பதவிகளை வகித்தவன் நான். அந்த வகையில், நான் இந்த நாற்காலி ஆசைகளையெல்லாம் கடந்தவொரு நிலைக்கு வந்துவிட்டேன் என்பதுதான் உண்மை. ஆயினும் காங்கிரஸ்காரன் என்கிற முறையில், காங்கிரஸ் கட்சிக்குத் தனித்து நின்று வெற்றி பெற வேண்டும் என்கிற எண்ணம் இருக்க வேண்டும் என்கிறேன். அந்த எண்ணமே இருக்கக் கூடாது என்பது எப்படிச் சரியாகும்? காங்கிரஸ் முதலில் எண்ண வேண்டியது, தனித்து நிற்பது பற்றித்தான் இருக்க வேண்டுமே தவிர, கூட்டணி வைத்துக் கொள்வது பற்றியல்ல! கூட்டணி என்பதெல்லாம் நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு ஏற்படுத்திக் கொள்கிற இரண்டாம் பட்ச விஷயமாகத்தான் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கூட்டணி உறவு கூட எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதில்தான் நான் வேறுபடுகிறேன்!

கல்கி : எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?

மூப்பனார் : நீங்கள் எப்படி எங்களுக்குத் தேவையோ, அதே போல் நாங்களும் உங்களுக்குத் தேவை என்கிற உணர்வு இருபுறமும் இருக்க வேண்டுமே தவிர, நாங்கள் உங்களுடன் ஒட்டிக் கொள்ள வந்தவர்கள் என்கிற உணர்வு சம்பந்தப்பட்டவர்களுக்கு வரக்கூடாது. அப்படி நடத்தப்படுகிற கூட்டணியை எப்படி ஒப்புக் கொள்ள

T. S. S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED
Regd. Office: 230, R. K. Mutt Road, Mylapore, Madras 600 004. Phone: 77503.
THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai, Kamraj Nagar, Madras 600 041.

DEPOSIT SCHEMES

FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

Period (months)	Rate of interest P.A.	CASH INCENTIVE
6	15 %	not applicable
12	17 %	1/2 %
24	18 %	1 %
36	19 %	1 1/2 %
60	20 %	2 %

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME
(Re-Investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

DEPOSIT AMOUNT RS.	PERIOD (Months)	MATURITY VALUE RS.	CASH INCENTIVE
1000	12	1180	1/2 %
1000	24	1425	1 %
1000	36	1760	1 %
1000	45	2025	1 1/2 %
1000	67	3025	2 %

HIGHLIGHTS:

- Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
- Company is in 20th year of Service.
- Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
- No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-.
- Loan facility upto 75 % on Fixed Deposit and 85 % on Recurring Deposit paid-up amount.
- Pre-mature repayment facility as per terms and conditions
- Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
- Transaction with members only. (Rupees Two only for Membership.)

JEWEL LOAN

Jewel loans granted on Gold ornaments at Rs. 255/- per gram i.e. Rs. 2040/- per sovereign (8 gm).

Recurring Deposit not required.

SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19 % p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)

Minimum Deposit Rs. 10000/- **Period - 12 months.**

RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

MONTHLY DEPOSIT	100	100	100	100	100	100
PERIOD (Months)	12	24	36	48	60	72
MATURITY VALUE	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9%

	BUSINESS HOURS		WEEKLY HOLIDAY
	WEEK DAYS	SUNDAYS	
HEAD OFFICE Mylapore	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	FRIDAY
BRANCH OFFICE Thiruvanmiyur	9 am - 12.30pm 2.30 pm - 5 pm	9 am to 12.30pm -	TUESDAY

M. B. PANDURANGAM
President

P. S. SAMBASIVAM
Secretary

முடியும்? அது எப்படி காங்கிரஸுக்கு கௌரவமானதாக இருக்க முடியும்?

கல்கி : நீங்கள் ஒரு பேட்டியில் 'மேலிடம் கட்சியில் யாரை முதலமைச்சராக அறிவித்துப் பிரசாரம் செய்தாலும் நான் முழு ஒத்துழைப்புத் தருவேன்!' என்று கூறியிருக்கிறீர்கள். யாரை மனத்தில் வைத்து அப்படிச் சொல்லியிருக்கிறீர்கள்?

மூப்பனார் : ஏ,பி,சி,டி... என்று யாராக இருந்தாலும் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறேன்.

கல்கி : இந்த நிலையில் வாழப்பாடிக்கு ஒத்துழைப்புத் தருவதில் என்ன சங்கடம்?

மூப்பனார் : கூட்டணி உறவு அன்னியில், காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த அடிப்படை எண்ணத்தில் அவர் வேறுபடுவது தான் காரணம்.



"எடைக்கு எடை வழங்கற விழாவுல ஆனாலும் தலைவர் இப்படி நடந்துக் கிட்டிருக்கக் கூடாது!"

"என்ன விசயம்?"

"மடில அஞ்சு கிலோ வெயிட்டை வேட்டி மறைப்புல வச்சுக்கிட்டுத் தராசுல உக்காந்துட்டார்!"

– அம்பை தேவா

கல்கி : காங்கிரஸ் ஆட்சிக்கு வர வேண்டுமென்பதுதான் தமது விருப்பமும் என்றாலும் அதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல என்கிறாரே வாழப்பாடி?

மூப்பனார் : அலைகளெல்லாம் ஓய்ந்த பிறகுதான் கடலில் குளிப்பேன் என்றால் அது எப்படி முடியும்? கடலில் குளிக்க விருப்பமிருந்தால் முதலில் அலைகளை எதிர்த்து நீந்துவதற்கும் தயாராக வேண்டும். இல்லையென்றால் குளிக்கவே முடியாது.

கல்கி : எப்படியிருந்தாலும் நீங்கள் மறைமுகமாகவேனும் தி.மு.க.வுக்கு ஆதரவாகச் செயல்படுகிறீர்கள் என்கிற பிரசாரத்தைத்தான் உங்களின் எதிர் கோஷ்டி செய்து கொண்டிருக்கிறது....

மூப்பனார் : தி.மு.க.வுக்கு உயிர் கொடுப்பதே அவர்கள்தான் என்று நான் கருதுகிறேன். தி.மு.க.வுக்கென்று ஒரு குறிப்பிட்ட சதவிகித வாக்காளர்கள் இருந்தாலும் அது இனி வெற்றி பெறுகிற அளவுக்கான வாக்குகளைப் பெற முடியாது. காரணம் மக்களின் நம்பிக்கையை தி.மு.க. இழந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். இந்தச் சூழ்நிலையில் தி.மு.க.வை மக்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருப்பதே அவர்கள்தான்! இன்னும் சொல்லப் போனால், நான் பேசாமல் ஒதுங்கியிருந்தாலே தமிழக காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துவிடும் என்றால் நான் ஒதுங்கியிருக்கவும் தயாராக இருப்பதாக நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

கல்கி : இப்போது கட்சியில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. தேர்தலின் மூலம் ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் இந்தக் கோஷ்டிப் பூசல்கள் ஒழியுமென்று கருதுகிறீர்களா?

மூப்பனார் : ஒழிய வேண்டும். நியமனம் செய்யும்போதுதான் - நாம் கடவுளையே தலைவராக நியமனம் செய்தாலும் - அவரைவிடப் பெரியவன் நான் இல்லையா என்கிற கேள்வியைச் சிலர் எழுப்புவார்கள். தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கிறபோது அப்படியொரு கேள்வியே வரக் கூடாது. ஆனாலும் துரதிருஷ்டவசமாக மேற்கு வங்காளத்திலும் கேரளத்திலும் உட்கட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகும் கோஷ்டிச் சண்டைகள் இருக்கின்றன என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

கல்கி : நீங்கள் காங்கிரஸ் தனித்து நிற்க ஆயத்தமாக வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். ஆனால், டெல்லியிலிருந்து வருகிறவர்கள் 'கூட்டணி நீடிக்கும்; அதில் மாற்றம் ஏதும் கிடையாது' என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?

மூப்பனார் : நானும் கூட்டணி முறிக்கப்பட வேண்டும் என்று சொல்லவில்லையே! இந்தக் கூட்டணி உறவு மரியாதையானதாக இருக்க வேண்டும். அந்த மரியாதையைப் பெற வேண்டுமானால் நாம் நமது கட்சியைப் பலப்படுத்தியாக வேண்டும். கட்சி பலம் பெற வேண்டுமானால் நாம் தனியாக நின்று ஆட்சியைப் பிடிக்கப் போகிறோம் என்கிற உற்சாகமும் நம்பிக்கையும் தொண்டர்களுக்கு ஏற்பட வேண்டும்; அப்போதுதான் மக்களிடம் நமது கட்சியின் செல்வாக்கு பலப்பட முடியும். அப்படியொரு பலம் இருந்தால்தான் கூட்டணி அமைத்துக் கொள்கிற சூழ்நிலையில் கூட அந்தக் கூட்டணி உறவு எப்படியிருக்க வேண்டுமென்பதை நாம் அழுத்தம் திருத்தமாகக் கூற முடியும் என்கிறேன்.

கல்கி : அண்மையில் குமரி அனந்தன்



குழந்தைக்கு ஆகாரம் நீங்கள் உண்பதுதான்.

நீங்கள் என்ன உண்ணுகிறீர்கள்?

புதிய காம்ப்ளான் - விட்டாமில்க் தாய்மை யடையும் பருவத்தில் உணவின் குறை நிரப்ப விஞ்ஞான ரீதியாக தயாரிக்கப்பட்டது.

தாய்மையடையும் பருவத்தில், குழந்தையின் வளர்ச்சிக்குப் போதுமான ஊட்டச்சத்தை வழங்கும் உங்கள் உடலுக்கு... உணவின் குறை நிரப்பும் காம்ப்ளான் - விட்டாமில்க் தேவை.



நித்தம் இரண்டு கப் காம்ப்ளான் - விட்டாமில்க், காம்ப்ளானின் எல்லா நற் பயன்களையும், அதோடு இந்த கூடுதல் ஊட்டச் சத்துக்களையும் உங்களுக்கு வழங்கிடும்.

கூடுதல் ஃபாலிக் ஆஸிட்

கூடுதல் பால் புரதம் (22.2 கிராம்)

கூடுதல் வைட்டமின்கள் A, B_{12}, C

கூடுதல் இரும்புச் சத்து. அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மங்கனீஷியம்.

இது உங்களுக்கும், சிசுவின் ஆரோக்கியத்திற்கும் அத்தியாவசியமானது.

நித்தம் பருகுங்கள்

புதிய காம்ப்ளான்

விட்டாமில்க்®

உடல் நலத்தின் உறைவிடம் கிளாக்ஸோ.

GL/92/401 c TM

நடத்திய பாதயாத்திரை கட்சிக்குப் பலம் சேர்ப்பதாக அமைந்ததென்று கருதுகிறீர்களா?

மூப்பனார் : நிச்சயமாக மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

கல்கி : அப்படியொரு வரவேற்பை காங்கிரஸ் பெறுவதை விரும்பாமல்தான் அச்சிறுப்பாக்கத்தில் அ.தி.மு.க.வினர் குமரி அனந்தனைத் தாக்கியதாகச் சொல்லலாமா?

மூப்பனார் : காங்கிரஸ் செல்வாக்குப் பெறுவதை அ.தி.மு.க மட்டுமல்ல; தி.மு.க. மாத்திரம் எப்படி விரும்ப முடியும்? அச்சிறுப்பாக்கத்தில் ஏதோ லோக்கல் பாலிடிக்ஸ் காரணமாகத்தான் அந்தச் சம்பவம் நடந்ததாகச் சொல்கிறார்கள்; தங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று அ.தி.மு.க. வினர் கூறுகிறார்கள். அதையே உண்மையென்று நாம் நம்புவோமே!

கல்கி : சட்ட மன்றத்தில் கூட காங்கிரஸ் சரியான எதிர்க்கட்சியாகச் செயல்படாமல் கோஷ்டியாகத்தானே செயல்படுகிறது?

மூப்பனார் : வெளியில் பிளவுபட்டுக் கிடப்பது போல்தானே சட்டமன்றத்திலும் இருக்க முடியும்? அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியார் அடிக்கடி என் தந்தையாரைப் பார்க்க வருவார். அப்படி வரும்போது ஒருமுறை என்னிடம் ''இருந்தால் முந்திரிப் பருப்பைப்போல் இருக்க வேண்டும்!'' என்றார். ''புரியவில்லையே?'' என்றேன். ''முந்திரிப் பருப்பைக் கேசரியிலும் போடுவார்கள்; பாயசத்திலும் போடுவார்கள்; பிரியாணியிலும் போடுவார்கள்; வசதியிருப்பவர்கள் சாம்பாரிலும் போடுவார்கள். இப்படி எதில் போட்டாலும் முந்திரிப் பருப்பு தனது சுவையைத்தான் கொண்டிருக்குமே தவிர, எதில் போடுகிறோமோ அதன் சுவையைப் பெறுவதில்லை. அதுபோல்தான் நாமும் நமது தனித் தன்மையை இழக்காமல் இருக்க வேண்டும்!'' என்று விளக்கினார். நானும் அப்படிப்பட்ட முந்திரிப் பருப்பைப் போல்தான் காங்கிரஸும் தனது தனித் தன்மையை இழக்காமல் இருக்க வேண்டும் என்கிறேன்!

கல்கி : ஜெயலலிதா ஆட்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மூப்பனார் : விடுதலைப் புலிகள் விஷயத்தில் அவர் எடுத்த நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான்.

கல்கி : மற்ற விஷயங்களில்?

மூப்பனார் : அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது!

அட்டை வண்ணப்படம் : **யோகா**

பொறுத்திருந்து பூமி ஆளும் மொய்லி!

பதின்மூன்று துரதிர்ஷ்ட எண் என்பார்கள். மொய்லிக்கு அதுதான் அதிர்ஷ்ட எண் போலும்! அவர்தான் கர்நாடகாவின் 13 வது முதல்வர்! பல சந்தர்ப்பங்களில் இவர் எதிர்பார்த்துக் கை நழுவிப் போன முதல்வர் பதவி, இப்போது சிக்கியுள்ளது.

வீரப்ப மொய்லி பிறந்தது தென் கானராவில் மார்பாடி கிராமத்தில். வயது 52. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். பொருளாதாரப் பட்டம் பெற்று, எல்.ஐ.சி.யில் குமாஸ்தாவாகச் சேர்ந்தவர், சட்டப் படிப்பையும் தொடர்ந்து வழக்கறிஞரானவர். 1972 முதல் கடந்த 20 ஆண்டுகளாக கர்கலா சட்டமன்றத் தொகுதியிலிருந்தே இடைவிடாமல் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார். தேவராஜ் அர்ஸ் அமைச்சரவை, குண்டுராவ் அமைச்சரவைகளிலெல்லாம் பணியாற்றிய அனுபவம் உண்டு. 1983ல் எதிர்க்கட்சியாகக் காங்கிரஸ் சட்டமன்றத்தில் இயங்கியபோது, மொய்லிதான் தலைவர். அப்போது ''மொய்லி டேப்'' விவகாரத்தில் ராஜினாமா செய்ய நேர்ந்தது. ஆனால் பிற்பாடு அவர் மீது குற்றமேதுமில்லை என்று நிரூபணமாயிற்று.



வீரேந்திர பாட்டீல் அமைச்சரவையில் (1989) சட்ட அமைச்சர். அப்போது லோக் அதாலத் என்ற அமைப்புகளை நிறுவி, 1,81,000 வழக்குகள் இரண்டே மாதங்களில் தீர்வு காண வழிவகுத்துச் சாதனை புரிந்தார். பங்காரப்பா இவரைக் கல்வி அமைச்சராக நியமித்தார். பங்காரப்பா எதிர்ப்பு இயக்கம் ஆரம்பமாக, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

மனைவி மாலதி. மூன்று பெண்கள். ஒரு மகன். மொய்லி ஓர் எழுத்தாளரும் கூட. மூன்று நாவல்கள் பிரசித்தமானவை. ''சுழல் காற்று'' என்ற தலைப்பு கொண்ட நாவல் திரைப்படமாகியுள்ளது.

– **பெங்களூரான்**



இதயம் உள்ளவன்

முரட்டுத்தனமான பாத்திரத்துக்குப் பொருத்தமான உடற்கட்டு நாயகன் நாகேந்திரபாபுவுக்கு. இலக்கணத்திலிருந்து சற்றும் வழுவாமல் இருபது பேரை அடித்துத் தள்ளி வியர்த்து விறுவிறுக்காமல், மேல் மூச்சு - கீழ்மூச்சு வாங்காமல், வாரிய தலைமுடி கூடக் கலையாமல் நிமிர்ந்து நிற்கிறார்.

நாயகி அனுஷாவுக்கு அதிகம் வேலையில்லை. கூடவே உணர்ச்சிகளைப் பிரதிபலிக்காத (அல்லது பிரதிபலிக்க முடியாத?) முகம். மெழுகு ரோபோ.

இவரைக் கொலை செய்ய நாகேந்திரபாபு மேற்கொள்ளும் முயற்சிகள் அரைகுறை.

படத்தின் தொடக்கத்திலேயே சஸ்பென்ஸை உண்டுபண்ணி, இடைவேளைக்குப் பின் அதனைக் கட்டவிழ்க்கும் நிகழ்ச்சிகளில் இடம்பெற்றிருக்கும் கவனம் இந்த விஷயத்தில் செலுத்தப்படாமல் போனது ஏனோ?

இதுபோலவே படிப்படியாகத் தெளிவுபடுத்தப்படாமல் போன இன்னொரு அம்சம் - கொலை நோக்கத்தைக் கைவிடும் நாயகனின் மனமாற்றம்.

அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் சரத்குமார். ஒரு சம்பிரதாயமான வில்லன் பாத்திரத்தை இவர் வெளிப்படுத்தியிருக்கும் விதம் சரளம்.


இடைச்செருகலாக அங்கங்கே இடம்பெறும் பாடல்கள் இனிமை. ('ஜமுக்கு ஜமா' பாமர ரஞ்சக ரகம்.) என்றாலும், வலியத் திணிக்கப்பட்டிருப்பதால் கதையோட்டத்துக்கு இவை விதிப்பது தடை.

இடைவேளைக்குப் பிறகு திடுமென அறிமுகமாகும் பாத்திரம் டேவிட். நாலே காட்சிகளில் இடம்பெற்று, 'ஜமுக்கு ஜமா' எனப் பாடி ஆடி, அதற்கு அடுத்த கட்டத்திலேயே உயிரை விட்டாலும் நயமாகச் செய்து நெஞ்சில் இடம்பெறுகிறவர் இயக்குனர் மணிவண்ணன்.

படத்தின் மற்றொரு நயம் - இயல்பான வசனம்.

இத்தகைய சில நயங்களுக்காகப் படம் முழுக்கப் பொறுமையுடன் பார்ப்பது என்றால் அந்த ரசிகர்கள் இதயம் உள்ளவர்கள் என்பதால்தான்.

- சி. ஆர். கே.



இ. காங்கிரஸ்
அ.தி.மு.க...
குளிக் தோச்குதுடீ...
ஆனா, என்னா ஸ்வீட் வாய்ஸ்!
ம.ஜே.பி.யுடன் புது உறவு
ஜெ.
கா... கா...
காகசேனை...
கா... கா...!
காகசேனை...
ராஜாஜியின் கட்சிக்கு யாரும் ஏன் இப்படி வழிவிடல...
தி.மு.க.
ஹிந்துவாரமும் அதிகாரத்தாலே கைவிட்டு இருந்துச்ச?
மோதலைத் தவிர்க்க இன்னும் வாய்ப்பு இருக்கு...
அத்வானி
ம.ஜே.பி.
வி.ஹெச்.பி.
நீதி மன்ற ஆணை...
வேலியை அறுத்துக்கிட்டு அத்து மீறாம இருந்தா மோதலுக்கே இடமில்லையே...?
பிரதமர்



கல்கி



1992
டிசம்பர் 6
மலர் : 51
இதழ் : 19
ஆங்கீரச
கார்த்திகை 21

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

பி.ஜே.பியின் ஜெயலலிதா அணி!

இதற்கு முன் சில சந்தர்ப்பங்களில் நமது முதல்வர் தலைநகரில் நடக்கும் சில முக்கிய மாநாடுகளில் கலந்து கொள்ளாமல் இருந்த போது, ''அடடா இப்படி புறக்கணிக்கிறாரே'' என்று நாம் வருந்தியதுண்டு. இப்போதோ, ''தேசிய ஒருமைப்பாடு கவுன்சில் கூட்டத்தில் ஏன்தான் கலந்து கொண்டாரோ'' என்று வருந்த வேண்டியிருக்கிறது! தனி விமானத்தில் செல்லவில்லை என்பது மட்டுமே ஆறுதல்!

அத்வானியைச் சந்தித்ததன் பின்விளைவுதானோ என்னவோ, ''கர சேவை நடக்கட்டுமே'' என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார் ஜெ. கூடவே ''மஸ்ஜித்தும் இருக்கட்டும்'' என்று அபயம் அளித்திருக்கிறார்தான். ஆனால் இதில் உள்ள முரண்பாடு அவருக்குப் புரியாமல் போனதுதான் ஆச்சரியம். இன்று ''கரசேவை நடத்துவோம்'' என்று சூளுரைக்கும் யாருமே, ''மசூதியை இடிக்க மாட்டோம்'' என்று உறுதிமொழி அளிக்கவில்லை. இன்றைய கோவில் கட்டும் கரசேவை, நாளை மஸ்ஜித் இடிக்கும் கடப்பாறை சேவையாக மாறாது என்பதற்கு உத்தரவாதம் இல்லை. அத்வானி கூட கோவிலின் வரைபடத்தைக் காட்டுங்கள் என்ற சவாலின் சவாலுக்கு மழுப்பலான பதிலையே அளித்திருக்கிறார். மேலும் டிசம்பர் 6 உத்தேசிக்கப்பட்டுள்ள கர சேவை, நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுகளுக்கு முற்றிலும் முரணானது. ''பங்காரப்பா நீதிமன்ற உத்தரவைக் காவேரி நீர் விஷயத்தில் மதிக்கவில்லை என்பதால் கல்யாண்சிங்கும் நீதிமன்ற உத்தரவை மீறலாம்'' என்று ஜெ வாதாடுவது அபத்தம் மட்டுமல்ல; ஆபத்தான போக்கும் ஆகும்.

''மைனாரிடிகளின் நலன்களைக் கவனிக்க வேண்டும்தான்; ஆனால் மெஜாரிட்டி விருப்பங்களையும் புறக்கணிக்கக் கூடாது'' என்று ஜெ பேசுவது, பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்பது போலுள்ளது. தேசிய ஒருமைப்பாடு கவுன்சில் கூட்டத்தில், ''சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும்'' என்று பேசிய அனைவருமே மைனாரிடி சார்பில் பேசியவர்கள் அல்ல; அவர்களில் மிகப் பெரும்பாலோர் மெஜாரிடி மக்களின் பிரதிநிதிகளே. மெஜாரிட்டி விருப்பம் என்பதை எப்படி நிர்ணயிப்பது? ஒரு அபிப்பிராய வாக்கெடுப்புதான் ஒருவேளை உண்மையை உணர்த்தக்கூடுமேயன்றி, ஜெயின் 'எடுத்தேன் - கவிழ்த்தேன்' பேச்சும், தீர்மானம் நிறைவேற்றப்படுமுன்னரே அவர் நடத்திய வெளிநடப்பும் அல்ல. முதல்வரின் பேச்சு, அவருடைய முதல் ஆதரவாளரான வாழப்பாடியாரையே தூக்கி வாரிப் போடச் செய்து, எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய நிர்பந்தத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது!

ஜனநாயக நாடு இந்தியா என்றால், மதச்சார்பற்ற ஜனநாயகம் இங்கு நிலவுகிறது என்றால், இந்து ராஷ்டிரம் என்பதை விட எம்மதமும் சம்மதம் என்பதில் நம்பிக்கையும் பெருமிதமும் கொள்கிறோம் என்றால், ''ராமர் கோவிலைக் கட்டுங்கள்; ஆனால் மஸ்ஜித்தை இடிக்கும் ஆசையைக் கைவிடுங்கள்'' என்றுதான் நாம் ஒவ்வொருவரும் கூற இயலும். வேறுவிதமாகப் பேசுவது நமது அரசியல் சாசனத்துக்குச் செய்யப்படும் துரோகம் ஆகும்.

எனவே இவ் விஷயத்தில் மத்திய அரசு உறுதியாக இருக்கத்தான் வேண்டும். அதே சமயம் அளவுக்கு மீறிச் செயல்பட்டு கல்யாண்சிங் அரசை 'டிஸ்மிஸ்' செய்வது போன்ற காரியங்களிலும் இறங்கக் கூடாது. ''கோவிலைக் கட்டுவோம்'' என்று கூறிக் கொண்டு பதவிக்கு வந்த அவர்களுக்கு ஆட்சிக் கலைப்பு என்பது கிரீடம் சூட்டியது போல் ஆகி விடும். இதைத்தான் பி.ஜே.பி. ஆவலுடன் எதிர்பார்க்கிறது. அந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் தவறை மத்திய அரசு செய்து விடக் கூடாது.

மாறாக, மதச் சார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைத்து, பி.ஜே.பி. மற்றும் வி.எச்.பி. போன்றவற்றின் வெளிப்படையான மதச்சார்புள்ள கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மக்கள் மன்றத்தில் வலிமையான கருத்து உருவாக்க வேண்டும். இதற்கிடையில் நீதிமன்ற இடைக்கால உத்தரவுகள் அனைத்துக் கட்சிகளாலும் மதிக்கப்பட்டே ஆக வேண்டும். 'இந்த விஷயத்தில் நீதிமன்றம் தேவையில்லை' என்பவர்கள், எந்த விஷயத்திலும் கட்டுப்பட மாட்டார்கள். சட்டத்தின் ஆட்சியை மதிக்காதவர்கள், அராஜகத்துக்கு விதை ஊன்றி நீர் வார்த்தவர்கள் ஆவார்கள்.

சரித்திர அநீதிகள் பற்றி விலாவாரியாகப் பேசுகிறவர்கள், சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய அநீதிகளைத் தாங்களும் செய்து விடாமல் விவேகத்துடன் செயல்பட வேண்டும்.

உங்கள் செல்வம் :

டிசம்பர், கச்சேரி சீசன் மட்டுமல்ல; மூலதன சீசன் என்றும் தோன்றுகிறது! பல முதல்தர கம்பெனிகள் பொது மக்களிடம் முதலீடு கோரி பங்கு மார்க்கெட்டுக்கு வருகின்றன. பின்வரும் நிறுவனங்களில் பங்குகள் பெறும் முயற்சியில் நீங்கள் தாராளமாக இறங்கலாம் :

LAKSHMI TRADE CREDITS LTD

சென்னையில் இந்த நிறுவனத்தைத் தொடங்கி நடத்துபவர் பி. ஜி. சரண்யன். வங்கித் தொழிலில் நல்ல அனுபவம் பெற்றவர். தவணை முறையில் லாரிகள், வேன்கள் போன்ற வாகனங்கள் வாங்கவும், பல நிறுவனங்கள் லீஸிங் முறையில் இயந்திரங்களும் இதர உபகரணங்களும் பெறவும் இந்த நிறுவனம் நிதி வசதி அளித்து உதவி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்தத் துறையில் நிறைய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிறுவனம் தற்போது தனது பணிகளை மேலும் விஸ்தரிக்க இரண்டரைக் கோடி ரூபாய்க்கு ஒவ்வொன்றும் பத்து ரூபாய் பெறுமானமுள்ள பங்குகளை விநியோகிக்க உள்ளது. இத் துறையில் எதிர்காலம் நன்றாக இருப்பதால், பங்குகளின் மதிப்பு கணிசமாக உயரும் என்றும் நல்ல லாபப் பங்கீடு இருக்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது முதலீடு நேரம்!

SHARADA TERRY PRODUCTS LTD

கோவையில் நிறுவப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் தலைவர் கே. கோவிந்தசாமி நாயுடு. கோவைத் தொழில் துறையில் பிரபலமான புள்ளி. கண்ணபிரான் மில்ஸ், கதிரி மில்ஸ் ஆகியவற்றுடன் தொடர்பு உடையவர். 'டெர்ரி டவல்' எனப்படும் புசுபுசு துண்டுகளுக்கு மிக நல்ல ஏற்றுமதி மார்க்கெட் இருக்கிறது. இந்த நிறுவனம் ஏற்றுமதிக்கு மட்டுமே 'டெர்ரி டவல்' உற்பத்தி செய்யப் போகிறது. இரண்டு பிரபலமான மில்களின் பக்கபலத்துடன் இந்த நிறுவனம் நன்கு செயலாற்றி, நல்ல லாபம் காணும் என்று எதிர்பார்க்கலாம். பல கோடி ரூபாய்த் திட்டம் இது. ஏழு கோடி ரூபாய்க்குப் பங்குகளை இந்த நிறுவனத்தை நிர்வகிப்பவர்களே ஏற்கின்றனர். பொது மக்களுக்கு, ஒவ்வொன்றும் ரூ 35 பெறுமானமுள்ள, பகுதியளவில் பங்குகளாக மாற்றப்படக்கூடிய டிபன்சர்கள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு மொத்தம் ரூ 35 கோடிக்குக் கடன் பத்திரங்கள் விநியோகமாக இருக்கின்றன. ஒவ்வொரு ரூ 35 டிபன்சரிலும் ரூ 10, ஒரு பங்காக உடனடியாக மாற்றப்படும். மீதமுள்ள ரூ 25, கடனாகக் கருதப்பட்டு வட்டி பெறும். 6, 7, 8வது ஆண்டுகளில் கடன் திருப்பித் தரப்படும். இந்த டிபன்சர் பத்திரங்களுக்குப் பிரமாத வரவேற்பு எதிர்பார்க்கப்படுகிறது.

TRISTAR SOYA PRODUCTS LTD

பம்பாயில் பிரபலமான மஃபின்லஹா குரூப்பைச் சேர்ந்த நிறுவனம் இது. ஏற்கெனவே நன்கு செயல்பட்டு வரும் இந் நிறுவனம், வனஸ்பதி தயாரிப்பிலும் சோயா உணவுப் பொருள்கள் தயாரிப்பிலும் தனது பணியை விரிவாக்க விரும்புகிறது. சோயா பொருள்களுக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. தேவை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. இவர்களின் புதிய திட்டத்துக்குக் கணிசமான முதலீடு தேவைப்படுவதால் ஏற்கெனவே பங்குதாரர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 12.48 கோடிக்குப் பங்குகளை வழங்குகிறது. ரூ 12.60 கோடிக்குப் பங்குகளைப் பொது மார்க்கெட்டில் விடுகிறது. ஒவ்வொரு பத்து ரூபாய் பங்கையும் ரூ 50 கூடுதல் விலை கொடுத்து ரூ 60க்குத்தான் பெற முடியும். என்றாலும் இந் நிறுவனத்தின் பொருளாதார அடித்தளம் பலமாக இருப்பதையும் இப்போதே இதன் பங்குகள் ரூ 95க்கு விலை பேசப்படுவதையும் கவனிக்க வேண்டும்.

SALEM TEXTILES LTD

உடையாரை அறியாதவர் யார்? பின்னி குரூப் ராமசாமி உடையாரைச் சேர்ந்த நிறுவனம் இது. 16 கவுண்ட் முதல் 100 கவுண்ட் வரை பருத்தி இழைகள் தயாரித்து வருகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இவற்றுக்கு கிராக்கி உள்ளது. மலேசியாவில் ஒரு மலேசிய நிறுவனத்துடன் இணைந்து நூல்களுக்குச் சாயம் ஏற்றும், நெசவு செய்யும் ஆலை உருவாக்கத் திட்டம் இருக்கிறது. விரிவாக்கத் திட்டங்களுக்காக 21 லட்சம் பங்குகளைப் பொது மக்களுக்கு வழங்குகிறது இந்த நிறுவனம். ஒவ்வொரு பத்து ரூபாய் பங்கையும் ரூ 30 கூடுதல் விலை தந்து ரூ 40க்குப் பெற வேண்டும். என்றாலும் இப் பங்குகளின் விலை சீக்கிரமே மேலும் உயரும் என எதிர்பார்க்கலாம்.

– வி. கோபாலன்

தத்வ லோக ஆஸ்ரமம்

ஆன்மீக அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

சமய மற்றும் சமுதாய அறப்பணிகளுக்காக ஏற்படுத்த இருக்கும் தத்வ லோக ஆஸ்ரமம் என்னும் அமைப்பிற்கு ஒரு கட்டிடம் சென்னை அருகாமையில் உள்ள குன்றத்தூர் காட்டரம்பாக்கம் கிராமத்தில் அமைக்க அம்பாள் அருளாசி நல்கியுள்ளார்கள். இவ்வாஸ்ரமத்தை சிவ-சக்தி ஸ்வரூப பத்ம பாதங்களுடன் கூடிய ஸ்ரீபீடம் அலங்கரிக்க இருக்கிறது. ஈசன் அம்பாளுக்கு உபதேசித்தருளிய ராம மந்திரம் இவ்வாஸ்ரமத்தின் ஆணிவேர். பக்தர்கள் ராம மந்திரம் எழுதிய நோட்டுப் புத்தகங்களை ஸ்ரீபீடத்திற்கு யந்திரப் பிரதிஷ்டையாக செய்யவுள்ளோம்.

இத் திருப்பணியைச் செய்ய சுமார் 35 லக்ஷம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆன்மீக அன்பர்கள், பக்த கோடிகள் தங்களால் இயன்றதை நன்கொடையாகக் கொடுத்து அம்பாளின் அனுக்கிரஹத்தைப் பெற வேண்டுகிறோம். நன்கொடைத் தொகைக்கு வருமான வரிவிலக்கு (under 80 G of Income Tax Act) உண்டு.

நன்கொடையை கீழ்க்கண்ட முகவரிக்கு செக், டிராப்ட் அல்லது மணியார்டர் மூலமாக அனுப்பலாம், நேரிலும் கொடுக்கலாம். ஆஸ்ரமத்தைப் பற்றிய மற்ற விவரங்களை ட்ரஸ்டுடன் தொடர்பு கொண்டு அறியலாம்.

தத்வ லோக ஆஸ்ரமம் ட்ரஸ்ட்,
22, கிழக்கு மாட வீதி,
மைலாப்பூர், சென்னை - 600 004.

இட அன்பளிப்பு : Karthi Engineering, Madras - 19

உங்கள் ஜாதக பலனை கேட்டறியுங்கள்

ஜோதிட போன்

வார பலன்கள்

☎ 001 609 936 34 + ☐☐

மேலே கொடுத்துள்ள பதினொரு எண்களையும் டயல் செய்வதுடன் உங்கள் சூரிய ராசிக்கு கொடுத்துள்ள இரண்டு எண்களையும் சேர்த்து டயல் செய்யவும்

51	52	53	54	55	56
மேஷம்	ரிஷபம்	மிதுனம்	கடகம்	சிம்மம்	கன்னி
57	58	59	60	61	62
துலாம்	விருச்சிகம்	தனுசு	மகரம்	கும்பம்	மீனம்

டாரட் பலன்கள்

ஒரு பண்டைய ஆரூட முறை.
உங்கள் குறிப்பிட்ட கேள்விகளுக்கு
பதிலளிக்கிறது.

அழையுங்கள் :

001609 936 3450

பொருத்தம்

நீங்களும் உங்கள் துணையும்
எவ்வாறு ஒத்துப்போக
முடிகிறது?

அழையுங்கள் :

001609 936 3474

இது ஒரு இன்டர்நேஷனல் போன்கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் 30 வினாடிகளுக்கு ரூ. 30 மட்டுமே.
வெளிநாட்டு போன் இணைப்பு அவசியம். Anthem



என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே... வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவிப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "யெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்குள் துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.

"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB."

நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

வெளிநாட்டு மாணவர்களுக்கென விசேஷ வெளிநாட்டு சேவைப் பிரிவும் இயங்கி வருகிறது.

NAGA

பெங்களூர் ரிப்போர்ட் :





● கர்நாடக ரத்னாக்கள் புட்டப்பா, ராஜ்குமார்

பாட்டை மாற்றிய பங்காரப்பா!

கண்ணீர்க் கதைகள்

சென்ற வருடம் காவிரி நீர் டிரிபியூனல் தீர்ப்பு வந்த போது கலவரத்தால் பாதிக்கப் பட்ட தமிழர்கள் சிலர் விசா ரணைக் கமிஷன் முன்பு தங்கள் கண்ணீர்க் கதைகளைச் சொல்லுகிறார்கள். இரவு எட்டு மணிவாக்கில் தன்னு டைய வீடு அடித்து நொறுக் கப்பட்டதை போலீஸில் சொல்லி விட்டுத் திரும்பிய போது ஒரு கூட்டத்தால் வழி மறிக்கப்பட்டு நான்கு பேரால் மாறி மாறிக் கற்பழிக்கப்பட்ட செய்தியைச் சொல்லி சம்பந் தப்பட்ட பெண்மணி கதறிய கதறல் கமிஷனையே சிறிதுநேரம் ஸ்தம் பிக்க வைத்து விட்டது. கமிஷனின் இறுதி அறிக்கையும் அதைத் தொடர்ந்து அரசாங் கம் எடுக்கப் போகும் (அல்லது எடுக்காமல் விடப் போகும்) நடவடிக்கைகளும் கவனிக் கப்பட வேண்டிய விஷயம்.

கர்நாடக ரத்னா

கன்னடத்தில் தற்போது மூத்த தலை முறைக் கவிஞர்களில் ஒருவர் 'குவெம்பு' என்ற புனைபெயர் கொண்ட கே.வி. புட்டப்பா. மைசூரில் வசிக்கிறார். இவர் பெயரால் பல்கலைக் கழகம் ஏற்படுத்தியா யிற்று. அறக்கட்டளைகள் அமைத்தாயிற்று. நகர்கள், பூங்காக்கள், தெருக்கள்... அமைத் தாயிற்று. பத்மஸ்ரீ துவங்கி எல்லாப் பட்டங் களும் வாங்கித் தந்தாயிற்று. 'பாரத ரத்னா'... ஒன்றுதான் பாக்கி. மந்திரி சபை அவசரமாகக் கூடி 'இந்த வருடத்தின் பாரத ரத்னா விருதை குவெம்புவுக்குத்தான் தர வேண்டும்' என்று மத்திய அரசுக்குப் பரிந் துரை செய்தார்கள். பரிந்துரை ஏற்றுக் கொள் ளப்பட மாட்டாது என்று தகவல் கிடைத் ததோ என்னவோ தெரியவில்லை. சில நாட் களுக்குள் மறுபடியும் அவசர அவசரமாய் மந்திரி சபையைக் கூட்டினார் பங்காரப்பா. டெல்லி தராவிட்டால் பரவாயில்லை. அதற்கு இணையான இன்னொரு பட் டத்தை 'ஏற்படுத்தி' குவெம்புவுக்குத் தரு வோம் என்று அறிவித்தார். அதன்படி 'கர்னாடக ரத்னா' - என்ற பட்டத்தை ஏற் படுத்தி குவெம்புவுக்கும் நடிகர் ராஜ்குமா ருக்கும் தரப் போவதாக அறிவித்தார். அதற் குள் பதவி பறிபோய் விட்டது. ஆனாலும் கோர்டேக்கர் முதல்வராக இருந்து கொண்டே இரண்டு நிகழ்ச்சிகளையும் நடத்தி முடித்து விட்டார்.

பங்காரப்பா பாட்டு

கோர் டேக்கர் முதல்வராக பங்கா ரப்பா கலந்து கொண்ட எல்லாப் பொது நிகழ்ச்சிகளிலும் கூச்சல் கூப்பாடு, கல் எறிதல், செருப்பு வீசுதல்... என்று நடந் தேறின. ராஜ்குமாருக்கு கர்நாடக ரத்னா விருது வழங்கும் விழாவும் விதிவிலக்கல்ல. அந்த நிகழ்ச்சியைப் பாட்டுக் கச்சேரி யாகவே மாற்றி விட்டார் பங்காரப்பா. குவெம்புவின் 'ஜெய கன்னடமாத்தே' - பாடலை ஆர்க்கெஸ்டிரா துணையுடன் பங்காரப்பா பாட ஆரம்பிக்க, உட்காரச் சொல்லி கூச்சலும் குழப்பமும் ஆரம்பமாகி விட்டது. தொடர்ந்து கற்களும் செருப்பு களும் பறக்க ஆரம்பிக்க... கோபம் கொண்ட பங்காரப்பா உடனே பாடலை மாற்றினார். இப்போது ராஜ்குமாரின் பாடல் : 'யாரே கூகாடலி ஊரே ஹோராடலீ'... 'யார் கூச்சல் போட்டாலும் சரி; ஊரே எதிர்த்து நின்றா லும் சரி... நான் பயப்பட மாட்டேன்' - ரகப் பாடல். குழப்பமும் எதிர்ப்பும் அதிகமாக, ராஜ்குமார் எழுந்து கையெடுத்துக் கும் பிட்டுக் கூட்டத்தை அமைதிப்படுத்தினார். பின்னர் ராஜ்குமார் தம் பங்குக்குச் சில பாடல்கள் பாடினார்.

- பெர்ணாண்டஸ்

பாலம்

●● 'கம்ப்யூட்டர் சொஸைட்டி ஆஃப் இந்தியா', சென்னையில், Systems Analysis & Design படிக்கிறேன். இவற்றின் பழைய வினாத்தாள்கள், மற்றும் 'ஸிலபஸ்' வைத்திருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டுகிறேன். படித்து விட்டுத் திருப்பித் தந்து விடுகிறேன். Data Base Management Systems பற்றிய உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

- ஆர். கண்ணன்,
3/3, எல். எம். அக்ரஹாரம்,
(முதல் மாடி)
பரமக்குடி - 623 707
ராமநாதபுரம் (மாவ).

●● கல்கி சேகரித்து வருகிறேன். 1971 முதல் 72 வரை பழைய கல்கி இதழ்கள் இருந்தால் கொடுத்து உதவவும். விலைக்கு வாங்கவும் தயார்.

- த. மு. சீனிவாசன்,
44, பெரிய தெரு,
தக்கோலம் - 631 151.



●● நெல்கோ டருன் மூன்று வால்வு ரேடியோ, இரண்டு ஸ்விஸ் கைக் கடிகாரங்கள், ஒரு சிங்கிள் ரீடு ஹார்மோனியம் விலைக்கு உள்ளன. வேண்டுவோர் அணுகவும்.

- ஜி. கிருஷ்ணன்,
17, பஞ்சவர்ண சாமி சன்னதி தெரு,
உறையூர்,
திருச்சி - 620 003.

●● மத்திய அரசில் 35 வருடம் பணியாற்றி ஓய்வு பெற்றவன். சென்னையில் உள்ள நிறுவனங்களின் பங்குகளை 5, 10 அல்லது 20 என Small lot ல் வாங்க விருப்பம். விற்க எண்ணுவோர் தொடர்பு கொள்க.

- எஸ். வி. ரங்கநாதன்,
147, ஏரிக்கரை தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

●● சுஜாதா எழுதிய மீண்டும் ஜீனோ புத்தகம் தேவை. விலை, தபால் செலவு குறிப்பிட்டு எழுதவும்.

- வேல்முருகன்,
Surya Meghava Constructions,
154, 1st Main Road,
A.G.S. Colony, Anand Nagar,
Hebbal, Bangalore - 24.

●● எலக்டிரானிக் ஆர்கனில் (Key Board) கர்நாடக இசை, மெல்லிசை வாசிக்கத் தபால் மூலம் ஸ்வரத்துடன் பாடல்கள் எழுதி அனுப்பப்படும். நேரடி பயிற்சி இல்லை. சுயமுகவரியிட்ட அஞ்சல் உறையுடன் தொடர்பு கொள்க. பயிற்சி இலவசம்.

- ப. ஸ்ரீதரன்,
எலக்ட்ரானிக் ஆர்கனிஸ்ட்,
சேதுபவனம்,
அங்கயற்கண்ணி முதல் தெரு,
ஜீவா நகர், மதுரை 625 011.

●● வடுவூர் துரைசாமி அய்யங்கார் எழுதிய "பூரண சந்திரோதயம்" (4 பாகங்கள்), மதன கல்யாணி ஆகிய நாவல்கள் இருந்தால் விலை விவரத்தோடு உடனே எழுதவும்.

- வி. அனந்தநாராயணன்,
13, பனகல் தெரு,
திருவள்ளூர் - 602 001.

●● இசையைத் தாளத்தோடு கற்பதற்கு உதவும் Metronom என்ற கருவி பழையதோ அல்லது புதிதோ விற்பனைக்கு இருந்தால் விலை விவரம் தெரிவிக்கவும்.

- டி. ராமகிருஷ்ணன்,
5/7, எம்.ஜி.ஆர். பிளாக்,
4வது மெயின் ரோடு,
கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பேற்க இயலாது.)



கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்!

கண் புற உலகத்தைப் பார்க்கிறது,
மனம் கண்ணைப் பார்க்கிறது.
அந்தராத்மா மனத்தைப் பார்க்கிறது,
இது உண்மை; மாற்ற முடியாத உண்மை
மனசாட்சிக்கு ஏற்ப நாங்கள் சுத்தமான
ருசிகரமான இனிப்பு மற்றும் கார
வகைகளைத் தயாரிக்கிறோம்.

இனிப்பு வகைகள்:

1. மங்களூர் போளி
2. தேங்காய் போளி
3. ரஸ மலாய்
4. ஸோன் பப்டி கேக்
5. மாலாடு ரவாலாடு
6. இனிப்பு ஸோமாஸ்
7. முந்திரி கத்லி
8. கடலை உருண்டை
9. பொரிவிளங்காய் உருண்டை
10. தேங்காய் கோவா
11. அதிரசம்
12. வெல்ல சீடை
13. சூரத்காரி
14. கோதுமை ஹல்வா
15. ரஸகுல்லா
16. குங்குமப்பூ லட்டு
17. குங்குமப்பூ பாதம் ஹல்வா
18. குங்குமப்பூ வீட் ஹல்வா
19. ப்ரூட் ஹல்வா
20. சூரியகலா

கார வகைகள்:

1. தட்டை
2. தேன்குழல்
3. கைமுறுக்கு
4. சீடை
5. ஸ்பெஷல் மிக்ஸர்
6. நவரத்ன மிக்ஸர்
7. உருளைக்கிழங்கு சிப்ஸ்
8. வாழைக்காய் சிப்ஸ்
9. வறுபயறு
10. வெஜிடபிள் சமோசா
11. ரயில் கட்டிடம்
12. சீப்புச் சீடை

பொடி வகைகள்:

1. கருவேப்பிலைப் பொடி
2. பருப்புப் பொடி
3. இட்லிப் பொடி
4. சாம்பார்ப் பொடி
5. ரசப் பொடி
6. ஊறுகாய் மிளகாய்ப் பொடி

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய் அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு.
சென்னை - 600 020 போன் : 412557


Ad-Ventures

அட, அப்படியா!

1300 பூமிகள் ஒன்று சேர்ந்தால்...

!! வியாழன் கிரகமே நமது சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய கிரகம். 1300 பூமிகள் ஒன்று சேர்ந்தால் வியாழன் கிரகத்தின் ஒரு பாதியை மட்டும் நிரப்ப லாம்.

!! சுமார் 50,000 ஆண்டுகளாக மனித இனம் வாழ்ந்து வருகிறது. ஒரு ஆயுட்காலம் என்பது சுமார் 65-70 ஆண்டுகள் என வைத்துக் கொண்டால், சுமார் 800 ஆயுட் காலங்களை பூமியில் கழித்துள்ளது மனித இனம். இவற் றுள் 650 ஆயுட் காலங்களுக்கு குகைவாசி களாக மனித இனம் இருந்தது. நமது வாழ்க்கைக்கு இன்று உபயோகிக்கப்படும் சொகுசு சாதனங்கள், விஞ்ஞான, தொழில் நுட்பக் கருவி கள், சௌகரியங் கள், யாவுமே கடந்த ஐந்து முதல் ஏழு ஆயுட் காலங் களுள் கண்டு பிடிக்கப்பட் டவைதான்.





!! கறை யான்கள் பெரிய குடியிருப்பு களில் வாழ்கின் றன. தங்கள் வேலையைப் பகிர்ந்து கொள்கின்றன. சில சமயம் ஒரு கறையான் குடியிருப்புக்கும் வேறு பூச்சிகளுக்கும் இடையே யுத்தம் நேரும் போது, சிப்பாய் கறையான்கள் மட்டுமே சண்டையிடுகின்றன. இவை தலைப் பகுதியிலுள்ள துப்பாக்கிக் குழல் போன்ற உறுப்பிலிருந்து ஒருவித திரவத்தை, எதிரியை நோக்கிப் பீய்ச்சியடித்து விரட்டி விடுகின்றன.

!! ஒரு மணி நேரத்தை அறுபது நிமி டங்களாகவும் ஒரு நிமிடத்தை அறுபது வினாடிகளாகவும் கொண்டதாக அமைத்த தற்குக் காரணம், 5000 ஆண்டுகளுக்கு முன் சுமேரியர்கள் அறுபதை அடிப்படையாகக் கொண்ட கணித முறையை வகுத்துப் பின் பற்றியதுதான்.

!! நாம் பயன்படுத்தும் எண்களை 'அரபிக் நியூமரல்ஸ்' என்கிறோம். உண்மை யில் இவை அரேபியர்களால் உருவாக்கப் பட்டவை அல்ல - இந்திய கணித மேதைகள் வடிவமைத்தவையே. ஆனால் ஐரோப்பி யர்களுக்கு இதை அறிமுகப்படுத்தியவர்கள் அராபியர்கள்தான்.

!! முதன் முதலில் எவரெஸ்ட் சிகரத் தில் ஏறியவர்கள் எட்மண்ட் ஹிலரியும் டென்ஸிங் நார்கேயும் மட்டுமே. ஆனால் இந்தச் சாதனைக்குப் பன்னிரண்டு உதவி யாளர்கள், 40 ஷெர்பா வழிகாட்டிகள், 700 சுமை தூக்கும் கூலிகள் என ஒரு பட்டாளமே துணை நின்றது.

!! பெர்லி னில் உணவு இன்றித் தவித்த ஏழைமக்களுக்கு உதவ, 1930ல் ஆல்பர்ட் ஐன்ஸ் டீன் தமது ஆட்டோகிராபை மூன்று டாலருக்கும் கை யெழுத்து இட்ட புகைப் படத்தை ஐந்து டாலருக் கும் விற்பனை செய்தார். இவ்வாறு சேர்ந்த தொகையை ஏழை மக்க ளின் துயர் தீர்க்க நன்கொடையாக அளித் தார்.

!! மனித உடலில் 60,000 மைல் நீளத்துக்கு ரத்த நாளங்கள் உள்ளன. அவற் றுள் பல, ரோமத்தைக் காட்டிலும் மெலிதா னவை.

!! சஹாரா பாலைவனம் தெற்குத் திசையில் விஸ்தரித்துக் கொண்டே வரு கிறது. ஒரு காலத்தில் இங்கு நிறைய தண்ணீர் இருந்ததற்கான ஆதாரத்தை, அகழ் வாராய்ச்சியில் கிடைத்த சரித்திர காலத் துக்கு முந்தைய சித்திரங்களில் காண முடி கிறது.

தொகுப்பு : உதய்லால்



''ஊரார் உடல்நலன் காக்க
ஊக்கமுடன் பணிபுரியும்
டாக்டரம்மா!
'சிறந்த சேவை' உங்களுக்கு
மட்டும் சொந்தமல்ல –
சிட்டி யூனியன் வங்கிக்கும் தான்!''

சீரிய சேவையுடன் சிறந்த சேமிப்புத் திட்டங்களை அளிக்கிறது சிட்டி யூனியன் வங்கி.

உங்கள் தேவைக்கேற்ற சேமிப்புத் திட்டங்கள்:

- சேமிப்புக் கணக்கு
- மாதாந்திர சேமிப்புத் திட்டம்
- ரொக்கப் பத்திரங்கள் (கூட்டு வட்டி விகிதம்)
- வாமன விஸ்வரூபா டெபாஸிட் (கூட்டு வட்டி விகிதம்)
- பிக்ஸட் டெபாஸிட்
- அயல்நாட்டில் வசிக்கும் இந்தியருக்கான சேமிப்புத் திட்டங்கள்
- CUB ஸ்டாக்இன்வெஸ்ட்

MCS/CUB/777/3

CUB

சிட்டி யூனியன் பாங்க் லிட்.,
(அன்னியச் செலாவணி அங்கீகாரம் பெற்ற வங்கி)
பதிவு அலுவலகம்: கும்பகோணம் 612 001.

சிட்டி யூனியன் பாங்க்:
வளர்ச்சிக்கு - உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும் வங்கி!

முற்றுகை

19

பள்ளி மைதானத்துக்குள் நுழைந்தான் பழநி. நானூறு ஐநூறு பேருக்குள் கூட்டம். ஆசிரியர்கள், உத்யோகஸ்தர்கள், தொழிலாளர்கள், கொஞ்சமாய்ப் பெண்கள்.

மேடை ரொம்ப எளிமையாக இருந்தது. ஒரே ஒரு பேனர் மட்டும். அதிலும் பாரதியின் படம். கவிதையைப் போல ஓவியம். கருங்கச் சொல்லி கருக்கென உணர்த்துகிற ஓவியம். புருவங்களும், மீசையும் மட்டுமே வரையப்பட்டிருந்தது. பார்க்கிற யாருக்கும் பாரதியை உணர்த்தும்.

துவக்கவுரை நிகழ்ந்து கொண்டிருந்தது. நுழைந்த பழநியை விஷ் பண்ணுகிற பாவனை மூலமாகவே வரவேற்றனர், புன்சிரிப்புடன்.

மேடையில் உட்கார்ந்தான். எதிரில் பார்த்தால், சில கல்லூரிப் பேராசிரியர்கள் கூட உட்கார்ந்திருப்பது தெரிகிறது. இவனுள் மீண்டும் பதற்றம். மனத் தாழ்ச்சி. உள் நடுக்கம். குப்பென்று உடலெங்கும் வியர்வை.

''இப்போது... சிமெண்டாலைத் தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் பழநி அவர்கள் நமது விழாவை வாழ்த்திப் பேசுவார்.''

சம்பிரதாயமான கைத்தட்டல் சப்தம். கூச்சத்துடன் எழுந்தான். ''வந்தவுடனா?'' என்று வியப்பில் முணுமுணுத்தான்.

மைக்கின் முன் நின்றான். நெஞ்சு படபடத்தது. ஆவல் தேங்கிய முகங்கள், எதிரில். பார்த்தான். பார்வையில் எதுவும் படாதது போன்ற ஒரு பிரமை.

நா வறண்டு போன மாதிரியிருக்கிறது. நெஞ்சுக்குள் எங்கோ போய் ஒளிந்து கொண்ட வார்த்தைகள். நாவுக்குத் தட்டுப்படாமல் ஓடி மறைகிற வார்த்தைகள்.

'பாரதி... நீ எனக்குள் வேர் பாய்ச்சியிருக்கிறாய். உனது ஆன்மா என்னுள் கலந்திருக்கிறது. நான் யாருக்காகப் பேச? எனக்காகவே பேசுகிறேன். என்னையே பேசுகிறேன்.'

சபை வணக்கத்தைச் சுருக்கமாய் முடித்துக் கொண்டு விஷயத்திற்குள் வரும் போது... கண்கள் நிறைந்திருக்க இருண்டு போயிற்று. கண்கள் முழுவதும் மனசுக்குள்...

''அறிவு ஜீவிகள். பண்டிதர்களின் அரண்மனை விஷயமாக மட்டும் கோபுர உச்சியில் இருந்த இலக்கியத்தைப் பாடுபடும் மக்களுக்கும் வீதிக்கும் நெருக்கமாகக் கொண்டு வந்து கௌரவித்திருக்கிற முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர்களே! மானுட மகிமையைப் பாடுகிற இலக்கியங்களை எளிமையான மொழியில், கூர்மையான பார்வையில், அழகுச் செழுமையோடு ஆக்கித் தருகிற படைப்பாளிகளே!

பாரதி விழாவுக்கும், தொழிற்சங்கத்துக் காரனுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கருதுவீர்களோ... எனக்குத் தெரியாது. வாழ்த்துரை வழங்க வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றி.

நான் பாரதியை உள்ளன்போடு நேசிக்கிறவன். பள்ளி நாட்களில் பாரதியின் பாடலால் கவரப்பட்ட நான், அப்புறம் பாரதியின் முழுமையையும், ஆழத்தையும் உள் வாங்கிக் கொண்டு நேசிக்கிறவன்.

பொட்டு வைத்திருந்தாலும் புரட்சிக் காரனாகவே வாழ்ந்த பாரதியை ஒரு தொழிலாளி நேசிக்காமலிருக்க முடியாது; கூடாது.


பஞ்சமன் - வினைவலன் - ஏவலன் - இப்படித்தான் தமிழ் இலக்கியம் உழைப்



பாளிக்குப் பெயரிட்டு உச்சரித்து வந்திருக்கிறது. பாரதி தான் முதன் முதலாய்... 'பிரம்ம தேவன் கலையிங்கு நீரே'' என்று பெருமைமிக்க பெயரிட்டு, மரியாதையோடு உச்சரித்தவன். உழைப்பை ஆராதித்தவன். சக்தியை பூஜித்தவன், உழைப்புச் சுரண்டலை அடி மனசு வரை அடியோடு வெறுத்தவன்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யச் சொன்னான். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்யும்படி தீர்ப்பு எழுதியவன்.

மேலாண்மை பொன்னுச்சாமி



இப்படிப்பட்ட பாரதியை - மகா கவியை - மாமனிதனை - உழைப்புச் சுரண்டலுக்கெதிராகக் கிளர்ந்தெழுகிற ஒவ்வொரு தொழிலாளியும் நேசிக்காமல் இருக்க முடியுமா? மனத்தில் வைத்து பூஜிக்காமல் இருக்கலாமா?

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டாள், பாரததேவி. நாற்பத்தி நாலு வருஷங்களாகப் பாரத மக்கள் ஆனந்தப்பட்டு, பள்ளுப் பாடி ஆடி முடித்து விட்டனர். இன்னும் பாரதியின் சமுதாயக் கனவுகள் முழுவதும் கவிதைகளில் மட்டும் தூங்கிக் கிடக்கின்றனவே... இது என்ன கொடுமை? இது ஒரு வரலாற்றுப் பரிதாபமல்லவா?

பாரதியை மகாகவியென்று முகம் காட்டி வரவேற்கிற பாரத நாடு, அவன் கனவுகளுக்கு மட்டும் முதுகைக் காட்டிக் கொண்டிருப்பது, என்ன நியாயம்?

நம் கிராமத்து உழவுச் சாதி வந்தனை செய்யப்படுகிறதா? வஞ்சகம் செய்யப்படுகிறதா? உழுதுண்டு உலகைக் காக்கிற அந்த உழவு மக்கள், சகலரையும் தொழுதுண்டு இழிவுபடவில்லையா? உழவுத் தொழில் ஒரு தொழில் என்று இன்னும் அங்கீகரிக்கப்படவில்லையே, ஏன்? தொழிலுக்குரிய சலுகை எதுவும் வழங்கப்படவில்லையே, ஏன்? இன்றைக்கு நாட்டிலேயே நஷ்டமான - கஷ்டமான - அவலத்திற்குரிய தொழில், உழவுத் தொழில்தான்.

நஷ்டங்களால் நொறுங்கிப் போன உழவுத் தொழிலை நம்பி இனி வாழ முடியாது என்ற நிலையில்... கிராமத்து மனிதக் கொழுந்துகள், சின்னஞ்சிறு அரும்புகள் தீப்பெட்டியாலைகளை நோக்கி அகதிகளைப் போல படையெடுப்பதை நாம் காணவில்லையா?

பட்டங்கள் பெறவும், சட்டங்கள் செய்யவும் முன்வர வேண்டிய கிராமத்துப் பெண்கள்... தீப்பெட்டிப் பசை ஒட்டி வாழ்க்கையை நகர்த்துகிற இருண்ட நிஜத்தை எவரேனும் மறுத்திட முடியுமா...?

பாரதியின் கனவுகள் காயம் பட்டுக் கதறுகிற சப்தம் கேட்கவில்லையா?

பிஜித் தீவுகளின் கரும்புத் தோட்டங்களில் இந்தியப் பெண்கள் கொத்தடிமைகளாக உழைப்பதைப் பார்த்து மனங்கொதித்துப் பாடினானே, பாரதி! அவன் இன்று உயிரோடு இருந்து... கந்தகக் கிடங்குகளில் மனித அரும்புகள் சிறைப்பட்டு வெந்து கிடக்கிற அவலத்தைப் பார்த்தால்... மனித நேயமில்லாத இந்தத் தேசத்தையே தீக்கிரையாக்கும்படி தீர்ப்பு எழுத மாட்டானா?

பாரதியின் கனவுகளைக் காலில் போட்டு மிதிக்கிறோம்.

'செப்பு மொழி பதினெட்டுடையாள், சிந்தை ஒன்றுடையாள்...' என்று பாரதி, ஆரோக்கியமான பாரத தேவியை அலங்காரமாய்க் கற்பனை செய்தானே...

இன்று இந்தியாவின் பல மாநிலங்களில் பிரிவினைக் கோஷங்கள். ஒவ்வொரு மாநிலமும் 'செப்பு மொழி ஒன்றோடும், சிந்தை பதினெட்டோடும்' அலங்கோலமாய்த் தலைவிரித்துக் கிடக்கவில்லையா?

வீரர்கள் நிறைந்த பஞ்சாப் மண்ணில் இந்தியனே இந்தியனைச் சுட்டுக் கொல்கிற பரிதாபக் காட்சிகள்.

இந்தியாவின் தலைப் பகுதியான காஷ்மீரச் சுவர்களில்... இந்தியாவுக்கு எதிரான கோஷங்கள்.

திரும்புகிற திசையெல்லாம் சாதிச் சண்டைகள். மனிதனை மனிதன் மனிதத் தன்மையில்லாமல் வேட்டையாடுகிற மதச் சண்டைகள்.

பாரத தேவியின் அங்கங்களைக் கூறு போட்டுக் கூவி விற்கிற ஆபத்தான - கொலைகாரப் பிரிவினை இயக்கங்கள்...

பாரதியின் கனவுகள் ரத்தம் சிந்துகிற கொடுமையல்லவா... இது?

வீணில் உண்டுகளித்திருப்போரின் கைகளில் இந்தியச் செல்வங்கள் ஒப்படைக்கப்பட்டு... சுதேசிப் பணக்காரர்களின் காலடியில் சுதேசி இந்தியர்கள் அடிமைகளாகக் கிடக்கிற இன்றைய நிஜம், பாரதியின் கனவுகளுக்குக் கிடைத்த கௌரவமா? இழிவா?

பாரதி! தமிழின் மீசையை முறுக்கி நிமிர்த்திய மகாகவியே! தேசியக் கவியே! எங்கள் நேசக் கனவே!

நடந்து போன நாட்களை மன்னித்துவிடு. இனி நடக்கிற நாட்கள் உனது நாட்களாக இருக்கும்.

உன்னையும் உன் கனவுகளையும் சுவீகரித்துக் கொள்ள இதோ... நாங்கள் வருகிறோம். உழைப்பாளிப் படைகளாக வருகிறோம்.

முப்பது கோடி மக்களுக்குப் பொதுவுடமை கேட்டவனே... நாங்கள் எண்பது கோடி மக்களுக்குக் கேட்கிறோம்...

நீ சொன்ன மாதிரி நாங்கள் பிரம்ம தேவர்கள்தான். ஆலைகளில் சிமெண்டை உற்பத்தி செய்கிற பிரம்மாக்கள் மட்டுமல்ல... உன் கனவுப் பாரதத்தை நனவுப் பாரதமாகப் படைக்கப் போகிற பிரம்மாக்கள், நாங்கள்.

இனி நாங்கள், எங்கள் தோள்களில் உனது கனவுகளைச் சுமப்போம். இனி நாங்கள் உனது கைகள். கால்கள். உனது ஆன்மா. உன் விருப்பங்களுக்கு உயிர் வடிவம் தருகிற உனது ஆற்றல், நாங்கள். உன் கனவுகள் நடப்புகளாகும். மகத்துவம் பெறும்.

அந்தக் காலம் தூரத்தில் இல்லை என்பதை உரத்து முழக்குகிற இந்த விழாவை நெஞ்சார வாழ்த்தி நன்றியுடன் முடிக்கிறேன்... வணக்கம்.''

பழநி உட்கார்ந்தான். அவன் சட்டை முழுவதும் வியர்வையில் 'தொப்பலாக நனைந்து கிடந்தது. நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைத்துக் கொண்ட மாதிரி ஓர் உணர்வு.

கைத் தட்டல் சத்தம் சற்று நீளமாய் நீடிக்கிறது. அவன் உயிரோடிருப்பதை மெல்ல மெல்ல உணர்கிறான். விறைத்துக் கிடந்த நரம்புகள் மெல்ல மெல்ல... தளர்ந்து தன்



'' 'என்னமோ நடக்குது' படத்தை எடுத்த டைரக்டர் அடுத்து என்ன படம் எடுக்கப் போறாராம்?''

''என்னமோ தெரியலை!''

- எஸ். நாரம்புநாதன்

விலைக்கு வருகின்றன.

அவனுள் ஒரு பரவசம்... நெஞ்சுக்குள் வந்து உறைந்து கிடந்த உயிர், நரம்புகள் வழியே உடலெங்கும் பரவுகிறதை உணர்கிற பரவசம்.

இன்னும் கண்களுக்குள் மிச்சமாய் இருட்டு. கலர் கலராய் மிதக்கிற ரேகைகள். நாக்கில் எச்சிலே இல்லை. கட்டியாகி விட்டது. இன்பத்தின் உச்சியிலிருந்து சரிகிற இன்பப் பரவசம்...

''இது... வாழ்த்துரையில்லே... சிறப்புரையே இதுதான்!''

பக்கத்தில் இருந்தவர் பாராட்டினார். சோடாவை உடைத்து, பாராட்டுகிற மரியாதையோடு நீட்டினார். நன்றியோடு வாங்கிக் கொண்டான்.

மனசுக்குள் ஒரு வெற்றிப் பெருமித உணர்ச்சி.

சோடாவை உடைத்துக் கொடுத்துப் பாராட்டியவர்தான், சிறப்புப் பேச்சாளர். அசாதாரண வளர்த்தி.

வளர்த்தியை அதிகப்படுத்திக் காட்டுகிற ஜிப்பா. பேண்ட். சிங்கம் போல அடர்த்தியான முடி. கொத்து மீசை. ஞானச் செழுமையும், குழந்தைத் தன்மையும் முரண்பட்டுக் கலந்து கிடக்கும் முகம். மனசுக்குள் இறங்கிப் பேசுகிற கண்கள்.

அவர் பேச்சைக் கேட்டிருக்கிறான், பழநி. மணிக்கணக்கில் பேசுவார். தோற்றத்தைப் போலவே உயர்ந்த நடையில் - கவிதைப் பாங்கில் - உணர்ச்சிப்பெருக்கில் பேசுவார்.

அவரே... வியந்து பாராட்டுகிறார் என்றால்...

நன்றாகத்தான் பேசி விட்டேனா? அப்படி என்ன பேசினேன்? ஒன்றும் ஞாபகத்தில் இல்லை.

சோடா கருகருவென்று உள்ளிறங்க... உடலில் ஈரப்பதம் பரவ... கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். உடலெங்கும் வியர்வை நசநசப்பு.

நெஞ்சுப் பட்டனைக் கழற்றி, காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். இன்னும் கண்களில் ஒரு நெறுநெறுப்பு. மண் துகள் விழுந்த மாதிரி...

அரங்கில் அமர்ந்திருக்கிற எல்லாக் கண்களும் இவனை நோக்க... அந்தக் கண்களில் ஒவ்வொரு பாராட்டுப் பத்திரம்...

இந்தப் பேச்சை சொர்ணம் கேட்டிருக்க வேண்டும். கேட்டிருந்தால்... என்ன நினைப்பாள்?

நம்ம முனியசாமி பேரனா... இப்படி? என்று பிரமித்திருப்பாள். ரசித்திருப்பாள். லயித்திருப்பாள்...

அவனுள் சொர்ணம். மாய உலகம்... யதார்த்தவாதிகளையும் காலை வாரி விட்டு விடுகிற கனவுலகம்...

(தொடரும்)

மங்கையர் மலர்

டிசம்பர் '92

◆ சும்மாயிருக்கும் போது...
- செய்யும் உடற்பயிற்சிகள்

◆ கார்த்திகை விளக்கு - திருக்கார்த்திகை விளக்கு

◆ யோகி ராம்சூரத்குமார்




- ஆன்மீகக் கட்டுரை

◆ அவசர யுகத்தில் அவதிக்குள்ளாகும் முதியோர்கள்



மாறிடுமோ மனம்?



ஸ்ரீதரின் கையில் அன்று தபாலில் வந்த கடிதம் ஃபேன் காற்றில் படபடத்தது.

குழப்பமாய் அதை வெறித்தவாறு அமர்ந்திருந்தான்.

''ஸ்ரீதர், காப்பி இந்தாடா'' என்று தம்ளரை நீட்டிய அம்மாவை ஏறிட்டான்.

''என்னடா யோசிக்கறே? இதோ பாரு. உனக்கும் முப்பத்திரண்டு வயசாச்சு. எனக்கும் ஒன்றும் இதுல ஆட்சேபணை இல்லை'' என்று சொல்லி விட்டு தரையில் காலை நீட்டி அமர்ந்தாள் பார்வதி.

'....என் ஒரே பெண் லக்ஷ்மியை தங்கள் மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறோம். உங்களின் மூத்த மகள் மூலம் ஜாதகம் கிடைத்துப் பொருத்தமும் பார்த்து விட்டோம். நன்கு பொருந்தி உள்ளது. உங்கள் சௌகரியமான தேதியைச் சொன்னால் பெண் பார்க்க...'

கடிதத்தின் வரிகளில் அவன் பார்வை ஓடியது.

முகமறியாத அந்தப் பெண்ணைப் பற்றி அவனுள் கற்பனை ஓடியது.

உயரம் ஐந்தடி ஏழு அங்குலம். சிவப்பு நிறம் என்று கடிதத்தில் எழுதியிருந்ததை வைத்து ஓர் உருவத்தை உருவாக்க முயற்சி செய்தான்.

உடனே அவன் கண் முன் தங்கையின் முகம் தோன்றியது.

''ராகவி எங்கேம்மா''

''கோயிலுக்குப் போயிருக்கா. வியாழக்கிழமை அன்னிக்கு தட்சிணாமூர்த்திக்கு ஒன்பது வாரம் அர்ச்சனை பண்ணினால் சீக்கிரம் கல்யாணம் தகைஞ்சு வரும்னு எதிர் வீட்டுக்குப் புதுசா குடி வந்திருக்கற மாமி சொன்னாங்க. அதனால...''

பாவம் ராகவி! ப்ச், எத்தனை விரதம், எவ்வளவு அர்ச்சனை... ஆனால் மாப்பிள்ளையைத்தான் காணோம்.

அவளுக்கும்தான் என்ன குறை...? நிறம் கறுப்பு, சற்று உயரம் அதிகம். இது



வரை எத்தனை பெண் பார்க்கும் படலங்கள் முடிந்திருக்கும்!? ஒரு முப்பது இருக்குமா? ஒரு பையனுக்குக் கூடவா மனசுக்குப் பிடிக்காமல் போய் விட்டது. வயதும் இருபத்தெட்டு ஆகி விட்டது. வரும் மாப்பிள்ளை சீக்கிரம் வந்து தொலைத்தால் என்ன? ஒரு வேளை அவனும் என்னைப் போல தங்கையின் திருமணம் முடியக் காத்திருக்கிறானோ?

''அம்மா, கொஞ்சம் வெளியிலே போயிட்டு வரேன்'' என்று கிளம்பினான்.

நேராக அக்காள் வீட்டுக்குப் புறப்பட்டான். அரைமணி நேர டவுன் பஸ் பயணம்.

''வாடா, என்ன விசேஷம்?'' என்று வரவேற்றாள் அக்கா. கையில் இட்லி மாவுப் பாத்திரம். கிரைண்டரிலிருந்து மாவை எடுத்துக் கொண்டிருந்தாள்.

கடிதத்தைக் காண்பித்தான் ஸ்ரீதர்.

''இதோ பாரு ஸ்ரீதரா, ராகவி கல்யாணம் நடக்கிறப்ப நடக்கட்டும். நீயும் ஆறு வருஷமா பார்க்கிறாய். கடவுள் கண்ணைத் திறக்கலே. ஒருவேளை, உன் திருமணம் முடிஞ்சப்புறம்தான் அவளுக்கு பிராப்தம் இருக்கோ, என்னவோ?'' என்றவளைத் தயக்கம் விலகாமல் பார்த்தான்.

''இங்கே பாரு, நல்ல இடம் இது. என் வீட்டுக்காரரோட தூரத்துச் சொந்தம்தான். போன மாசம் மதுரையிலே ஒரு கல்யாணத்துக்கு நீ கூட வந்திருந்தியே. இந்தப் பெண்ணும் வந்திருந்தாள்.''

அவனுக்குள் ஒரு சின்ன பரபரப்பு.

''யாருக்கா?''

கிரைண்டருக்குள் வாளியிலிருந்த தண்ணீரை விட்டு அலம்பினாள் பொறுமையாய்.

''அக்கா...''

''பறக்காதேடா. நேன் கலரில் ஒரு புடைவை கட்டிக்கிட்டு என் கூடவே வளைய வந்தாளே, ஞாபகம் இல்லை?''

ஸ்ரீதருக்குள் பல்பு எரிந்தது.

அவளா...? குழந்தைத்தனமான முகம். சிரிக்கும் கண்கள்.

அவனுக்குள் இதுவரை இருந்த அடைப்பு இளகத் தொடங்கியது.

''உனக்குப் பொருத்தமா யிருப்பாடா. உன் உயரத்துக்குத் தகுந்த வளர்த்தி. பிக்கல், பிடுங்கல் இல்லை. வங்கியில் வேலை. பி.காம். படிச்சிருக்கா. ரொம்ப யோசிக்காதே. அம்மா என்ன சொன்னாங்க?''

''ஒண்ணும் சொல்லலே.''

''அப்புறம் என்ன? நான் நாளைக்கே அவங்களுக்கு போனில் விஷயத்தைச் சொல்லிடவா?''

கிருஷ்ணா

அக்கா டெலிபோன் எக்சேஞ்சில் வேலை செய்கிறாள்.

''வர்ற ஞாயிற்றுக்கிழமை பெண் பார்க்க வரோம்னு சொல்லிடலாம். சும்மா ஃபார்மாலிடிதானே இதெல்லாம்'' என்றவளை மனதில் அரும்பத் தொடங்கிய திருமண ஆசையுடன் பார்த்தான்.

''ராகவி இருக்கும் போது எனக்கு எப்படிக்கா? ஊரில் யாராவது பேச மாட்டாங்களா? அதோட என் கல்யாணத்துக்கும் செலவாகுமே. அப்புறம் தங்கச்சிக்கு உடனே இடம் அமைஞ்சதுன்னா கஷ்டமாயிடுமே.''

''ஊரு கிடக்குது விடு. இதோ பாரு, அவளும் வேலை பார்க்கிறாள். நீயும் சம்பாதிக்கறே. அப்புறம் எப்படி பணத்தட்டுப்பாடு வரும்?'' என்றவளின் சமாதானம் ஒப்புக் கொள்ளத்தக்கதாய் இருந்தது.

''அம்மாவிடம் கேட்டுட்டு நாளைக்குச் சொல்றேன்'' என்று விடைபெற்றான்.

இரவு முழுதும் சரியான தூக்கமில்லை. கனவில் மாலையுடன் ஒரு பெண் வருவதும், போவதுமாய்க் கண்ணாமூச்சி ஆடினாள். நனவில் இவன் முடிவெடுக்க முடியாமல் தடுமாறினான்.

காலையில் அண்ணனும், அண்ணியும் ஊரிலிருந்து வந்தார்கள்.

விஷயத்தை அம்மா சொன்னதும் அண்ணன் தலையாட்டினான்.

''முடிச்சுடலாம்தான். என்ன சொல்றே?'' என்று மனைவியைப் பார்த்தான்.

''நல்ல காரியம். நான் குறுக்கவா நிற்கப் போறேன். ஆனால் ஸ்ரீதருக்குக் கல்யாணமாகி குடும்பஸ்தன் ஆயிட்டான்னா அவன் சம்பாத்தியம் அவன் குடும்பச் செலவுக்கே சரியாயிடும். நாளைக்கு ராகவி கல்யாணத்தை எப்படி சமாளிப்பான்?'' என்றவளை ஸ்ரீதர் உற்றுப் பார்த்தான்.

''எங்களால் எந்த உதவியும் செய்ய முடியாது'' என்று நாசூக்காய்ப் பொறுப்பை இளையவன் மீது சுமத்தும் மூத்த மருமகளையும் வாய்மூடி மௌனியாய் நிற்கும் மகனையும் பார்த்த பார்வதிக்கு நெருடியது.

இதே மகன் திருமணத்திற்கு முன்பு எப்படி 'அம்மா அம்மா' என்று உருகுவான்! இப்போது?

கடமைக்காக வந்து தன்னைப் பார்ப்பதும் வெறும் உபசாரத்துக்காக 'ரெண்டு நாள் வந்து எங்களோட தங்கிட்டு வாயேம்மா...' என்று அழைப்பதும்... ஏன் இந்த மாற்றம்?

தன் குடும்பம் என்ற வட்டத்துக்குள் சிக்கிக் கொண்ட சுயநலமா? இந்தச் சுயநலம் ஸ்ரீதருக்கும் வந்து விட்டால் ராகவியின் கதி? அவள் இப்படியே தனிமரமாகவே நிற்க வேண்டி வந்து விடுமோ?

மூத்த மகனும் மருமகளும் இல்லாத சமயம் பார்த்து ஸ்ரீதரிடம் தனது சந்தேகங்களைத் தயங்கித் தயங்கி வெளியிட்டாள் பார்வதி.

''ஸ்ரீதர் இன்னும் ஒரு வருஷம் உன் கல்யாணத்தை ஒத்திப் போடக் கூடாதா? அதுக்குள்ள எப்படியாவது ராகவியின் கல்யாணம் முடிஞ்சுடும்னு எனக்கு எதனாலோ தோணுது...''

''அம்மா! நானும் அண்ணனைப் போல் மனைவியின் பின்னால் ஒளிந்து கொண்டு உறவுகளை மறந்து விடுவேன் என்று பயப்படுகிறாயா? இப்படியொரு சந்தேகம் உனக்கு மட்டுமல்ல; வேறு யாருக்கும் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திருமணத்தை முதலில் வேண்டாமென்று சொன்னேன். பிறகு, உன்னுடைய பூரண சம்மதமும், தங்கையை எந்த நேரத்திலும் மறந்து விட மாட்டேன் என்கிற எனது உறுதியான நம்பிக்கையும்தான் இந்தத் திருமணத்திற்கு என்னைச் சம்மதிக்க வைத்தன. இப்போதும் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை.... உனது சந்தேகம் தீரவில்லையென்றால் இந்த நிமிஷமே அந்த மதுரைப் பெண்ணைப் பற்றிய நினைவுகளை மறந்து விடத் தயாராய் இருக்கிறேன்...!'' என்று சொன்ன மகனைப் பெருமிதத்துடன் பார்த்த பார்வதி, ''உடனே உன் அக்கா வீட்டுக்குப் போய், வர்ற ஞாயிற்றுக் கிழமையே பெண் பார்க்க வருவதாக டெலிபோனில் சொல்லச் சொல்!'' என்றாள்.



''படம் பார்க்கிற விநியோகஸ்தர் களுக்குப் படத்தில் ஈடுபாடு ஏற்பட்டாத் தான் பணம் கிடைக்கும்கிறது உண்மை தான். அதுக்காக 'ரஷ்' போட்டுப் பார்க்கிறப்ப டைரக்டர், தயாரிப்பாளர் எல்லோரும் விசில் அடிக்கிறது கொஞ்சம்கூட நல்லாயில்லே!''

- காழி சாமா

அன்புள்ள
அருண் கண்மணி,



எத்தனை அழகான கதை எழுதியிருக்கே! சூரியனையும் வானத்தையும் தென்னை மரத்தையும் பார்க்கும் போதெல்லாம் மப்பட்டு ஞாபகம் தான் வருது. அப்பா கொஞ்சம் 'ஹெல்ப்' பண்ணினாலும் கற்பனை உன்னுடையதுதானே...!

கற்பனை சக்தியைக் கடவுள் நமக்குத் தந்திருக்கா விட்டால் உலகமே ரொம்ப bore ஆக இருக்கும். படிக்கக் கதைகளே இருக்காது; பார்க்கப் படங்களே இருக்காது; கேட்கறதுக்குப் பாட்டே இருக்காது.

கற்பனை எங்கேயிருந்து வருது தெரியுமா... நம்ம மனசுக்குள்ளேயிருந்துதான் - அதை வரவழைக்கற சக்தி நம்ம மூளைக்குத்தான் இருக்கு. உன்னுடைய சயன்ஸ் கிளாஸிலே மூளையைப் பத்திப் பாடம் நடத்தினாங்களோ...? அப்போ மூளையோட வரைபடம் பார்த்திருப்பே... மூளைதான் நாம் செய்யும் எல்லாத்தையும் கட்டுப்படுத்தற Control room. நம் மூளையின் வலது பக்கம் நம்ம சிந்தனையை - அதாவது யோசிக்கற சக்தியைக் கொடுக்கறது. அதே மூளையினுடைய இடது பக்கம் நம்ம கற்பனைக்கு நிறைய help பண்ணுது. இந்த இரண்டும் சரியான அளவுல சேரும் போது மனிதர்கள் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்யறாங்க!

உதாரணமா நீராவி இஞ்சினைக் கண்டுபிடிச்ச ஜேம்ஸ்வாட்டை எடுத்துக்கோ... அடுப்பில் வைச்ச பாத்திரத்தில் தண்ணி கொதிச்ச போது ஆவி கிளம்பிப் பாத்திரத்தின் மூடியைத் தள்ளி விடறதைப் பார்த்தார். கொஞ்சம் நீராவியால சின்ன மூடியைத் தள்ள முடியும்போது நிறைய நீராவியினால் பெரிய பொருளை நகர்த்த முடியும்னு யோசிக்க முடிவுக்கு வந்தார். அந்த யோசனையிலிருந்து மனசுக்குள்ள படிப்படியாக் கற்பனை பண்ணிப் பல சோதனைகளைப் பண்ணிப் பார்த்து நீராவி இஞ்சினை வடிவமைச்சார்...

அதே மாதிரி யோசிக்கத்தான் இந்த பால் பாயின்ட் பேனாவிலேர்ந்து ஏரோப்ளேன் வரை எத்தனையோ பல பொருள்களை விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்காங்க. நீயும் கற்பனை பண்ணும்போதே நிறைய யோசிச்சிருக்கே... மயிலோட தோகையிலே என்னென்ன நிறங்கள் இருக்கு? அதே நிறத்திலே, அமைப்பிலே வேற என்ன இருக்கு...? அப்படின்னு யோசிச்சுக் கண்டுபிடிச்சிருக்கே. அதோட, பேசற தென்னை மரத்தையும் வானம்பாடியா மாறின வனதேவதையையும் சேர்த்திருக்கே. ஜோரான ஒரு கதை கிடைச்சிருக்கு...

கதை எழுதறதுக்கு உபயோகிச்ச இந்தக் கற்பனையையும் யோசனையையும் நீ இன்னும் எத்தனையோ விஷயங்களுக்கு எதிர்காலத்தில் உபயோகிக்கலாமே - இப்ப விஷமம் செய்யக் கூட அது உபயோகமாயிருக்கும்!

பப்லுவுக்கும் உனக்கும் அன்பு
முத்தங்களுடன்,

ஆவலைத் தூண்டும்
வற்றல் குழம்பா?
உடனே ரெடி!



ஆம்! கோத்ரெஜ் டாமரிண்ட் ப்யூரி இருக்கையில் என்ன கவலை? புளியை நனைத்துக் கரைத்து வடிகட்டி ஏன் அவஸ்தைப்பட வேண்டும்? நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், எப்போதும்போல் வாணலியில் எண்ணை விட்டு, வற்றல் குழம்பிற்கு வேண்டியவற்றை தாளித்துக் கொண்டு இரண்டு கோப்பை நீர் விட்டு சாம்பார் பொடி, உப்பு முதலியவற்றைப் போட்டு சிறிது கொதிக்கவிடவும். பின்பு தேவையான அளவு டாமரிண்ட் ப்யூரியையும் போட்டு ஒரு கொதி வந்ததும் இறக்கினால் கமகமவென்று மணக்கும் வற்றல் குழம்பு உடனே ரெடி!


புளியோதரை

கோத்ரெஜ் டாமரிண்ட் ப்யூரி என்பது புத்தம்புது புளியிலிருந்து எடுக்கப்பட்ட கெட்டியான சாறு. உபயோகிக்கத் தயார் நிலையிலே வருகிறது. தவிர இதிலே பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை. அதனால் இது அசல் புளியின் சுவையுடனும், மணத்துடனும் இருக்கும்.

வற்றல் குழம்பைப்போலவே புளிக்காய்ச்சல், மிளகு குழம்பு, புளிப்பச்சடி போன்றவற்றையும் இதைக் கொண்டு மிக விரைவாக சுவைபடத் தயாரிக்கலாம்.


புளிப் பச்சடி

டாமரிண்ட் ப்யூரி அதிநவீன அழகிய டெட்ரா பேக்கிலே வருகிறது. பேக்கைத் திறந்த பின் இதை ஃப்ரிட்ஜில் 6 நாட்களுக்கு வைத்திருக்கலாம்.

இன்னும் என் தாமதம்? இன்றே சென்று சில பேக்குகளை வாங்குங்கள்.

பாதுகாக்கும் பொருட்களோ, செயற்கை நிறங்களோ சேர்க்கப்படவில்லை.
அதனால் பேக்கைத் திறந்தபின் இதை ஃப்ரிட்ஜில் வைத்து
6 நாட்களுக்குள் உபயோகிக்கவும்.



Godrej
FOODS

டாமரிண்ட் ப்யூரி.

புளியின் அசலான சுவை, தொல்லையிலிருந்து விடுதலை.

தமிழ்நாட்டில் மட்டும் கிடைக்கிறது

Enterprise/GFL/481 Tm

சிவகாமியின் சபதம்

நாற்பத்திரண்டாம் அத்தியாயம்
ரஞ்சனியின் வஞ்சம்

மூர்ச்சித்து விழுந்த சிவகாமியண்டை நாகநந்தி பாய்ந்து சென்று நெற்றியின் பொட்டுக்களிலும், மூக்கின் அருகிலும் தம் நீண்ட விரல்களை வைத்துப் பார்த்தார்.

காபாலிகையைக் கடுங்கோபத்துடன் நோக்கி, ''பாதகி! என்ன காரியம் செய்து விட்டாய்!'' என்றார்.

மயானத்தில் நள்ளிரவில் பேய்கள் பல சேர்ந்து சிரிப்பது போல் காபாலிகை சிரித்தாள்.

''அடிகளே! நான் என்ன பாதகத்தைச் செய்துவிட்டேன்? தாங்கள் சொன்னபடி தானே செய்தேன்? இவளுடைய காதலன் மாமல்லனை வீட்டுக்குள்ளே நுழைந்ததும் கொன்றுவிடும்படி தாங்கள்தானே சொன்னீர்கள்? அருமைக் காதலனுடைய கதியைக் கண்டு இந்தக் கற்புக்கரசி செத்து விழுந்தால் அதற்கு நான் என்ன செய்வேன்?'' என்று காபாலிகை சொல்லுவதற்குள் நாகநந்தி குறுக்கிட்டு, ''அசடே! மாமல்லன் இவன் அல்ல; மாமல்லனுடைய ரதசாரதி கண்ண பிரான் இவன்! அரசனுக்கும் ரதசாரதிக்கும் உள்ள வித்தியாசங்கூட உனக்குத் தெரியவில்லையா?'' என்றார்.

''ஓஹோ! அப்படியா சமாசாரம்? 'முதலிலே மாமல்லன் பிரவேசிப்பான். அவனைக் கொன்றுவிடு!' என்று தாங்கள் சொன்னபடி செய்தேன். இப்போது இவன் மாமல்லனில்லை, அவனுடைய சாரதி என்கிறீர்கள்!''

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் வாசற் கதவை வெளியிலிருந்து தடால் தடால் என்று கோடரியால் பிளக்கும் சத்தம் கேட்கத் தொடங்கியது.

''ரஞ்சனி! போனது போகட்டும். கடைசியாக நான் கேட்கும் ஒரே ஓர் உதவியை மட்டும் செய். இந்தப் பெண்ணின் உடம்பில் இன்னும் உயிர் இருக்கிறது. கொஞ்சம் அவகாசம் இருந்தால் இவளை உயிர்ப்பித்து விடுவேன். இவள் நம்முடைய வசத்தில் இருக்கும் வரையில் மாமல்லன் எப்படியும் இவளைத் தேடிக் கொண்டு வருவான். என்னுடைய பழி நிறைவேறும் வரையில் இவள் உயிரோடிருந்தாக வேண்டும். ஆகையால், இவளை எடுத்துக் கொண்டு நான் முன்னால் போகிறேன். அதோ பல்லவ வீரர்கள் கதவைப் பிளக்கிறார்கள். நீ சற்று நேரம் இங்கேயிருந்து அவர்களை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும்.''

''அடிகளே! ஒருவர் இருவர் வந்தால் நான் சமாளிப்பேன். கதவைப் பிளந்து கொண்டு பலர் உள்ளே வந்தால் அவர்களையெல்லாம் நான் எப்படித் தடுத்து நிறுத்த முடியும்?''

''உன் சாமர்த்தியத்தையெல்லாம் இதிலேதான் காட்ட வேண்டும். நீதான் சிவகாமி என்று சொல்லு. சற்றுநேரம் அவர்கள் திகைத்து நிற்பார்கள். அப்புறம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லு! அரைநாழிகை நேரம் அவர்களைத் தடுத்து நிறுத்தி வைத்தால் போதும்!''

''ஆ! கள்ள பிக்ஷுவே! பல்லவ வீரர்கள் கையால் என்னைக் கொல்லுவிப்பதற்குப் பார்க்கிறீரா?''

''ரஞ்சனி! பல்லவ வீரர்களால் நீ சாக மாட்டாய் என்று சத்தியம் செய்து கொடுக்கிறேன். உன்னைப் பைத்தியக்காரி என்று

அவர்கள் விட்டுவிடுவார்கள். ஒரு நாளும் அவர்களால் உனக்கு மரணம் நேராது. போ! சீக்கிரம் போ! இந்த ஓர் உதவி மட்டும் எனக்கு நீ செய்! அப்புறம் உன்னை எக்காலத்திலும் மறக்க மாட்டேன்!''

அருவருப்பும் குரோதமும் நிறைந்த கண்களால் காபாலிகை மூர்ச்சையாய்க் கிடந்த சிவகாமியையும் புத்த பிக்ஷுவையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, வேண்டாவெறுப்பாக வாசற்பக்கம் போவதற்குத் திரும்பினாள். அவள் திரும்பி இரண்டு அடி எடுத்து வைத்தாளோ இல்லையோ, புத்த பிக்ஷு கண்மூடித் திறக்கும் நேரத்தில் தன் இடுப்பில் செருகியிருந்த விஷக் கத்தியைக் கையில் எடுத்தார். அவருடைய சக்தியையெல்லாம் பிரயோகித்துக் காபாலிகையின் முதுகில் அந்தக் கத்தியைச் செலுத்தினார்.

''ஓ!'' என்று அலறிக் கொண்டு காபாலிகை திரும்பினாள்.

''அடபாவி! சண்டாளா! கடைசியில் துரோகம் செய்து விட்டாயா!'' என்று கத்திக் கொண்டு ரஞ்சனி நாகநந்திமேல் பாய்ந்தாள். அவர் சட்டென்று விலகிக் கொள்ளவே, தலைகுப்புறக் கீழே விழுந்தாள்.

மின்னல் மின்னி மறையும் நேரத்தில் நாகநந்தி தரையில் மூர்ச்சையாகிக்கிடந்த சிவகாமியைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு வீட்டின் பின்புறத்தை நோக்கி விரைந்தார்.

கால வெள்ளத்தில் சிறிது பின்னோக்கிச் சென்று, கண்ணபிரான் அந்தத் துர்க்கதிக்கு ஆளானது எப்படி என்பதைக் கவனிப்போம். பலபலவென்று கிழக்கு வெளுக்கும் நேரத்தில், வாதாபிக் கோட்டைக்குள்ளே, அதன் பிரதான மேற்கு வாசல் வழியாகப் பிரவேசித்த சேனாதிபதி பரஞ்சோதி கோதண்டத்திலிருந்து விடுபட்ட இராம பாணத்தைப் போல் நேரே சிவகாமி இருந்த மாளிகையை நோக்கிச் செல்ல விரும்பினார். ஆனால் அது அவ்வளவு சுலபமான காரியமாயில்லை. நாற்புறமும் தீப்பட்டு எரிந்து கொண்டிருந்த அந்த மாநகரத்தின் மக்கள் அலறிப் புடைத்துக் கொண்டும் அழுது புலம்பிக் கொண்டும் அங்குமிங்கும் பித்துப் பிடித்தவர்கள் போல் ஓடிக் கொண்டிருந்தார்கள். கோட்டை மதில்மேலாக ஆங்காங்கு ஏறிக் குதித்து நகரத்துக்குள் புகுந்த பல்லவ பாண்டிய வீரர்கள் வாதாபியின் பெருஞ்செல்வத்தைக் கொள்ளையடிக்கும் வெறியினால் மதம் பிடித்தவர்களாய்த் தங்களைத் தடுத்தவர்களையெல்லாம் கொன்று வீழ்த்திக் கொண்டு அங்குமிங்கும் ஓடினார்கள். தீப்பிடித்த வீடுகளின் மேற்கூரைகள் தடதடவென்று விழுந்து வீதிகளை அடைத்தன. தீயும் புகையும் படலம் படலமாகக் காற்றில் சுழன்று நாற்பக்கமும் பரவின.

இத்தகைய இடையூறுகளையெல்லாம் தாண்டிக் கொண்டு சேனாதிபதி பரஞ்சோதி வாதாபி வீதிகளின் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. ஒன்பது வருஷத்துக்கு முன்னால் அந்த நகரின் வீதிகளின் வழியாகச் சிவகாமியின் வீட்டுக்குச் சென்ற ஞாபகத்தைக் கொண்டு சுலபமாக இப்போது வழி கண்டுபிடித்துச் செல்லலாமென்று அவர் எதிர்பார்த்தார். அதுவும் அப்போது நகரில் ஏற்பட்டிருந்த குழப்பத்தினால் அவ்வளவு சுலபமாயில்லை. அவர் பின்னோடு ரதம் ஓட்டிக் கொண்டு வந்த கண்ணபிரானையும் அடிக்கடி வழி சரிதானா என்று கேட்டுக் கொள்ள வேண்டியதாயிருந்தது.

கடைசியாகச் சிவகாமியின் மாளிகை இருந்த வீதியைச் சேனாதிபதி அடைந்த சமயம் சூரியோதயம் ஆகிவிட்டது. அந்த வீதி முனைக்கு வந்தபோது ஒரு பெருங்கூட்டம் அங்கிருந்து பெயர்ந்து செல்வதை அவர் பார்த்தார். ரிஷபக் கொடியுடன் கூடிய பல்லவ வீரர்களின் வருகையைக் கண்டதும் எதிரில் வந்த ஜனங்கள் பீதியடைந்து நாற்பக்கமும் சிதறி ஓடினார்கள்.

சிவகாமி இருந்த மாளிகை வாசலைப் பரஞ்சோதி அடைந்ததும் அந்த வாசலும் வீதியும் நிர்மானுஷ்யமாயிருப்பதைக் கண்டார். அந்தக் காட்சி அவருடைய உள்ளத்தில் ஒருவிதத் திகிலை உண்டாக்கியது. வீட்டின் வெளிக் கதவு சாத்தியிருந்தது. வீட்டுக்குள்ளேயோ நிசப்தம் குடி கொண்டிருந்தது.

யாருக்காக, யாருடைய சபதத்தை நிறைவேற்றி அழைத்துச் செல்வதற்காக, இவ்வளவு பெரும் பிரயத்தனம் செய்து படையெடுத்து வந்தோமோ, அந்த ஆயனச் சிற்பியின் மகள் இந்த வீட்டுக்குள்ளே பத்திரமாயிருக்கிறாளா? அவளை உயிரோடு மீட்டுக் கொண்டு போய்க் கோட்டை வாசலில் காத்துக் கொண்டிருக்கும் ஆயனரிடம் ஒப்புவிக்கும் பாக்கியம் கிடைக்குமா? இப்படிச் சேனாதிபதி பரஞ்சோதி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது வீதியின் எதிர்ப்புறத்திலிருந்து சில பல்லவ வீரர்கள் ரிஷபக் கொடியுடன் விரைந்து குதிரைமேல் வருவது தெரிந்தது. அவர்கள் தமக்குத்தான் ஏதோ முக்கியமான செய்தி கொண்டு வருகிறார்கள் என்று பரஞ்சோதி ஊகித்துக் கொண்டு, பக்கத்தில் ரதத்திலிருந்து இறங்கி நின்ற கண்ணபிரானைப் பார்த்து,

அமரர் **கல்கி**

''கண்ணா! கதவைத் தட்டு, கதவு திறந்ததும் உள்ளே சென்று தேவியிடம் நாம் தான் வந்திருக்கிறோம் அவரை அழைத்துப் போவதற்கு என்று சொல்லு!'' என்றார்.

அவ்விதமே கண்ணன் போய்க் கதவைத் தட்டினான். சிறிது நேரத்துக்கெல்லாம் கதவின் திட்டி வாசல் திறந்தது. கண்ணன் உள்ளே பிரவேசித்ததும் மறுபடியும் கதவு சாத்திக் கொண்டது.

அவசரமாக வந்த பல்லவ வீரர்களின் தலைவன், பரஞ்சோதி எதிர் பார்த்ததுபோலவே அவருக்கு ஒரு செய்தி கொண்டு வந்தான். செய்தி அனுப்பியவன் இலங்கை இளவரசன் மானவன்மன். சேனாதிபதியின் கட்டளைப்படி மானவன்மன் பொறுக்கி எடுத்த வீரர்களுடன் வடக்குக் கோட்டை வாசல் வழியாகப் பிரவேசித்து வாதாபி அரண்மனையை அடைந்தான். அரண்மனையில் தீப் பிடிப்பதற்குள்ளே அதனுள்ளே இருந்த விலை மதிப்பதற்கரிய செல்வங்களையெல்லாம் வெளியேற்றிவிட ஏற்பாடு செய்தான். ஆனால், அரண்மனைக்குள்ளும் வெளியிலும் எவ்வளவு தேடியும் வாதாபிச் சக்கரவர்த்தி அகப்படவில்லை. அரண்மனைக் காவலர்களை விசாரித்ததில், சக்கரவர்த்தி கடைசியாக அரண்மனை வாசலில் சளுக்க வீரர்களையெல்லாம் சேர்த்து எல்லாரையும் எப்படியாவது உயிர் தப்பிப் பிழைத்து நாசிகாபுரிக்கு வந்து சேரும்படி சொல்லிவிட்டுத் தாம் ஒரு சில வீரர்களுடன் தெற்குக் கோட்டை வாசலை நோக்கிச் சென்றதாகத் தெரிந்தது. ஆனால், தெற்குக் கோட்டை வாசலைக் கைப்பற்றிக் காவல் புரிந்த பல்லவ வீரர்கள் அந்த வழியாகச் சக்கரவர்த்தி வெளியேறவில்லையென்று உறுதியாகச் சொன்னார்கள்.

இதையெல்லாம் கேட்ட சேனாதிபதிக்கு மனக் கிலேசம் முன்னை விட அதிகமாயிற்று. வாதாபிச் சக்கரவர்த்தியாக வேஷம் பூண்டு நடித்தவர் நாகநந்திதான் என்பதை அவர் சத்ருக்னன் மூலம் தெரிந்து கொண்டிருந்தார் அல்லவா? விஷப்பாம்பை விடக் கொடிய அந்தப் பாதகன் ஒரு வேளை சிவகாமியின் மூலமாகப் பல்லவர் மீது பழிதீர்த்துக் கொள்ள முயற்சிக்கலாமல்லவா? இந்த நிமிஷத்தில் ஒருவேளை அந்தக் கள்ள பிக்ஷு சிவகாமியைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறானோ, என்னவோ? அவளை யாரும் கண்டு பிடிக்க முடியாத இடத்தில் ஒளிக்கப் பார்க்கிறானோ, என்னவோ?

இந்த மாதிரி எண்ணங்கள் நெஞ்சத்தில் குமுறிக் கொந்தளிக்க பரஞ்சோதி அந்த வீட்டின் வாசற்கதவை விரைந்து நெருங்கினார். அவர் கதவண்டை வந்த சமயம் உள்ளே எங்கேயோயிருந்து 'வீல்' என்று ஒரு பெண்ணின் சோகக் குரல் கேட்டது.

பரஞ்சோதி வெறிபிடித்தவர் போலாகித் தம்முடைய பலம் முழுவதையும் பிரயோகித்துக் கதவைத் தள்ளித்திறக்க முயன்றார். அது முடியாமற் போகவே, ''சீக்கரம் கோடரி கொண்டு வந்து பிளவுங்கள்!'' என்று கர்ஜித்தார். மறுகணமே ஐந்தாறு வீரர்கள் கையில் கோடரியுடன் வந்து கதவைப் பிளந்தார்கள். ஐந்து நிமிஷத்தில் கதவுகள் பிளந்து தடாரென்று கீழே விழுந்தன.

திறந்த வாசலின் வழியாகப் பரஞ்சோதி உட்புகுந்து ஓடினார். அவரைத் தொடர்ந்து வேறு சில வீரர்களும் சென்றார்கள். முன் கட்டு முழுவதும் தேடியும் ஒருவரும் அகப்படவில்லை. பின்கட்டுக்குச் சென்றதும் ஓர் ஆணும் பெண்ணும் குத்திக் கொல்லப்பட்டுத் தரையிலே கிடந்த கோரமான காட்சி பரஞ்சோதியின் கண்முன்னால் காணப்பட்டது. ஆண் உருவத்தின் முகத்தைப் பார்த்ததும் கண்ணபிரான் என்று தெரிந்து போயிற்று. ஐயோ! கமலியின் கணவன் கதி இப்படியா ஆகவேண்டும்? ஆனால், அதைப் பற்றி அதிகம் சிந்திக்க அப்போது நேரமில்லை. அருகில் கிடந்த ஸ்திரீயின் மீது கவனம் சென்றது. அந்த உடல் குப்புறக்கிடந்தபடியால் யார் என்று தெரியவில்லை. ஒரு வேளை சிவகாமி தேவி தானோ என்னவோ? இருவரையும் கொன்றுவிட்டு அந்தப் பாதகன்.....?



பரஞ்சோதி தாம் இன்னது செய்கிறோம் என்று தெரியாமலே அந்தப் பெண் உடலைப் புரட்டி மல்லாக்க நிமிர்த்திப் போட்டார்.. காபாலிகையின் கோரமுகத்தைப் பார்த்ததும், 'சிவகாமி தேவி இல்லை' என்ற எண்ணத்தினால் சிறிது ஆறுதல் ஏற்பட்டது.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த ஸ்திரீயின் உடம்பு சிறிது அசைவதையும் நெடிய பெருமூச்சு வருவதையும் கண்டு பரஞ்சோதி திடுக்கிட்டார்.

அடுத்த நிமிஷம் அவளுடைய செக்கச் சிவந்த கண்கள் பரஞ்சோதியை வெறித்து நோக்கின.

''ஆகா! மாமல்லன் நீ தானா?'' என்று அவளுடைய உதடுகள் முணுமுணுத்தன.

சிவகாமியைப்பற்றி அவளிடம் ஏதேனும் தெரிந்து கொள்ளலாம் என்ற ஆவலால் எழுந்த பரபரப்புடன், ''ஆம், பெண்ணே! நான் மாமல்லன்தான்! நீ யார்? சிவகாமி தேவி எங்கே?'' என்று சேனாதிபதி கேட்டார்.

''இது என்ன கேள்வி? நான்தான் சிவகாமி, தெரியவில்லையா?'' என்றாள் காபாலிகை. அப்போது அவள் முகத்தில் தோன்றிய கோரப் புன்னகை அவளுடைய விகாரத்தைப் பன் மடங்காக்கிற்று.

ஒரு கணநேரம் பரஞ்சோதி திகைத்துப் போனார். நெடுங்காலம் சிறைப்பட்டிருந்த காரணத்தினால் சிவகாமி தேவிதான் இவ்விதம் சித்தப் பிரமை கொண்ட பிச்சியாகிவிட்டாளோ? சீச்சி! ஒரு நாளும் அப்படியிராது. குண்டோதரன் ஒரு மாதத்துக்கு முன்புதான் சிவகாமியைப் பார்த்துவிட்டு வந்தான் என்பதும், சத்ருக்னன் காபாலிகையைப் பற்றிக் கூறியதும் பரஞ்சோதிக்கு நினைவு வந்தன. அந்தக் காபாலிகைதான் குகை வழியாகப் பிரவேசித்து இவ்விடம் வந்திருக்கிறாள் போலும்.

''சீ! ஏன் பொய் சொல்லுகிறாய்? நீ சிவகாமி இல்லை. சிவகாமி எங்கே என்று உண்மையைச் சொன்னால்....''

''உண்மையை நான் சொன்னால் அதற்குப் பிரதியாக நீ எனக்கு என்ன செய்வாய்?''

''உன் உயிரைக் காப்பாற்றுவேன்'' என்றார் பரஞ்சோதி.

''ஆகா! விஷக் கத்தி பாய்ந்த என்னைக் காப்பாற்ற, உன்னால் ஒருநாளும் ஆகாது!''

''விஷக் கத்தியா? அப்படியானால் நாகநந்திதான் உன்னைக் கொன்றிருக்க வேண்டும்! பெண்ணே சீக்கிரம் சொல்! நாகநந்தி எப்படி, எந்த வழியாகப் போனான்? சொன்னால் உனக்காக அவனைப் பழி வாங்குகிறேன்.''

''நாகநந்திமேல் பழிவாங்கி என்ன பிரயோசனம்! அந்தக் கள்ள பிக்ஷு என்னைக் கொன்றது உண்மைதான். ஆனால், அவனாகக் கொல்லவில்லை. அந்த நீலி சிவகாமி தூண்டித்தான் கொன்றான். பல்லவனே! நீ உன்னை மன்மதன் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய். ஆனால், என்ன செய்வது? அந்த மூளி சிவகாமிக்கு உன்பேரில் ஆசை இல்லை. வறண்டு காய்ந்து எலும்புந்தோலுமாயிருக்கும் புத்த பிக்ஷுவின் பேரிலேதான் அவளுக்கு மோகம். நீ வருவதாகத் தெரிந்ததும் அவள்தான் நாகநந்தியை அழைத்துக் கொண்டு ஓடிவிட்டாள். நான் குறுக்கே நிற்பேனென்று என்னையும் கொல்லச் செய்தாள். எனக்காக நீ பழி வாங்குவதாயிருந்தால் சிவகாமியைப் பழி



வாங்கு. அந்த அசட்டுப் புத்த பிக்ஷுவை ஒன்றும் செய்யாதே!''

இந்த வார்த்தைகளெல்லாம் பரஞ்சோதியின் காதில் கர்ண கடூரமாக விழுந்தன. மேலே கேட்கச் சகியாமல், ''பெண்ணே! அவர்கள் இருவரும் எங்கே இப்போது? எப்படிப் போனார்கள்? சீக்கிரம் சொல்லு!'' என்று கூறினார்.

தன்னுடைய யுக்தி பலித்துவிட்டது என்று எண்ணிய காபாலிகை, ''கொல்லை முற்றத்துக் கிணற்றிலே இறங்கிப் பார்! சுரங்கவழி அங்கே இருக்கிறது! சிவகாமியைப் பழி வாங்கு! ஞாபகம் இருக்கட்டும்'' என்று சொல்லிப் பேச்சை நிறுத்தினாள். அதோடு அவளுடைய மூச்சும் நின்றது.

நாற்பத்து மூன்றாம் அத்தியாயம்

புத்தர் சந்நிதி

சேனாதிபதி பரஞ்சோதி தம்முடன் வந்திருந்த வீரர்களுக்கு அதி விரைவாகச் சில கட்டளைகளை இட்டார். அவர்களில் நாலு பேரைமட்டும் தம்மைத் தொடர்ந்து வரும்படி ஆக்ஞாபித்துவிட்டு அந்த வீட்டின் கொல்லை முற்றத்தை நோக்கி விரைந்து சென்றார். முற்றத்தின் மத்தியில் பவள மல்லிகை மரத்தின் அருகில் இருந்த கிணற்றண்டை சென்று உட்புறம் எட்டிப்பார்த்தார். கிணற்றின் சுற்றுச் சுவர் கொஞ்சதூரம் வரையில் செங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. அதற்குக் கீழே பாறையைப் பெயர்த்துத் தோண்டியிருந்தது. நீர் மிக ஆழத்தில் இருந்தது.

நெஞ்சு திக்கு திக்கு என்று அடித்துக் கொள்ள, பரஞ்சோதி அந்தக் கிணற்றுக்குள்ளே கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு இறங்கினார். அவருடன் மற்ற நால்வரும் இறங்கினார்கள். செங்கல் சுவரைத் தாண்டிப் பாறைச் சுவரை அவர்கள் எட்டிய பிறகு மேடும் பள்ளமும் பொக்கையும் பொளையுமாக இருந்தபடியால் இறங்குவது சுலபமாயிருந்தது. கிணற்றின் முக்கால் பங்கு ஆழம் இறங்கியதும் பரஞ்சோதி 'ஆ' என்று ஆச்சரிய சப்தம் இட்டார். அங்கே பாறைச் சுவரில் ஒரு பெரிய பொளை இருந்தது. அது உள்ளே ஆழமாகச் சென்றதோடு சிறிது தூரத்துக்கப்பால் ஒரே இருட்டாகவும் காணப்பட்டது. பரஞ்சோதி தம்முடன் வந்த வீரர்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டு அந்தப் பொளைக்குள் புகுந்தார். ஓர் ஆள் படுத்து ஊர்ந்து செல்லும் அளவில்தான் அந்தத் துவாரம் இருந்தது. ஆனால், சிறிது தூரம் அவ்விதம் ஊர்ந்து சென்றதும் துவாரம் பெரியதாயிற்று. இன்னும் சிறிது தூரம் உட்கார்ந்தபடி நகர்ந்து சென்ற பிறகு காலில் படிக்கட்டுகள் தென்பட்டன. நாலைந்து படிக்கட்டுகளில் இறங்கியதும் சமதளத்துக்கு வந்திருப்பதாகத் தோன்றியது. முதலில் சிறிது நேரம் ஒரே இருட்டாயிருந்தது. கண்கள் இருளுக்குப் பழக்கமானதும் கொஞ்சம் சுற்றுப் புறத் தோற்றத்தைப் பார்க்க முடிந்தது. பூமிக்கு அடியிலே பாறையைக் குடைந்து அமைத்த விஸ்தாரமான மண்டபத்தின் ஓர் ஓரத்தில் தாம் நிற்பதைப் பரஞ்சோதி அறிந்தார். அவர் நின்ற இடத்துக்கு நேர் எதிரே ஒரு பெரிய புத்தர் சிலை காட்சியளித்தது. புத்தர் சிலையின் மேலே அழகிய வேலைப்பாடுள்ள விமானம் காணப்பட்டது. எதிரே இரண்டு வரிசைகளாகப் பெரிய பெரிய பாறைத் தூண்கள் - நன்கு செதுக்கிச் செப்பனிடாத பெருந்தூண்கள் - நின்றன. பரஞ்சோதியும் மற்ற இரண்டு வீரர்களும் அந்த மண்டபத்தில் அங்கு மிங்கும் சுற்றியலைந்து; தூண் மறைவுகளிலும் மூலை முடுக்குகளிலும் தேடினார்கள். அங்கு மனிதர் யாரும் தென்படவில்லை. ஆனா ஓரம் ஒரு தூணின் மறைவில் சில உடைகளும் ஆபரணங்களும் கிடைத்தன. அவை சக்கரவர்த்திக்குரியவை என்று கண்டதும் பரஞ்சோதி அவ்விடத்தில் நாகநந்தி இராஜரீக உடைகளைக் களைந்து, சந்நியாசி உடை தரித்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார். ஆனால் நாகநந்தியும் அவருடன் சென்ற சிவகாமியும் எங்கே? அங்கிருந்து அவர்கள் மாயமாய் மறைந்திருப்பார்களா?

பரஞ்சோதியின் பார்வை தற்செயலாகப் புத்த பகவானுடைய சிலை மீது விழுந்தது. சட்டென்று அவருடைய மூளையில் ஓர் எண்ணம் உதித்தது. காஞ்சி இராஜவிகாரத்தில் புத்தர் சிலைக்குப் பின்னால் இருந்த இரகசிய வழி ஞாபகத்துக்கு வந்தது. உடனே பரஞ்சோதி புத்தர் சிலையை நோக்கிப் பாய்ந்து சென்றார். அங்கு, இந்தச் சிலை பாறையின் பின் சுவரோடு ஒட்டியிருந்தது. சிலைக்குப் பின்னால் துவாரமோ இரகசிய வழியோ இருப்பதற்கு இடமே இல்லை.

பரஞ்சோதி பெரும் ஏமாற்றத்திற்குள்

ளானார். ஆயினும் தாம் தேடும் வழியின் இரகசியம் இந்தச் சிலையிலேதான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர் மனத்தை விட்டு அகலவில்லை.

'பிரபு! புத்த பகவானே! மகாவிஷ்ணுவின் மாயாவதாரம் தாங்கள் என்று கேள்விப்பட்டது உண்மையானால் இச்சமயம் எனக்கு வழி காட்டவேண்டும். தங்களுடைய பாதாரவிந்தமே கதி!' என்று நினைத்த வண்ணம் சேனாதிபதி புத்தர் சிலையின் பாதங்களைத் தொட்டார். தொட்டதுதான் தாமதம். உடனே ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அதாவது, புத்தர் சிலை தன் இடம் விட்டுப் பெயர்ந்து ஒரு பக்கமாகச் சிறிது நகர்ந்தது.பின்புறத்துப் பாறைச் சுவரிலே எதிர்பார்த்தபடி சுரங்க வழியும் காணப்பட்டது. 'ஆகா!புத்தபகவான் வழி விட்டார்!' என்ற குதூகலமான எண்ணத்துடன் மற்ற வீரர்களுக்குச் சமிக்ஞை செய்து விட்டுப் பரஞ்சோதி சுரங்க வழியில் பிரவேசித்து, ஓர் அடி எடுத்து வைத்தார். அப்போது தம் எதிரிலே அந்தச் சுரங்க வழியிலே அவர் சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான காட்சி ஒன்றைக் கண்டார்.

ஒன்றன்பின் ஒன்றாகப் பல தீவர்த்திகள் அந்தக் குறுகிய சுரங்க வழியில் வந்து கொண்டிருந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு வந்த மனிதர்கள் கன்னங்கரிய கொள்ளிவாய்ப் பிசாசுகள் போலத் தோன்றினார்கள். அந்தப் பயங்கர ஊர்வலத்துக்கு முன்னால் சிறிது தூரத்தில் தலைமொட்டையடித்த பிக்ஷு உருவம் ஒன்று தோளிலே ஒரு பெண்ணைத் தூக்கிப் போட்டுக் கொண்டு அதி விரைவாக ஓட்டம் ஓட்டமாக வந்து கொண்டிருந்தது.

பரஞ்சோதிக்கு அப்படி வருகிறவர்கள் யார் என்ற விவரம் ஒரு நொடியில் விளங்கி விட்டது. புத்த பிக்ஷு சுரங்க வழியில் பாதி தூரம் போவதற்குள்ளே சத்ருக்னன் தன் ஆட்களுடன் மற்றொரு பக்கத்தில் புகுந்து வந்திருக்கிறான். அவனிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பிக்கப் புத்த பிக்ஷு திரும்பி ஓடி வருகிறார்.

பரஞ்சோதி மறு விநாடியே புத்த பகவான் காண்பித்த வழியிலிருந்து வெளியே வந்தார். அவரும் மற்ற வீரர்களும் பாய்ந்தோடிப் பாறைத் தூண்களின் பின்னால் மறைந்து நின்றார்கள்.

அவ்விதம் அவர்கள் மறைந்துகொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் நாகநந்தி பிக்ஷு புத்த பகவானுடைய சிலைக்குப் பின்புறமிருந்து வெளிப்பட்டார். தோள்மீது சிவகாமியைச் சுமந்து கொண்டு வந்தார். பரஞ்சோதியும் அவருடைய வீரர்களும் மூச்சுக் கூடக் கெட்டியாக விடாமல் அவர் என்ன செய்யப் போகிறார் என்று ஆவலுடன்

அருள்வாக்கு



மகா பெரியவர்களிடத்தில் அன்பு இருப்பது விசேஷம் இல்லை. மகா பாபியிடமும் அதே அன்பு இருக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் அவனிடமே அதிக அன்பு வைக்க வேண்டும். "நாம் தப்புச் செய்வது போலவே இவனும் செய்கிறான். இவன் மனம் இவனை இப்படித் தூண்டுகிறது. அந்த மனத்தை நல்லதாக்க முயற்சி பண்ணுவோம்" என்று நினைக்க வேண்டும். ஈசுவர கிருபையால் அநுக்கிரக சக்தி பெற்றிருப்பவர்கள், அதைக் கொண்டு பாபியிடம் உள்ள பாபங்களை நிவிருத்தி பண்ணுவதையே முக்கியமாகக் கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் ஒரே ஒரு மனிதரிடம் காரணமில்லாத தூய அன்பை வைக்கப் பழகி விட்டால், பின்னால் அதுவே நம்மை அன்பு மயமாக்கி, அந்த அன்பை எல்லோரிடமும் பரப்ப உதவி புரியும். குருவிடம் இவ்விதம் பயன் எதிர்பாராமல் பூரண அன்பு வைக்கப் பழக வேண்டும் என்பது பெரியோர்கள் ஏற்படுத்தியுள்ள விதி.குருவிடம் காரணம் பார்க்காமல், வியாஜம் இல்லாமல் அன்பு செலுத்த ஆரம்பிக்க வேண்டும். பின்பு அந்த அன்பு தருகிற ஆனந்தத்தில் பழகிப் பழகி லோகம் முழுவதும் குருவாக நினைத்து, சமஸ்தப் பிராணிகளிடமும் காரணமில்லாத சமமான அன்பு செலுத்த வேண்டும். லோகம் முழுதும் அன்பை நிரப்பினால் அதுவே ஆனந்த நிலை, அதுவே பரிபூர்ண நிலை, அதுவே பரம சாந்தி.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

நாகநந்தி புத்தர் சிலைக்கு எதிரில் சற்றுத் தூரத்தில் சிவகாமியைத் தரையில் கிடத்திவிட்டு எழுந்தார். புத்தர் சிலையண்டை சென்று நின்றார். ஒரு கண நேரம் அவர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்ததாகத் தோன்றியது. ஒரு தடவை சுற்று முற்றும் பார்த்தார். பிறகு, சிவகாமியின் அருகில் சென்று உட்கார்ந்தார்.

சுரங்க வழியை அடைத்து விடுவது தான் அவருடைய நோக்கம் என்பது பரஞ்சோதிக்குப் புலப்பட்டுவிட்டது. தம் அருகில் நின்ற வீரர்களுக்குச் சமிக்ஞை செய்துவிட்டு ஒரே பாய்ச்சலில் பிக்ஷுவின் அருகில் சென்றார். மற்ற வீரர்களும் வந்து சேர்ந்தார்கள். பிக்ஷுவின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். பிக்ஷு திரும்பி அவர்களை ஏறிட்டுப் பார்த்தார். இருட்டில் அவருடைய முகபாவம் ஒன்றும் தெரியவில்லை. ஆயினும், உடனே அவர் கூறிய வார்த்தைகள் அவர் மனோ நிலையை வெளிப்படுத்தின.

''அப்பா! பரஞ்சோதி! நீதானா? உன்னை எதிர்பார்த்துக் கொண்டுதானிருந்தேன். நான் தோற்றால் உன்னிடந்தான் தோற்க வேண்டுமென்பது என் மனோரதம். அது நிறைவேறிவிட்டது!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்றார். எல்லோரும் மண்டபத்தின் நடு மத்திக்கு வந்தார்கள். நாகநந்தி பரஞ்சோதியை இரக்கம் ததும்பிய கண்களுடனே பார்த்து, ''அப்பனே! இன்னும் எதற்காக இவர்கள் என்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்? இனி எங்கே நான் தப்பி ஓடமுடியும்? அந்தப் பக்கத்திலும் உன் ஆட்கள் வருகிறார்கள், இந்தப் பக்கமும் உன் ஆட்கள் நிற்கிறார்கள். என் ஆட்ட பாட்டமெல்லாம் முடிந்து விட்டது. இனிமேல் நீ சொன்னபடி நான் கேட்க வேண்டியதுதான். உன்னையும் ஆயனரையும் எப்படியாவது அஜந்தாவுக்கு வரச் செய்ய வேண்டும் என்று பார்த்தேன். அது முடியாமற் போயிற்று. அப்பனே! என்னை விட்டுவிடச் சொல்லு! நீ சொல்லுகிறதைக் கேட்டு அப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேன்'' என்றார்.

இவ்விதம் நாகநந்தி கெஞ்சியது பரஞ்சோதியின் மனத்தில் சிறிது இரக்கத்தை உண்டாக்கியது.

''பிக்ஷுவை விட்டுவிடுங்கள்!'' என்று தம் வீரர்களுக்குக் கட்டளையிட்டார்.

வீரர்கள் நாகநந்தியை விட்டுவிட்டுச் சற்று அப்பால் சென்றார்கள்.

''பரஞ்சோதி! அந்தப் பழைய காலமெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா? காஞ்சி நகரத்தில் நீ பிரவேசித்த அன்று உன்னைப் பாம்பு தீண்டாமல் காப்பாற்றினேனே? அன்றிரவே உன்னைச் சிறைச்சாலையிலிருந்து தப்புவித்தேனே? அதெல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''


இவ்விதம் பேசிக்கொண்டே கண் மூடித் திறக்கும் நேரத்தில் நாகநந்தி தமது இடுப்பு ஆடையில் செருகியிருந்த கத்தியை எடுத்தார்.

புத்த பிக்ஷு கையில் கத்தி எடுத்ததைப் பார்த்ததும் பரஞ்சோதி விரைவாகப் பின்னால் இரண்டு அடி எடுத்து வைத்துத் தமது உறையிலிருந்த வாளை உருவினார். அந்த க்ஷண நேரத்தில் அவருடைய மனத்தில், 'ஆ! நமது உயிர் போயிற்றே! எவ்வளவோ முயற்சிகள் செய்து கடைசியில் காரியம் சித்தியாகும் தருணத்தில் இந்தப் பெருந்தவறு செய்துவிட்டோமே!' என்ற எண்ணம் மின்னல் போலத் தோன்றியது.

ஆ! இது என்ன? இந்த வஞ்சக நாகநந்தி ஏன் அந்தப் பக்கம் திரும்புகிறார்? யார் மேல் எறிவதற்காகக் கத்தியை ஓங்குகிறார்? ஆஹா! சிவகாமி தேவியின் மேல் எறிவதற்கல்லவா கத்தியைக் குறி பார்க்கிறார்? படுபாவி பாதகா!

யார் செய்த அதிர்ஷ்டத்தினாலோ நாகநந்தி ஓங்கிய கையுடன் அரைவிநாடி தயங்கி நின்றார். அந்த அரைவிநாடியில் பரஞ்சோதி தமது வாளை ஓங்கிக் கத்தி பிடித்த புத்த பிக்ஷுவின் தோளை வெட்டினார். பிக்ஷுவின் கத்தி குறி தவறி எங்கேயோ தூரப் போய் விழுந்தது. நாகநந்தியும் அடியற்ற மரம்போல் தரையில் விழுந்தார்.

(தொடரும்)



''உன் அன்பை வெளிப்படுத்தப் போய், உன் சின்னவீடு ரொம்ப வருத்தப்பட்டதாச் சொல்றியே, எப்படி?''

''அடுத்த பிறவின்னு ஒண்ணு இருந்தா அப்போவும் நீதான் என் சின்ன வீடா வரணும்னு சொல்லித் தொலைச்சுட்டேன்!''

- காழி

லக்னோ : ஒரு ரவுண்ட் அப் :



✱ கட்டடக்கலை அதிசயம் : இமாம் பாரா

●● லக்னோ - நாட்டிற்கு நாலு பிரதமர்களைத் தந்த மிகப் பெரிய மாநிலமான உத்தர பிரதேசத்தின் தலைநகர். ஆனால் ஒரு தலை நகரத்துக்கான கம்பீரம் எதுவுமில்லாமல் மிக அழுக்காக இருக்கும் ஒரு சோம்பேறி நகரம்!

●● நகரின் நடுவே விதான் ஸௌதா வீதியில், அரை வட்ட வடிவில் பிரிட்டிஷ் பாணியில் வடிவமைக்கப்பட்ட ஓர் அழகான கட்டடம் - இதில்தான் உத்தரபிரதேசத்தின் சட்டசபை இயங்குகிறது. கம்பீரமான இந்த கட்டடத்துக்கு எதிரே பொதுக் கழிப்பிடம். சுற்றுப்புற சுத்தம் பற்றிய உணர்வு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. கட்டடத்தின் வட்ட வடிவமான விதானம் கறுப்பு வண்ணத்தில் இருக்கிறது. ''எதற்காக இந்தக் கறுப்புக் கலர்?'' என்று கேட்டதற்கு, ''அது கலரில்லை, சார்! சுதந்திரத்துக்குப் பின் இது பெயின்டையே பார்க்கவில்லை!''

''ஏன் அப்படி?''

''எல்லாம் பாலிடிக்ஸ்தான்!''

●● நகருக்குள் டவுன் பஸ் கிடையாது. எல்லாரும் போவது டாக்ஸியில்தான். இங்கு ஆட்டோ ரிக்ஷா வடிவத்தில், ஆனால் கார் போன்ற ஸ்டியரிங் அமைப்புடன் இருக்கும் வாகனத்துக்குப் பெயர்தான் டாக்ஸி. மிகவும் மலிவான கட்டணம். நாலு கி.மீ க்கு ஒரு ரூபாய். இந்தியாவில் எங்குமே இத்தனை மலிவான கட்டணம் இருக்க முடியாது. நகர் முழுவதும், ஒரு குறிப்பிட்ட ரூட்டில் ஒவ்வொரு ஸ்டாப்பாக நின்று போகும் இதில், இரண்டு ஸ்டாப்புகளுக்கிடையிலான கட்டணம் ஒரு ரூபாய். அதிலும் காலை 6:30 லிருந்து 8:30 வரை பாதிக் கட்டணம்தான். இறங்கும் போது எங்கே வேண்டுமானாலும் ஓரம் இறங்கிக் கொள்ளலாம். டீஸல் விலை

✱ குளோப் பார்க் : கட்டணம் வாங்க ஆளில்லை



எப்பொமே பாலிடிக்ஸ் தான்!



● டாக்ஸி - டபுள் பஸ் கிடையாது

ஏறியும் இவர்கள் கட்டணத்தைக் கூட்டாத தற்குக் காரணம், கடுமையான போட்டி. நகருக்குள் சுமார் மூவாயிரம் வாகனங்கள் இருப்பதால் நடந்து கொண்டிருப்பவர் களைக் கூட கையைப் பிடித்துச் சவாரிக்கு அழைக்கிறார்கள். ''வாடகை, செலவு போக ஒரு நாளைக்கு ரூ. 75 தான் கிடைக்கும்!'' என்று சொன்ன டிரைவர் ஷமீ விடம், ''பாங்க் லோன் உதவியுடன் ஏன் நீங்கள் ஒரு சொந்த வண்டி வாங்கக் கூடாது?'' என்று கேட்டதற்கு, ''அதெல் லாம் நடக்காது சார்! இதில் நிறைய பாலி டிக்ஸ்!'' என்றார்.

●● நகருக்கு வரும் டூரிஸ்டுகள் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய இடம் சுற்றுலாத் துறை அலுவலகம். வாசலில் ரிப்பேராகி நின்று கொண்டிருந்த பஸ்ஸுக்கு டிக்கெட் தந்து விட்டு - ''ரிப்பேர் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது'' என்று நிஜமாகவே சொல்லுகிற அலட்சியமான வரவேற்பு. ''சரி - டிக்கெட் பணத்தை வாபஸ் கொடுங் கள்'' என்று கேட்டால், ''ஒரு அப்ளிகேஷன் கொடுங்கள்!'' என்றார், அந்த அம்மணி. உடன் இருந்த உ.பி. நண்பர், ''டிக்கெட்டை என்னிடம் கொடுங்கள். இதில் 'பாலிடிக்ஸ்' உள்ளது. நான் வாபஸ் பெற்றுத் தருகி றேன்!'' என்று விரைவில் பெற்றுத் தந்து விட்டார்!

●● ஒரு காலத்தில் நவாப்களின் நகராக இருந்த லக்னோவில் இன்று பார்ப்பதற்கு ஒரு நவாபின் அரண்மனை கூடக் கிடை யாது. இமாம் பாரா என்றழைக்கப்படும் ஒரேயொரு 17 - ம் நூற்றாண்டுக் கட்டடம் தான் நம்மை பிரமிக்க வைக்கிறது. இருநூறு அடி நீளத்தில் ஐம்பது அடி உயரத்தில் பிரம் மாண்டமாக நிற்கும் இந்தக் கட்டடத்தின் மேற்கூரை எந்த விதமான உத்தரங்களும் இன்றி நிற்கிறது.

மிக அழகிய வேலைப்பாடுகளைக் கொண்ட இதன் சுவர்களும் வாயில்களும் சிமெண்ட் பிறப்பதற்கு முன்னாலேயே கட்டப்பட்டு இன்றும் உறுதியுடன் நிற்பது ஆச்சர்யம். பன்னிரண்டடி அகலமுள்ள இதன் சுவர்களிடையே நீண்ட பாதைகள், எண்ணற்ற திருப்பங்கள், வாசல்கள், படிகள். கட்டடத்தின் மேல் மாடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சாளரங்களின் வழி யாக வெளியில் இருநூறடி தொலைவில் இருக்கும் சாலையில் நடந்து போகும் ஒரு மாட்டைக் கூடப் பார்க்க முடிகிறது. ஆனால் சாலையிலிருந்து இந்தச் சாளரத் தைப் பார்க்க முடிவதில்லை! இந்த பிரமிப் பூட்டும் ஹாலில் ஒரு முனையில் நின்று கொண்டு பேசினால் மறுபுறம் எதிரொலி யில்லாமல் துல்லியமாகக் கேட்கிறது; தீக்குச்சி கிழிக்கும் ஓசை கூட நூறடி தூரத் திற்குத் துல்லியமாகக் கேட்கும் இந்தக் கட்டடத்தில் மன்னர்கள் இசை நிகழ்ச்சி களைக் கேட்டு மகிழ்ந்ததாகச் சொல்லு கிறார்கள்.

இந்த இமாம்பாராவைப் பார்க்கக் கட்டணம் ரூ. 5. ஆனால் கைடு கட்டணம் ரூ. 35. ''ஏன் இப்படி?'' என்றால் இதை நிர்வகித்துக் கொண்டிருக்கும் குழுவினர்



''பத்து மணிக்குமேல் ஒரு நிமிஷம் லேட்டானாலும் அட் டென்டென்ஸ் ரிஜிஸ்தரை மானேஜர் எடுத்துக்கிட்டுப் போயிடுவார்னு அவசரப்பட றீங்களே, அவ்வளவு பயமா...?''

''நீங்க ஒண்ணு... அந்த ரிஜிஸ்தர் ஒண்ணுதான் உயரமா தலைக்கு வெச்சுக்க வாகா இருக்கும். நான் முந்திக்கலாமேன்னுதான்!''

- வேதபுரி எஸ். ரமேஷ்

''மன்னரே... போர் வேண்டாம் என்கிறீர்களே...! என்ன காரணம்...? சமாதானப் பிரியராகி விட்டீரா...?''

''வயதாகி விட் டதே... முன்பு போல என்னால் 'பு ற மு து கி ட் டு' ஓட மு டி ய வில்லை...''

- மதுரை ராஜ்



தரும் பதில் : ''ரொம்ப பாலிடிக்ஸ் சார்! இதற்குக் குறைவாக வாங்கினால் எங்க ளுக்குக் கட்டாது!''

●● கோமதி நதிக்கரையில் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்தப் பெரிய நகரில் நிறைய பூங்காக்கள். புத்தா பார்க், யானை பார்க், குளோப் பார்க் - என்று ஆங்காங்கு இருக்கும் பெரிய சிலைகளின் பெயராலேயே அழைக்கப்படும் இந்தப் பூங்காக்களுக்கு உள்ளே போகக் கட்டணம். ஆனால் டிக்கெட் கொடுக்க யாரும் இல்லா ததால் எல்லோரும் ஹாய்யாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இதில் என்ன 'பாலிடிக்ஸோ' - தெரிய வில்லை!

●● நகரின் நடுவே மிகப் பெரிய பரப் பில் ஒரு பொடானிகல் கார்டன். ஆராய்ச்சி செய்யும் வசதி பெற்ற சில பெரிய நேஷனல் பார்க்குகளில் இதுவும் ஒன்று. பல அரிய, புதிய தாவரங்கள், மலர்கள் இங்கு உற்பத்தி செய்யப் படுகின்றன. உள்ளே இருக் கும் நர்ஸரியில் விலைக்குக் கிடைக்காத, அனுமதிக்கப் படாத அபூர்வமான செடி வகைகளை நுழைவாயி லுக்கு எதிரே உள்ள ப்ளாட் பாரத்தில் விற்றுக் கொண் டிருக்கிறார்கள். கேட்டால் இதையும் 'பாலிடிக்ஸ்' என்கிறார்கள்.

●● ''இது என்ன - எதைக் கேட்டாலும் பாலி டிக்ஸ்?'' என்று உள்ளூர் நண்பரிடம் விசாரித்த போது, அவர் சிரித்துக் கொண்டே ''இங்கு மக்கள் ஊழல், லஞ்சம் ஆகியவற் றுக்குச் சூட்டியிருக்கும் பெயர்தான் அது. காக கொடுத்தால் காரியம் நடக்கும். என் வீட் டுக்கு ரூ. 6000/- எலக்டிரிக் பில் வந்தது. மீட்டர் தப்பு என்று புகார் கொடுத்ததற்கு 'இருநூறு ரூபாய் கொடுங்கள்; மாதம் அறுபது ரூபாய்க்குப் பில் வரும்' என்று சொன்னார்கள்!''

●● லக்னோ 'பாலிடிக்ஸ்' பற்றி அந்த நண்பர் சொன்ன ஜோக் : ஒரு சிறந்த இந்திய மூளையை விலைக்கு வாங்க வந்தார் ஒரு வெளி நாட்டுக்காரர். தான் தருவதாகவும், விலை ரூபாய் மூன்று லட்சம் என்றும் தெரிவித்தார், ஒரு பெங்காலி. மூன்று தலை முறையாகக் கணக்கு எழுதும் குடும்பத்தி லிருந்து வருவதால் தமது மூளை மிகச் சிறந்தது என்றார் அவர். தொடர்ந்து வந்த ஒரு பஞ்சாபி, தாம் இரண்டு லட்சத்திற்குத் தம்முடைய மூளையைத் தருவதாகவும், வீரம் மிக்க ஒரு பரம்பரையில் வந்த தம்முடைய மூளை சிறந்தது - வலிமை மிக்கது என்றார் அவர். அடுத்து வந்தவர் ஒரு பிஹாரி. கடின உழைப்பைத் தவிர எதுவும் அறியாத தம்முடைய மூளையை ஒரு லட்சத்திற்குத் தருவதாகவும் அதற்கு உடனடி பணத்தேவைதான் காரணம் என் றும் சொன்னார்.

எதைத் தேர்ந்தெடுப்பது? என்று



● சட்டசபை : பெயிண்டைப் பார்க்காத விதானம்

குழம்பிப் போயிருந்த வெளிநாட்டுக் காரரைச் சந்தித்தார் ஒரு லக்னோ வாசி. ''உமக்கு நல்ல மூளை - சரியான விலையில் வேண்டும்; அவ்வளவுதானே? நாளை என்னைச் சந்தி!'' என்றார்.

மறு நாள் அயல் நாட்டு நண்பர் லக்னோவாசியைச் சந்தித்தார். ''பிஹாரி யின் மூளையை ஒரு லட்சத்துக்கு வாங்கி, அது பெங்காலியின் சிறந்த மூளை என்று சொல்லி உன் முதலாளியிடம் மூன்று லட்சத்தைப் பெற்றுக் கொள். அது பெங்காலியின் மூளைதான் என்பதற்கு நான் சர்டிபிகேட் வாங்கித் தருகிறேன். கிடைக்கும் பணத்தில் உனக்கு ஒரு லட்சம்; யோசனை சொன்ன எனக்கு ஒரு லட்சம்!'' என்றார் அந்த லக்னோவாசி!

படங்களும், கட்டுரையும் : ரமணன்

7

தனியே பேச வேண்டும் என்று திட்டமிட்டு அழைத்து வந்த ஒதுக்குப் புறமான மரத்தடி. அப்பா கேள்விகளைத் துவங்குகிறார்.

''நேத்து ராத்திரி எத்தனை மணிக்கு வந்தே?''

லக்ஷ்மிநாராயணன் வாய் மூடித் தலையைக் குனிந்து கொள்கிறான். அப்பா அடுத்த கேள்விக்கு நகர்கிறார்.

''எதுலே வந்தே?''

''ரிக்ஷாவிலே.''

''ம். ஏன் சைக்கிள் என்ன ஆச்சு?''

''பங்சர்.''

''ப்ரண்ட் வீலா? பாக் வீலா?''

''ஞாபகமில்லே. ரொம்ப நாளாச்சு.''

''ஓஹோ. ஏன், சரி பண்ணறதுக்கென்ன?''

''டைம் இல்லை.''

அசௌகர்யமாய் நெளிந்து பதில் வருகிறது.

''ம். ஹால்லே ட்யூப் லைட் என்ன ஆச்சு?''

''ப்யூஸ் ஆயிடுத்து.''

''எத்தனை நாளா?''

பதிலின் பலஹீனத்தில் பதிலே இல்லை. அப்பா கேள்வியை மறு ஒலிபரப்புச் செய்கிறார். பதில் தயங்கித் தயங்கி வருகிறது.

''ஒரு மாசம் ஆகப் போறது.''

''ஏன்? சரி பண்ணறதுக்கென்ன?''

''டைம் இல்லை.''

''உம்.''

யாருமில்லா மரத்தடியில் அப்பா தன் திட்டத்தின் இறுதிக் கட்டத்துக்கு வருகிறார்.

''ஏண்டா, உன்னை நம்பி ஆயிரத்தைநூறு மைல் தாண்டி ஒருத்தி வந்திருக்கா. ராத்திரி அவ்வளவு நேரம் கழிச்சு வர்றியே. தப்பில்லே?''

பேச்சின் நியாயத்தில் உறைந்து லக்ஷ்மி நாராயணன் வார்த்தைகளற்று நிற்கிறான். அப்பா ஆவேசமாய் அடுத்த கேள்வியைப் போடுகிறார்.

''உன் சைக்கிள் பங்சர் ஒட்டறதுக்கும், உன் வீட்டு ட்யூப் லைட் மாத்தறதுக்கும் எந்த யூனியன்காரன்டா வருவான்? புத்தியோட இரு. இனிமேலும் நீ சின்னப் பையன் இல்லை. உன்னை நம்பி ஒருத்தி வந்தாச்சு. உன் யூனியன் விவகாரமெல்லாம் போதும். ரேஷன் கார்டில் நீ ஒரு குடும்பத் தலைவன்னுதான் இருக்கு. ஞாபகமிருக்கட்டும்.''

தோன்றியதை நிதானமாய்ச் சொல்லி விட்ட திருப்தியில், அப்பா ஊருக்குப் புறப்படுகிறார். அவரது உணர்ச்சிகளுக்கும், வார்த்தைகளுக்கும் லக்ஷ்மிநாராயணன் என்ன மதிப்பு வைக்கப் போகிறான் என்று

பாட்கான் கனவுகள்





போகப் போகத்தான் பார்க்க வேண்டும். சைக்கிளின் பின்பக்கம் அப்பாவை உட்கார வைத்து லக்ஷ்மிநாராயணன் செம்மண் மேடு ஏறி மறைகிறான்.

ஆயிரத்தைநூறு மைல்கள். ஒரு பேச்சுக்கு அப்பா சொன்னாற்போல் அத்தனை தொலைவிலிருந்து லக்ஷ்மிநாராயணனை நம்பி வந்து விட்ட விஜயலக்ஷ்மி கொல்லைக் கிணற்றில் வாளி கட்டித் துணி துவைக்கிறாள். அவளது புது டில்லி வாழ்க்கையில் கிணறுகள் கிடையாது. பக்கெட்டில் நீரெடுத்து முகம் தெரிய வீட்டைத் துடைக்கிறாள். கண்ணாடி அலமாரி ஸ்வாமியிடம் ஸ்லோகம் சொல்கிறாள். தட்டின் முன் தனியே அமர்ந்து சோறு இறங்குவதில்லை. ஆரம்ப மாதங்களின் உமட்டல் கொல்லைப்புறத்தில் கேட்கிறது. சப்தம் கேட்டு வீட்டுக்கார நவகோடி அம்மாள் வந்து விடுகிறாள். உள்ளங்கையில் ஸ்பிரிங்கருள் அறுகாய் அழுத்துகிறாள். கலகல என்று அவள் பேச்சில் மத்தியானம் வரை நகர்கிறதே தெரிவதில்லை. அப்புறம் ஒரு குட்டித் தூக்கம். மீண்டும் ஒருமுறை கல்யாண ஆல்பம். வரவிருக்கும் குழந்தையை வரவேற்கும் வண்ணமாக அவள் ஆசையில் பின்னுகிற குட்டி ஸ்வெட்டர்.

சைக்கிள் மணி அடிக்கிறது. கையில் பால் பாத்திரத்துடன் விஜயலக்ஷ்மி வெளியே வருகிறாள். தெருக் கதவில் சைக்கிள் மோதித் திறந்து அதற்குள் லக்ஷ்மிநாராயணன் வந்து நிற்கிறான்.

''கிளம்பு சீக்கிரம்.''

''எங்கே?''

''சினிமாவுக்கு.''

''சினிமாவுக்கா?''

''சரிதான். உனக்கு மேட்டரே தெரியாதா? நைனா லைடுகா ஓரங்கட்டி புத்தி சொல்லிட்டாரு. நான் திருந்திட்டேன். இனிமே நோ மோர் யூனியன். சீக்கிரம் டிரஸ்ஸை மாத்திக்கிட்டுப் புறப்படு.''

பளிச்சென்ற முகத்தைக் கழுவ விஜயலக்ஷ்மி கிணற்றடிக்குப் போகிறாள். இழுப்பது கஷ்டமாயிருந்தாலும் கிணற்று நீர் சில்லென்று முகத்தில் பட்டதும் ஒரு புத்துணர்ச்சி கிடைக்கிறது. தெருக் கதவை மோதித் திறக்கிற லக்ஷ்மிநாராயணன் மாதிரி. அவன் இதற்குள் வேறு உடையில் தயாராகி வாசலில் நிற்கிறான். அவசர அவசரமாய் விஜயலக்ஷ்மி ஜன்னல்களை மூடுகிறாள். கொல்லைப்புறத் தாழ்ப்பாளில் கரண்டி நுழைகிறது. சமையலறை புகைக்கூண்டில் குனிந்து மாடியில் நவகோடி அம்மாளிடம் பாலுக்குச் சொல்லியாயிற்று. கைப் பைக்குள் பீரோ சாவி போகிறது. பின்பக்கம் புடைவையைக் கால் வைத்துத் தளர்த்தி, பூட்டுத் தேடுகிறாள்.

''ஆமா. உங்கிட்ட காசு எவ்வளவு இருக்கு?''

''காசா?''

விஜயலக்ஷ்மி திடுக்கிடுகிறாள். அவளிடம் ஒரே ஒரு பத்து ரூபாய்க்கு மேல் இல்லை.''

''அஞ்சறைப் பெட்டியிலே ஏதாவது ஒளிச்சு வைச்சிருப்பியே. குறும்பு.''

கன்னத்தில் இழைத்து விட்டுக் காத்திருக்கிறான். அப்படி எதுவுமில்லையென்று விஜயலக்ஷ்மி உதடு பிதுக்குகிறாள்.

''அடிப்பாவி. சம்பளத்தை இந்தக் கையிலே வாங்கி அந்தக் கையிலே கொடுத்தேனே. ஆசையா ஒரு படம் போகலாம்னா கேவலம் முப்பது ரூபா இல்லே. இதுதான்

ம.வே.சிவகுமார்

நீ குடித்தனம் நடத்தற லட்சணமா?''

விஜயலக்ஷ்மிக்குச் சிரிப்பு வருகிறது.

''சிரிக்காதே. அறைஞ்சுடுவேன்.''

அறைக்குள் குறுக்கேயும், நெடுக்கேயும் சிந்தனையில் வட்டமிட்டு லக்ஷ்மிநாராயணன் நடக்கிறான். பணத்துக்கு இப்போது என்ன செய்யலாம்? டக்கென்று அலமாரியில் சேர்ந்திருக்கிற பழைய பேப்பர்களில் அவன் முகம் பிரகாசமாகிறது.

''தமிழன் முன் வைச்ச காலைப் பின் வைக்க மாட்டான். வா புள்ள. உன்னை நான் படம் கூட்டிக்கிட்டுப் போறேன்.''

முன்பக்கம் விஜயலக்ஷ்மியும், . பின்னால் கேரியரில் கட்டிய பழைய நியூஸ் பேப்பர்களுமாய் லக்ஷ்மிநாராயணன் சைக்கிள் செம்மண் மேடு ஏறி இறங்குகிறது.

கல்கத்தா கடிதம் :

அதிகாரியைத் தாக்கிய எம்.பி.க்கள்!

மேற்கு வங்க அரசில் பணிபுரியும் எஸ். ஆர். பானர்ஜி என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ராஜஸ்தானி எக்ஸ்பிரசில் டில்லியிலிருந்து கல்கத்தாவுக்குக் குடும்பத்துடன் வந்து கொண்டிருந்தார். வழியில் பீகாரிலுள்ள கோமோ ஸ்டேஷனில் வண்டி நின்றது. (கோமோ ராஜஸ்தானி நிற்கும் ஸ்டேஷனல்ல.) அங்கே ஒரு பீகார் ஜனதா தள எம்.பி. தம் மெய்க்காப்பாளர்களுடன் ஏறினார். மெய்க்காப்பாளர்கள் தங்கள் சாமான்களுடன் வழியை அடைத்துக் கொண்டு நின்றார்கள். பானர்ஜி இதைக் கண்டித்த போது, எம்.பிக்குக் கோபம் வந்து விட்டது. அவரது தூண்டுதலால் மெய்க்காப்பாளர்கள் பானர்ஜியை நன்றாக உதைத்து விட்டார்கள். தன்பாத் ஸ்டேஷனில் இறங்கிய எம்.பி. அங்கு வந்த இன்னொரு ஜனதா தள எம்.பி.யிடம் விஷயத்தைச் சொல்ல, இரண்டாவது எம்.பியும் ரயிலுக்குள் ஏறி வந்து பானர்ஜியைச் செம்மையாக அடித்து உதைத்தார். பிறகு இரு எம்.பிக்களும் கல்கத்தாவில் தங்கள் ஆட்கள் மூலம் பானர்ஜியைக் 'கவனித்துக்' கொள்வதாக மிரட்டி விட்டுப் போனார்கள். இப்போது அரசாங்கத்திலிருந்து போலீஸ் பாதுகாப்பு வேண்டியிருக்கிறார் பானர்ஜி. இந்த நிகழ்ச்சி பற்றி ஜோதிபாசு பீகார் முதல்வர் லாலு பிரசாத் யாதவுக்கு எழுதப் போகிறாராம்.

லீலா ராயின் மரணம்

லீலாராயின் மறைவு வங்க இலக்கியத்துக்குப் பேரிழப்பாகும். முதுபெரும் வங்

இடைவேளை. பக்கத்தில் பீடி புகைகிற புறநகர் தியேட்டர். எதிரே திரையில் கலர் பல்ப் இறங்குகிறது. மூடித் திறக்கிற சாவியில் கூல்டிரிங்க்ஸ் பையன் காதருகில் ஜலதரங்கம் வாசிக்கிறான். அத்தனை பேர் நடக்கிற பாதையில் பழந்துணி விரித்துக் குழந்தையொன்று உருட்டப்பட்டிருக்கிறது. யாரும் அதை மிதித்து விடப் போகிறார்களோ என்று ஒவ்வொரு முறையும் விஜயலக்ஷ்மி பயந்து கொண்டே பார்த்திருக்கிறாள். படத்தின் பாடல்கள் ஸ்பீக்கர்களில் அலறுகிறது. தொலைவில் லக்ஷ்மிநாராயணன் வருகிறான். இடைவேளைப் பாடலில் அவன் நடையில் சன்னமாய் ஒரு மாற்றம் தெரிகிறது. சிரித்துக் கொண்டே அருகில் அமர்ந்து அவள் மூக்கருகே தன் விரல்களை வைக்கிறான்.

''ரெண்டு கையையும் பாரு. சிகரெட் வாசனை கெடையாது.''

விஜயலக்ஷ்மி சந்தோஷமாய்ச் சிரிக்கிறாள். தரையில் குழந்தையைக் காட்டி அதன் தாயார் வெற்றிலை போட்டு, சினிமா கதை பேசிக் கொண்டிருக்கிற அஜாக்கிரதையை வியக்கிறாள்.

''அட நீ வேற. படம் முடிஞ்சதும் ராத்திரி இதே குழந்தை ரோட்டோரம் தூங்க, தலைமாட்டிலே வாரி போய்க்கிட்டிருக்கும். அதுக்காக அந்தம்மா வெத்தலை போடாம இருக்க முடியுமா? தமிழன் கோர் ஆப் பிளாட்பார்ம். நீ டில்லி பொண்ணு. அங்கே எக்கச்சக்கமா பணத்தைக் கொட்டி இறைக்க விட்டு வார்ற வெளிநாட்டுக்காரனுக்கு பிலிம் காட்டறானுங்க. மெட்ராஸுக்கு வந்துட்டே இல்லே? போகப் போக வாழ்க்கையைப் புரிஞ்சுக்குவே.''

லக்ஷ்மிநாராயணன் பேசிக் கொண்டிருக்கும்போதே விளக்குகள் அணைகின்றன. 'தயவுசெய்து முன் சீட்டில் காலை வைக்காதீர்கள்.' 'புகைப்பிடிப்பவர்கள் கண்டிப்பாக அரங்கை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.' இருட்டில் மந்திரவாதி போல் லக்ஷ்மிநாராயணன் வெளியே எடுக்கிறான். பழைய பேப்பர் போட்டு வாங்க முடிந்த இரண்டு பாப்கார்ன் பாக்கெட்டுகள்.

படம் முடிந்து வீடு திரும்பி அலுப்பில் விஜயலக்ஷ்மி தூங்கி விடுகிறாள். பழைய படம். லக்ஷ்மிநாராயணன் பலமுறை பார்த்த படமும் கூட. எனினும் தமிழகத்துக் கலாசார அறிமுகத் திட்டத்தின் கீழ் தன் புது டில்லி மனைவி பார்த்தாக வேண்டியதாக அவன் யோசித்துத் தேர்ந்தெடுத்த படம். அதைப் பார்த்ததிலிருந்து லக்ஷ்மிநாராயணனுக்கு உடம்பு பூராவும் ஜிவ்வென்றிருக்கிறது. பாராமல் தெரிகிற வசனங்கள் மனதிற்குள் அலைமோதுகின்றன. வெறுமனே படுக்கையில் படுத்திருக்க முடியவில்லை.

''விஜயலக்ஷ்மி.''

''ம்.''

''தூங்கிட்டியா?''

''ம்?''

''தூங்கிட்டியான்னு கேட்டேன்.''

''ம்ஹூம்.''

காளி, ஒரியா எழுத்தாளர் அன்னதாசங்கர் ராயின் மனைவியான லீலாராய் ஓர் அமெரிக்கப் பெண்மணி. மேலை நாட்டு இசையில் தேர்ந்து இந்திய இசை பற்றி ஆராய்ச்சி செய்ய இந்தியா வந்த இவர், அன்னதாசங்கர் ராயிடமும் இந்தியக் கலாசாரத்திலும் மனத்தைப் பறிகொடுத்துத் தம் குடும்பத்தின் பலத்த எதிர்ப்புக்கிடையே 'லீலா ராய்' ஆனார். முழுக்க முழுக்க இந்தியப் பெண்மணி போல் வாழ்ந்த லீலாராய் பல வங்காளி நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

இன்னொரு 'பந்த்'!

மேற்கு வங்கத்தில் - குறிப்பாகக் கல்கத்தாவில் - 'பந்த்' என்றால் தண்ணீர் பட்டபாடு. இந்த ஆண்டில் நாலைந்து பந்த்கள் நடந்து விட்டன. சமீபத்தில் காங்கிரஸ் நடத்திய பந்த் எதற்குத் தெரியுமா? மூர்ஷிதாபாத் மாவட்டத்தில் ஹரிஹர்பாடா என்ற இடத்தில் சட்டம் - ஒழுங்குச் சீர்குலைவுக்கெதிராக மக்கள் செய்த மறியலில் போலீஸ் சுட்டு எட்டுப் பேர் மாண்டனர். பலருக்குக் காயம். இந்த நிகழ்ச்சியைக் கண்டிக்கத்தான் பந்த். அமைதியாயிருந்த மக்களைக் காரணமின்றிச் சுட்டதாகப் போலீசைக் குற்றஞ்சாட்டுகிறது காங்கிரஸ். மறியல் செய்தவர்கள் வன்முறையில் ஈடுபட்டதாக அரசாங்கம் சொல்கிறது. உண்மையில் நடந்ததென்ன? கடவுளுக்கே வெளிச்சம்!

– எஸ். கிருஷ்ணமூர்த்தி



''காலம் ரொம்ப கெட்டுடுச்சு!''

''ஏன் சார் அலுத்துக்கிறீங்க?''

''பின்னே என்ன? மெக்கானிக் என் சைக்கிளைப் பார்த்துட்டு 'சார், உங்க டைனமோவுக்குப் புது சைக்கிள் மாத்தணும்'னு சொல்றான்!''

– மதுரை ராஜ்

இருட்டில் லக்ஷ்மிநாராயணன் எழுந்து உட்கார்ந்து கொள்கிறான்.

''கொஞ்ச நேரம் போனதும் போல இருக்கு.''

''ம்.''

லக்ஷ்மிநாராயணன் எழுந்திருந்து விளக்கைப் போடுகிறான். சற்று நேரம் விஜயலக்ஷ்மிக்குக் கண்ணைக் கூசுகிறது. அன்றைய படத்தின் கதாநாயகன் போலவே நடந்து இடுப்பில் கை வைத்து நிற்கிறான்.

''நான் விஞ்ஞானி முருகன் இல்லே. முருகனோட தம்பி ராஜ். ஆராய்ச்சிக் குறிப்புகளோட ஒரு பகுதி உங்ககிட்டே இருக்கறதா அண்ணன் தன் டைரியிலே எழுதியிருக்காரு. அதை வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.''

மூடிய முகத்தில் பற்கள் தெரியக் கறுப்பு பின்னித் துணி போர்த்திய புத்த பிக்ஷு வாயைத் திறக்கிறார்.

''அந்த ரகசிய வார்த்தைகள்?''

''தெரியும். தோஷிகா - வலது புத்தர் சிலைக்கு. பிகாயோ - நான்காவது கல்லில். கிமாகோ - அடியில் இருக்கிறது.''

கூச்சம் காரணமாய் லேசாய் ஒரு நடுக்கம். வாய்க்கு வந்த வார்த்தைகளில் நிரப்புகிறான். மத்தியில் லகான் கிடைத்து, மேலும் காட்சிகளை திரைப்படத்தின் அதே தொனியில் அலட்சியமாய்ச் செய்து காட்டுகிறான்.

''அசோகன் தெரியுமா?''

அவள் உதட்டைப் பிதுக்குகிறாள்.

''சரிதான். அகர வரிசைலேர்ந்து ஆரம்பிக்கணும் போலருக்கு. அதான் அந்த மொட்டைத் தலை வில்லன்.''

மொட்டைத் தலை வில்லன் குரலும் அப்படியே வருகிறது.

''ஆர். எஸ். மனோகர்?''

''ம்ஹூம்.''

கன்னத்தை ஒரு பக்கம் வெட்டி இழுத்துப் பேசிக் காட்டுகிறான். விஜயலக்ஷ்மி கஷ்டப்பட்டுக் கொட்டாவியை அடக்குகிறாள்.

''சரி, தூங்கு.''

விஜயலக்ஷ்மி சுகமாய்ப் போர்வைக்குள் போகிறாள்.

''நீங்க தூங்கலே?''

''லட்சியம் உள்ளவனுக்குத் தூக்கம் கிடையாது.''

விளக்கையணைத்த லக்ஷ்மிநாராயணன் வேறு அறையில் போடுகிறான்.

வழக்கமாய் அவன் நுழைந்ததும் பரபரப்படைகிற பீச் ஸ்டேஷன் அலுவலகம், அவன் நுழையுமுன்னரே அன்று பரபரப்பாய் இருக்கிறது. அன்றைக்கு மதியம் வங்கியின் கல்கத்தா நாடகப் போட்டிக்கு நடிகர்கள் தேர்வு நடைபெற இருக்கிறது.

''கேட்டா மயக்கம் போட்டுடுவே. டீம் செலக்ட் பண்ண யாரு வர்றார்னு தெரியுமா?''


''யாரு?''

முகம் முழுக்க ஆவலாய் லக்ஷ்மிநாராயணன் கேட்கிறான்.

''நடிகர் திலகம் சிவாஜி கணேசன்!''

(தொடரும்)

நட்பு



பா. ராகவன்

வாசலில் பிரேக் பிடித்து டாக்ஸி நின்றது. உறக்கம் கலைந்த தெருநாய் வள்ளென்று விலகி ஓடியது. பக்கத்து வீட்டு ஜன்னல்களுக்கு முகம் முளைத்தது. எதிர் போர்ஷன் பத்மநாப ஐயங்கார், காதில் டிரான்ஸிஸ்டருடன் 'டெண்டுல்கர் இஸீஸ் போல்டு' என்ற மகத்தான செய்தியை யாரிடமோ சொல்ல அவசரமாக வெளியே வந்தவர், சட்டென்று மூக்குக் கண்ணாடியை இடுப்பில் தேடி, மாட்டி நின்றார். வாசலில், பாதி கலைந்த கோலத்தில் சிவப்புக் குளமாய் ஆரத்தி. கண்டிப்பாய்க் காக வந்துவிடும் என்கிற நம்பிக்கையில் மீட்டர் அருகில் காக்கி மனிதன், காதில் செருகிய பீடியை எடுக்கலாமா, வேண்டாமா என்கிற யோசிப்பில்.

''நூறு ரூபாய்க்குச் சில்லறை இருக்காப்பா?''

''அனந்தராமா, வந்தாச்சா?'' - காதில் டிரான்சிஸ்டரின் பெவிகால் இணைப்புடன் குறுக்கிடும் எதிர் போர்ஷன் பத்மநாப ஐயங்கார்.

தலையாட்டலில் பெருமிதம்.

''ஸ்கோர் என்ன ஸ்வாமி?''

''இவன்களை சகாராவுக்குத்தான் அனுப்பணும். நைன்ட்டி ஃபைவ் ஃபார் சிக்ஸ்.''

''அவன் - அந்த சின்னப் பையன்?''

''டக்குங்காணும்! வயத்தெரிச்சல்!''

அவசரமாய் மாமி வெளியே வந்தாள். ''இங்க என்ன பண்றேள்? ஆல் இண்டியா ரேடியோவோட அரட்டையா?''

''வந்துட்டேன்.''

வீடு புதிது. முகங்கள் புதிது. சூழ்நிலை புதிது. மிரண்ட பூனைக் குட்டியாய் மைதிலி விழித்தாள். உட்காரலாமா, வேண்டாமா என்கிற யோசனையில் கால் மாற்றி நின்றாள். அவளை யாரும் உட்காரச் சொல்லவில்லை. நேரே உள்ளே போகலாமா? சமையலறையில், உறவு வட்டங்கள் கட்டு சாதத்தைப் பிரித்ததில் புளியோதரையின் 'சுப்'.

உடை மாற்றி வரப் போன கந்தர்ராஜன் அங்கேயே படுத்துவிட்டான். அவன் தம்பிகள் இரண்டு பேர், சத்திரத்திலிருந்தே ஆபீஸ் போய்விட்டார்கள். புதிய மன்னியைக் காட்டுவதற்காக, தோழியரை அழைத்து வரப் போன அகிலா இன்னும் திரும்பவில்லை. தனித்தீவில் இறக்கி விடப்பட்ட ஜந்துவாக, மைதிலி, ஹாலில் விழித்தாள்.

நழுவும் டிராயரை இழுத்து விட்டுக் கொண்டு, ஹாலுக்குள் ஓடிவந்த ஜக்கு சட்டென்று நின்றான். மைதிலி, அவனைப் பார்த்துச் சிரித்தாள். பதிலுக்குச் சிரிக்கலாமா, கூடாதா என்கிற குழப்பத்தில் அவன் டிராயரை இழுத்து விட்டுக் கொண்டு குனிந்து, நெளிந்தான். டிராயர் நின்றபாடில்லை.

''ஜக்கு தானே உம்பேர்?''

''ஆமா.''

''முழுப்பேர்?''

'ஏ. ஜகன்னாதன்.''

''எத்தனாங்கிளாஸ்?''

''நாலாவது. பி.எஸ். ஸ்கூல்ல.''

''ஏவா, பீயா?''

அவன், அவளை உற்றுப் பார்த்தான்.

''சி செக்ஷன்.''

''இன்னிக்கு ஸ்கூல் இல்லே?''

''லீவ் போட்டுட்டேன்.''

''எனக்காகவா?''

ஜக்குவுக்கு, என்ன சொல்வதென்று குழப்பமாக இருந்தது. அவன் லீவ் போட்டதற்குக் காரணம், இரண்டு நாளாய் ஹோம் ஒர்க் செய்யாதது. நேற்றைய கல்யாண கலாட்டாவில் பள்ளிக் கூடத்தைச் சுத்தமாக அவன் மறந்திருந்தான். இன்று இவள் கேட்டதும்தான் ஞாபகம் வருகிறது. 'கடவுளே, எப்போது செய்யப் போகிறேன்?'

''இல்லே... ரெண்டு நாள் ஜாலியா இருந்தது, ஹோம் ஒர்க் பண்ண மறந்துட்டேன். இன்னிக்குப் போனா அடிப்பா. அதான்...''

''நாளைக்குக் கேப்பாளே!''

''இன்னிக்குள்ள முடிச்சுடுவேன்.''

''எதுல ஹோம் ஒர்க்?''

''கணக்கு.''

''இப்ப போடலாம், வரியா?''

''நீங்க சொல்லித் தருவீங்களா?''

''ஓ.''

''கணக்குத் தெரியுமா?''

அவள் சிரித்தாள். ''தெரியும், கொண்டு

நண்பர் : மாவட்டத்தை இரண்டாப் பிரிக்கிறதுல உங்களுக்கு என்ன சார், இடைஞ்சல்...?

அரசு ஊழியர் : நமக்கு உண்டான 'வருவாய் ஏரியா' குறைஞ்சிடுதே!

- சீர்காழி வி. ரேவதி



பம்பாய்க் கடிதம் :

சாக்கு மூட்டையில் 17 கோடி ரூபாய் பங்குகள்!

தொடரும் ஹர்ஷத் விவகாரம்

பம்பாயில் ஆந்திரா பாங்கின் முக்கியக் கிளையில் ஹர்ஷத் மேத்தாவுக்குச் சொந்தமான 17 கோடி ரூபாய் மதிப்புள்ள ஷேர்கள் கொண்ட ஒரு சாக்கு மூட்டை கண்டுபிடிக்கப்பட்டது. அது உடனே சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போது எல்லோர் மனத்திலும் எழும் கேள்வி - 'இன்னும் எங்கெங்கு, எவ்வளவு மூட்டைகளில் பங்குகள் உள்ளனவோ?'

துப்புவோரிடமிருந்து பாதுகாப்பு

சென்ற வருடம் 'ஐ லவ் பாம்பே' விழாவைத் திறம்பட நடத்திய முன்னாள் ஷெரீப் நானா சுதாசமா மறுபடியும் பம்பாயைத் தூய்மைப்படுத்த முனைந்துள்ளார். இம் முறை இவர் பம்பாயை எச்சில் துப்புவோரிடமிருந்து காக்க விரும்புகிறார். ஒவ்வொரு வெற்றிலை பாக்குக் கடையிலும் 'இதில் துப்பவும்' என்று எழுதப்பட்ட பிளாஸ்டிக் பைகள் கொடுக்கப்படும். இதைத் தவிர போதை மருந்துகள், எய்ட்ஸ் மற்றும் சுற்றுச் சூழல் கேடு இவற்றை எதிர்த்து நவம்பர் 14 முதல் 29 வரை நிகழ்ச்சிகள் நடைபெறும். கடைசி தினத்தன்று சிவாஜி பார்க்கில் நாலு லட்சம் பேர் கூடுவார்கள் என்று சுதாசமா எதிர்பார்க்கிறார்.

வேண்டாம் இந்தியன் ஏர்லைன்ஸ் கலாசாரம்!

பம்பாயைத் தலைமை அலுவலமாகக் கொண்டுள்ள Continental Aviation என்ற

வா.''

டிராயரை இழுத்து விட்டபடி ஜக்கு ஓடினான். ஒரு மூட்டையுடன் திரும்பினான்.

''டிராயர் ஏன் இவ்ளோ லூசா இருக்கு?''

''வளர்ற பையன், பெரிசாத் தைக்கணும்னு அப்பாதான் டெய்லர்கிட்ட சொல்லுவார், ஒவ்வொரு வாட்டியும். இதுக்குள்ள ரெண்டு ஜக்கு பூந்துக்கலாமில்லே?''

மைதிலி சிரித்தாள்.

''இனிமே நானே உனக்குத் தைச்சித் தரேன், கரெக்டா.''

''உங்களுக்குத் தெரியுமா?''

''ஓ.''

''மிஷின்?''

''இருக்கு. எங்காத்துல இருக்கு. கொண்டு வந்துடறேன்.''

''வேற என்ன தெரியும், உங்களுக்கு?''

''அட! இன்டர்வியூவா?''

அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. தலையைக் குனிந்து கொண்டான்.

ஜக்குவுக்கு, தன்னால் இத்தனை தூரம் ஒரு முன்பின் தெரியாத பெண்ணிடம் பேசமுடியுமா என்று ஆச்சரியமாக இருந்தது. அவனளவில் அறிந்த பெண்கள் அம்மாவும், அகிலாவுமாகவே இருந்தார்கள். அம்மாவைப் 'பெண்' என்றெல்லாம் அவனால் நினைத்துப் பார்க்க முடிந்ததில்லை. அம்மா, அம்மாதான்! பெண்ணாவது, ஒண்ணாவது!

அகிலா, அவனைப் பெரிதும் வம்புக்கு இழுக்கும் ஜந்து. தேர்வுகளில் ரேங்க் குறைவதை அடிக்கடி சுட்டிக் காட்டி மட்டம் தட்டும் அற்ப ஜீவன். அவளுக்கென்ன தெரியும், நாலாங்கிளாஸ் சிரமம்? டீச்சரைக் குழையடித்து மூணாம் கிளாஸிலிருந்து டபுள் பிரமோஷனில் ஐந்தாவதுக்குப் போய்விட்டவள். அம்மா சொல்லியிருக்கிறாள்.

அண்ணன்களுடனான அவனது உறவும் கூட சொல்லிக் கொள்ளும்படியாக எப்போதும் இருந்ததில்லை. அந்த வீட்டில், ஜக்கு என்றொரு ஜீவனும் வாழ்கிறது என்ற நினைவு அவர்களுக்கு இருக்குமானால், அதுவே அதிகம். போன வாரம் கூட, அனந்தராமன் இதுகுறித்துத் தன் மனைவி விடம் பேசிக் கொண்டிருந்தது, எதேச்சை யாக மாடிக்கு வந்த ஜக்குவின் காதில் விழுந்தது.

''இது தப்போன்னு உறுத்தலாவே இருக்கு. கல்யாண வயசுல ஒரு பையனும், கத்தரிக்காய் சைஸ்ல ஒரு பையனும்.... என்னமோ குற்ற உணர்ச்சியாவே இருக்கு.''

''அதுக்கென்ன பண்றது? நமக்கு பகவான் விதிச்சது அதுதான்!''

வாழ்க்கையின் பெரும் பொழுதை, சோப்புக் கரைசலில் ஸ்ட்ரா நுழைத்து, வாயால் ஊதி, கண்ணாடி பலூனாய்

நிறுவனம் விமானிகளுக்காகப் பம்பாய்ப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தது. இந்த விளம்பரத்தின் ஒரு வரி சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. அது - Pilot's with Indian Airlines Culture need not apply என்பதே. இதைப் பற்றி இந் நிறுவனத்தின் தலைமை அதிகாரி கூறியது: ''எங்கள் கம்பெனியில் சேரும் விமானிகள் நொண்டிச் சாக்குகள் கூறி விமானம் ஓட்டாமல் இருக்கக் கூடாது. தங்களது உடைமைகளைத் தாங்களேதான் எடுத்துச் செல்ல வேண்டும்...''



● ஹர்ஷத் மேத்தா



● கராய் சசாய்

பிரச்னை கிளப்பும் பிட்சு

புத்த கயா மற்றும் எல்லா புத்த மத கோவில்களும் புத்த மதத்தினராலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இதில் முக்கிய பங்கு வகிப்பவர் நாக்பூரில் வசிக்கும் ஜப்பானைச் சேர்ந்த கராய் சசாய் (Suroi Sasai) ''ராமர் ஒரு காவியத் தலைவர் மட்டும்தான். ஆனால் புத்தரோ ஒரு சரித்திர புருஷராவார். அயோத்தியில் ராமர் கோவில் கட்ட வேண்டும் என்று வாதாடும் விஸ்வஹிந்து பரிஷத் புத்தர் கோவில்களை எங்களிடம் விட ஏன் மறுக்கிறது?'' எனக் கேட்கிறார் இவர்.

- அம்ருதா பார்த்தசாரதி

முட்டை விடுவதிலேயே கழித்து வந்த ஜக்குவுக்கு, திடீரென்று ஏற்பட்ட இந்த மன்னி உறவு வியப்பாக இருந்தது. சந்தோஷமாக இருந்தது. தன்னையும் மதித்து அவள் சகஜமாகப் பேசுவது சற்று ஆறுதலாகக் கூட இருந்தது.

இன்னொரு முக்கிய விஷயம், பெண் பார்க்கப் போனபோதே அவளை அவனுக்குப் பிடித்து விட்டது. வெள்ளை என்று சொல்ல முடியாவிட்டாலும் லட்சணமாக இருந்தாள். ட்யூப்லைட் ஒளியில், அவள் மூக்குத்தியின் சுடர், உதட்டில் பட்டுத் தெறித்தது அழகாக இருந்தது. அடிக்கடி படபடக்கும் இமைகளும், நிரந்தரமாய் உதடுகளில் இழையோடும் ட்ரேட் மார்க் புன்னகையும் - அன்றே அவனுக்குப் பிடித்து விட்டது.

மேற் கொண்டு பேச்சைத் தொடர, தன் தினசரி அனுபவங்களைக் கருப்பொருளாக்கிக் கொண்டான். கடா மீசைக் கணக்கு வாத்தியார். அவனுக்கு, அவரைப் பிடிக்காது. அவர் சொல்லித் தரும் முறை, ஒரு நான்காம் வகுப்புப் பையன் புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லை. மேலும், மாணவர்கள் மீதான அவரது விரோத பாவம். கையைத் திருப்பி மடக்கச் சொல்லி விரல் முட்டுக்களில் அவர் பிரம்பால் அடிப்பது. அதனால் மட்டுமே தான் வகுப்பு மாற விரும்புவது.

அவனுக்கு மைதிலியிடம் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. அத்தனையையும் ஒரே மூச்சில் கொட்டிவிட விரும்பினான். அம்மா மட்டும் சாப்பிடக் கூப்பிடாமலிருந்தால் முடித்திருப்பான்.

ஆனால் எதற்கும் கைவசம் ஸ்டாக் வைத்திருப்பது நல்லதுதான். எல்லாவற்றையும் இன்றே சொல்லி விட்டால், நாளை? நாளை மறுநாள்? ஆகவே சாப்பிடச் சென்றான்.

மத்தியான உணவு முடிந்ததும் அப்பா, எதிர்வீட்டு பத்மநாப ஐயங்காருடன் அரட்டைக்குச் சென்று விட்டார். அம்மாவும், அகிலாவும் உண்ட மயக்கத்தில் இருந்தார்கள். அண்ணாவின் நண்பர்கள் வந்திருந்தார்கள். மைதிலி ஏன் அநாவசியமாக அவர்களிடம் போய் சிரித்துப் பேச வேண்டும்? அதுவும் அந்த மாங்காய்த் தலையனை ஜக்குவுக்கு சுத்தமாகப் பிடிக்காது. அவனும், அவனது சோடா புட்டியும்!

ஜக்கு, தன் நண்பன் கதிர்வேலுவைப் பார்க்கக் கிளம்பினான். இது ஒன் அண்ட் டு வேளை. கதிர்வேலு வீட்டிற்கு வந்திருப்பான்.

தனக்குக் கிடைத்திருக்கும் ஓர் அற்புதமான ஸ்நேகம் பற்றிய மகத்தான முன்னுரையுடன் ஜக்குவின் பேச்சு இருக்கும்.

''டேய் கதிர்! சாயங்காலம் எங்க வீட்டுக்கு வரியா?''

''எதுக்குடா?''

''எங்க மன்னி வந்திருக்காடா. பயங்கரமான நல்லவங்கடா. வந்தவுடனே ஃபிரெண்டாயிட்டாங்க, தெரியுமா? ஹோம் ஒர்க் எல்லாம் சொல்லிக் குடுத்தாங்க.''

''நான் எதுக்கு வரணும்?''

''இன்ட்ரொட்யூஸ் பண்ணி விடறேன்டா. நீ வாயேன். பார்த்ததும் அசந்துடுவே. அவ்ளோ அழகு!''

ஜக்குவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. இது நாள் வரை அவன் சந்தித்திராத தேவதையாக, மைதிலி அவனுக்குத் தெரிந்தாள். இனி அவன் வீட்டிலேயே இருக்கப் போகிறவள். ஹோம் ஒர்க் உள்பட அவனுடையதான அத்தனை பிரச்னைகளுக்கும் இனி அவளிடம்தான் ஆலோசனை கேட்கப் போகிறான். இனி, அவன் அகிலாவுடனான அனாவசிய சண்டைகளில் பங்கெடுக்கப் போவதில்லை. சோப்பு முட்டை விளையாட்டுக்கு இனி சந்தர்ப்பம் கிடைக்குமா என்று தெரியவில்லை.

அடடா! அவன் எத்தனை மடத்தனம் பண்ணி விட்டான்? வீட்டில் மைதிலி கொட்டு கொட்டென்று தனியாகவா உட்கார்ந்திருக்கிறாள்? அண்ணாவின் நண்பர்களான தடியர்கள் எப்போதோ போயிருப்பார்கள். நமுவும் டிராயருடன், ஒரு கார்ட்டூன் மாதிரி அவன் அவசர அவசரமாக வீட்டுக்குப் போனான்.

வீடு நிசப்தமாக இருந்தது. மைதிலி எங்கே?

அண்ணாவின் அறையில் பேச்சுச் சப்தம் கேட்டது.

''...கார்த்தால ஒரே கஷ்டமாப் போயிடுத்து தெரியுமா? நீங்களானா, ரூமுக்குப் போய்ப் படுத்துட்டேள். உள்ள ஒரே உங்க ஜன கும்பல். உங்கம்மாவுக்கு, அவாளை பேக் பண்ணி அனுப்பற வேலை. உங்க தங்கையானா வெளில போயிட்டா. நடுக் கூடத்துல பேய் மாதிரி தனியா நின்னேன். நல்ல வேளை உங்க ஜக்கு வந்தான்.. சரி, கொஞ்ச நேரம் பேசிட்டிருக்லாம்னா, சரியான போர்! நல்லாவே அறுத்துட்டான்!''

ஸ்கூலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த கதிர்வேலு, வாசலில் ஜக்கு நிற்பதைப் பார்த்து, ''என்னடா, இப்பத்தானே போனே! அதுக்குள்ள வந்துட்டே?''

''ஒன்னுமில்லை. சாயங்காலம் நீ எங்க வீட்டுக்கு வர வேணாம்!''

''ஏன்டா?''

''நான் எங்க மன்னியோட காய் விட்டுட்டேன்!''

செண்பகம்
பிராண்ட்
சுத்தமான நெய்
100 கிராம் & 200 கிராம் பாக்கெட்டுகளிலும் கிடைக்கும்
தனலஷ்மி & கோ
36.M.G. புதூர் முதல் வீதி, திருப்பூர்-638 604
☎ 21557
BIJMA
Branch: கற்பகம் கார்ப்போரேசன், பம்பாய்-400086

வட்டமேஜை

அச்சேறும் முன்பே நடவடிக்கைகள்!

◆ 'சந்திரலேகா முகத்துக்குப் பிளாஸ்டிக் சர்ஜரி உண்டு. ஆனால் திறமையின்மையால் விகாரப்பட்டுப் போன தமிழக அரசின் முகத்துக்குப் பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய முடியாது' என்ற வரிகள் அட்சர லட்சம் பெறும். பாராட்டுக்கள்.

தென்காசி, தி. சிவசுப்பிரமணியன்.

◆ "ஒரு தவறான காரியம் இன்னொரு தவறுக்கு வழிவகுக்கும்" என சுட்டிக்காட்டி, தவறுகளை எடுத்துக் கூறி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஆட்சி மாற்றமே உகந்ததன்றி, தனி மனிதர் அனுதாபம் மூலம் கிடைக்கும் ஆட்சி அவலத்துக்கு உள்ளானதே எனக் கூறி, மக்களின் ஜனநாயக உரிமை மிதிக்கப்படுவதை உணர்த்தியது உங்கள் தலையங்கம்.

கும்பகோணம், ஆர். ராகவன்.

◆ சென்ற இதழ் தலையங்கம் கண்டேன். ஜெ. அரசு நீடிக்க வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஒரு அரசு என்னதான் தவறு செய்தாலும் மக்களால்தான் நிராகரிக்கப்பட வேண்டும் என்பது எந்த ஊர் நியாயம்? போக வேண்டிய அரசைக் கல்கி போன்ற பத்திரிகைகள் தடுத்தால் அது பெரும் பாவம்.

காரைக்கால், எஸ். அருண்.

◆ "நீடித்து நிலைக்குமா படிக்கும் பழக்கம்?" என்ற பேட்டிக் கட்டுரை படித்தேன். 'லெண்டிங் லைப்ரரி' நடத்துபவன் என்ற முறையில் சொல்லுகிறேன், அந்தக் கட்டுரையில் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தும் அனுபவரீதியான உண்மை! டி.வி., கேபிள் டி.வி., ஸ்டார் டி.வி., முதலிய சாதனங்களால் படிக்கும் பழக்கம் குறைந்துதான் போய் விட்டது. இது கவலைப்பட வேண்டிய விஷயம்தான்.

திருச்சி, செல்வன்ஜி.

◆ இந்திரா பார்த்தசாரதி கூறியிருப்பது போல், "வெளியிட்டால் மட்டும் போதாது; எங்கு கிடைக்கும் என்பதும் தெரிய வேண்டும்." அதிலும் புத்தகத்திற்கு அதிக விலை வைப்பதாலேயே பல புத்தகங்கள் மக்களைச் சென்றடைய முடிவதில்லை. உதாரணத்திற்கு சோனியா காந்தி எழுதிய "ராஜீவ்" புத்தகம். 1,500 ரூபாய் கொடுத்து அதை வாங்கக்கூடியவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?

சென்னை - 33, வி. எஸ். வாசன்.

◆ 'நஷ்டத்தை லாபமாகக் காட்டும் ஜாலவித்தை' படித்து மிக மிக ஆச்சரியம் ஏற்பட்டது. நிழலையே நிஜம் எனக் காட்டி, மக்களை ஏமாற்றிய வங்கிகளின் தவறுகளை நன்றாகத் தெரிந்து கொண்டோம்.

சிதம்பரம், ஆர். தமிழரசி.

◆ பெங்களூர் வாசகர் கேட்டிருந்த கேள்விக்கு நீங்கள் சொன்ன பதில், 'நச்'சென்றிருந்தது. 'பாரதம் என்ற மாபெரும் தேசமே, நமதாயிருக்க, எதற்கு சார் தனித் தமிழ்நாடு?' என்ற வரிகளைத் தேசிய ஒருமைப்பாட்டு தினத்தன்று படித்த போது, சிந்திக்கும்படி இருந்தது.

பெருஞ்சேரி, என். முருகேஷ்.

◆ முதுமைக் காலத்தில் தம்பதியினரைப் பிரிப்பது செடியிலிருந்து பறிக்கப்பட்ட மலர் விரைவில் வாடுவது போல் அவர்களை வாடச் செய்து விடுகிறது என்பதை உணர்த்தும் சிறுகதைக்கேற்ற நயமான தலைப்பு 'பறித்த மலர்கள்.'

காட்டூர், எஸ். அருள்மொழி.

◆ கல்கி 15.11.92 இதழில் அயோத்திக்குச் செல்வதற்குச் சரியான போக்குவரத்து வசதி கிடையாது என்று (ராமர் பிறந்த இடமும், சீதையின் சமையலறையும்) குறிப்பிடப்பட்டுள்ளது முற்றிலும் தவறு. லக்னோவிலிருந்து வாரணாசி செல்லும் ரயில் மார்க்கத்தில் அயோத்யா என்ற ரயில் நிலையமே உள்ளது. அயோத்யா பைசாபாத்திற்குப் பிறகு வரும் ரயில் நிலையம். தினமும் லக்னோவிலிருந்து அயோத்யா மார்க்கமாக வாரணாசிக்கு எட்டு ரயில் வண்டிகள் செல்கின்றன. விரைவு ரயில் வண்டிகளும் அயோத்யாவில் நின்று விட்டுத்தான் செல்கின்றன.

திருச்சி - 6, டி. என். ராம்கிருஷ்

◆ பொது மக்கள் சென்னை மாநகராட்சியில் ஒரு சுடுகாட்டில் அமைக்கப்பட்டிருப்பது போன்று சுற்றிலும் அடைப்புடன், புகை மேலே செல்வதற்கான புகைக் கூண்டுகள் கூடிய நவீன கொட்டகையை இராம் நகர் சுடுகாட்டில் கூடுதலாகக் கேட்கின்றனர். 'கல்கி' இதழ் மூலமாகப் பெறப்பட்ட இந்த கோரிக்கை ஏற்கப்பட்டு ரூ. 45,000/-க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விட்டன. தற்போது இப்பகுதியில் விடாது மழை பெய்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் பணி தொடங்க இயலவில்லை. மழை நின்றதும் பணிதொடங்கி இருபது தினங்களுக்குள் நவீன எரியூட்டுமிடம் ஏற்படுத்தப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி.

க. செ. கிருஷ்ணசாமி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,

(திருமதி கோவிந்தம்மாளின் வேண்டுகோளுக்கிணங்க, அவர் குடியிருந்து வரும் ஸ்ரீரங்கத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயே பணி செய்வதற்கான உத்தரவைப் பிறப்பித்திருப்பதோடு, குறைந்த கூலி நிர்ணயச் சட்டத்தின்படி அவரது சம்பளத்தை உயர்த்தவும் பணிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வருவாய் அலுவலர் பி. சோனை தமக்குத் தெரிவித்துள்ளார். இத்தனை துரிதமான நடவடிக்கைகளுக்கு வாசகர்கள் சார்பில் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் - ஆர்.)

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் (பதிவு)

39, பீமண்ண முதலி கார்டன் தெரு, சென்னை 600 018. தொலைபேசி: 73388

18 ஆம் ஆண்டு கலை விழா — 92 தொடக்க நாள் நிகழ்ச்சி

நாள், நேரம்: 1992 டிசம்பர் 11, மாலை 6 மணி இடம்: மியூசிக் அகாடமி ஹால்

விழாத் தலைமை: திரு. எம்.ஏ. சிதம்பரம், தலைவர், ஸ்பிக் லிமிடெட்.

விழாவில் திரு. லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் அவர்களுக்கு 'இசைப் பேரொளி' விருது வழங்கப்படும்.

பாராட்டுரை:

திரு. டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப., தலைமைச்செயலர், தமிழ்நாடு அரசு.

திரு. கே.என். வெங்கட சுப்பிரமணியன், தலைவர், இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷன், டில்லி.

லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் ஆடியோ காசெட் விழாவில் வெளியிடப்படும்.

விழா இறுதியில் கலாக்ஷேத்ரா குழுவினரின் 'பாதுகா பட்டாபிஷேகம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

அனைவரும் வருக!

12.12.92 முதல் 25.12.92 வரை

12.12.92 சனி

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன் இசைப்பேருரை
காலை 10 மணி	பி. ராஜம் ஐயர்
	திருப்பாற்கடல் வீரராகவன் கமலாகர்ராவ்
பிற்பகல் 2 மணி	அலிமாண்டேகவரி எல். நீனீர வி.ஆர். ஜெயக்குமார்
பிற்பகல் 3.15 மணி	பூஷணி கல்யாணராமன் கல்யாணி சங்கர் கல்யாத்தி ஸ்ரீதர்
மாலை 5 மணி	பி.எஸ். நாராயணஸ்வாமி வி. தியாகராஜன் சிவராமன் ஹரிசங்கர்
இரவு 7 மணி	அனிதாரத்னம் ப்ரீதா ரத்னம் பரதநாட்டியம்

13.12.92 ஞாயிறு

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன் இசைப்பேருரை
காலை 10 மணி	சங்கரன் நம்பூதிரி மீரா சிவராம கிருஷ்ணன் திருச்சூர் நரேந்திரன்
பிற்பகல் 2 மணி	அபர்ணா நந்தகுமார் வி. சுரேஷ் நாகை நாராயணன்
பிற்பகல் 3.15 மணி	சஞ்சய் சுப்பிரமணியம் விட்டல் ராமமூர்த்தி நெய்வேலி நாராயணன்
மாலை 5 மணி	லால்குடி ஜி.ஜே.ஆர். கிருஷ்ணன் & விஜயலக்ஷ்மி வயலின் இரட்
	ஜெ. வைத்யநாதன் வி. சுரேஷ்
இரவு 7 மணி	சுஜாதா விஜய் ஒடிசி நாட்டியம் (சங்கீத நாடக அகாடமி ஏற்பாடு)

14.12.92 திங்கள்

காலை 8 மணி	தோப்பில் லக்ஷ்மி நரசிம்மன் இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	ஆர். அந்துல் குமார் - புல்லாங்குழல் வி. பாலகிருஷ்ணன் கே. சந்தகுமார்

பிற்பகல் 2 மணி	பி.வி. கணேஷ் சீதாபதி டி.கே. ராமகிருஷ்ணன்
பிற்பகல் 3.15 மணி	சுவாமிமலை ஜானகிராமன் சி.ஏ. ராஜசேகர
	திருவிடைமருதூர் சங்கரன்
மாலை 5 மணி	● என். ரமணி டி. ருக்மணி சிவராமன் நாராயணஸ்வாமி
இரவு 7 மணி	● மகாராஜபுரம் ராமச்சந்திரன்

19.12.92 சனி

காலை 8 மணி	சுந்தர்குமார் இசைப்பேருரை
காலை 10 மணி	ஓ.எஸ். தியாகராஜன் மைசூர் மஞ்சுநாத் பம்பாய் பாலாஜி
பிற்பகல் 2 மணி	டி.சி.ஏ. சங்கீதா - வீணை கே. உமா சங்கர் ஆலம்பாக்கம் சங்கர்
பிற்பகல் 3.15 மணி	ஆனையம்பட்டி கணேசன் - ஜலதரங்கம் வி.எல். சுதர்சன் நிவாஸ் கிருஷ்ணன்
மாலை 5 மணி	பம்பாய் சகோதரிகள் சி.எஸ். சந்திரசேகரன்
	தஞ்சாவூர் சுப்பிரமணியம் கோவிந்தராஜன்
இரவு 7 மணி	டி.வி. கோபாலகிருஷ்ணன் டில்லி சுந்தரராஜன் ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ்
இரவு 7 மணி	● பரதநாட்டியம்

20.12.92 ஞாயிறு

காலை 8 மணி	சுந்தர்குமார் இசைப்பேருரை
காலை 10 மணி	பட்டமன்றம் ஸ்ரீராம் ட்ரஸ்ட் புத்தக வெளியீடு பரிசளிப்பு விழா
பிற்பகல் 2 மணி	ஆர். விஜயலக்ஷ்மி பரூர் வெங்கடராமன் ஆலத்தூர் டி. ராஜகணேஷ்
பிற்பகல் 3.15 மணி	கஸ்தூரி முரளி கிருஷ்ணா எம்.ஏ. கிருஷ்ணஸ்வாமி பாபநாசம் குமார்

15.12.92 செவ்வாய்

காலை 8 மணி	வி.வி. சேஷாத்திரி இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	குமாரி தேவி பூர்ணா சிவா காருக்குறிச்சி மோகனரங்கம்
பிற்பகல் 3.15 மணி	ஹைதராபாத் சகோதரிகள் (லலிதா & ஹரிப்பிரியா) எம். பாலகிருஷ்ணன் என். பாலசங்கர் என். கார்த்திக்
மாலை 5 மணி	கே.வி. நாராயணஸ்வாமி நாகை முரளீதரன் அருண் பிரகாஷ் சுந்தரம்
இரவு 7 மணி	நித்தியா மீனாட்சி (சுதாராணி ரகுபதியின் மாணவி) - பரதநாட்டியம்
இரவு 7 மணி	● கே.ஜே. ஜேசுதாஸ் பங்களூர் தியாகராஜன் திருவாரூர் பக்தவத்சலம் திருப்புனித்துறா வெங்கடேசன்

16.12.92 புதன்

காலை 8 மணி	வி.வி. சேஷாத்திரி இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	எம்.வி. கைலாசம் ஐ. வெங்கடேஸ்வரராவ் கல்யாணராமன்
பிற்பகல் 3.15 மணி	அனுராதா நாராயணஸ்வாமி ஆர்.கே. ஸ்ரீராம்குமார் ஆர். வைத்யநாதன் எம். சிவராமகிருஷ்ணன்
இரவு 7 மணி	ஊர்மிளா சத்தியநாராயணன் (கே.ஜே. சரசாவின் மாணவி) - பரதநாட்டியம்
மாலை 5 மணி	● டி.வி. சங்கர நாராயணன் வி.வி. சுப்பிரமணியம் பாலக்காடு ரகு டி.எச். விநாயக ராம்
இரவு 7 மணி	● இசைப்பேரொளி டி. ஸ்ரீனிவாசன் மாண்டலின் கன்னியாகுமரி கேவி. பிரசாந் டி.வி. வாசன்

17.12.92 வியாழன்

காலை 8 மணி	வி.வி. சேஷாத்திரி இசைப்பேருரை
பிற்பகல் 2 மணி	வி. ராஜேஷ் மாண்டலின் துரை பாலசுப்ரமணியம் ஏ.எஸ். ரங்கநாதன் ஏ.எஸ். சங்கர்
பிற்பகல் 3.15 மணி	ப்ரியா சகோதரிகள் (ஹரிப்ரியா & சண்முகப்ரியா) சிவராமன் டி. சிவாம் சுந்தர் செல்வகணேஷ்
இரவு 7 மணி	கல்பனாதிகா (வேம்பட்டி சின்ன சத்தியம் மாணவி) - குச்சிப்புடி
மாலை 5 மணி	● ஈ. காயத்ரி - வீணை ஆர். ரமேஷ் டி.டி. பாலசுப்ரமணியம்
இரவு 7 மணி	● எம்.எஸ். கோபாலகிருஷ்ணன் நர்மதா கோபாலகிருஷ்ணன் - வயலின் இரட்டை குருவாயூர் துரை.

18.12.92 வெள்ளி

காலை 8 மணி	சுந்தர்குமார் இசைப்பேருரை
...	...
காலை 10 மணி	வாத்யவிருந்தா
பிற்பகல் 2 மணி	பத்மா கிருஷ்ணன் பிரபா கிருஷ்ணன் ஹரி குமார் சுப்பிரமணியம்
பிற்பகல் 3.15 மணி	பவானி கோவிந்தன் காயத்திரி ஸ்ரீராம் பிரம்மானந்தம்
மாலை 5 மணி	மணி கிருஷ்ணஸ்வாமி லலிதா ராகவன் கே.ஆர். கணேஷ்
இரவு 7 மணி	இசைப்பேரொளி ரவிகிரண் சித்ர வீணை நர்மதா டி.கே. மூர்த்தி கே.எஸ். ரங்காச்சாரி
இரவு 7 மணி	● உஷா ராகவன் (அடையாறு லக்ஷ்மணன் மாணவி) - பரதநாட்டியம்

22.12.92 செவ்வாய்

காலை 8 மணி	சிதம்பரம் ஸ்வாமிநாதன் இசைப்பேருரை
காலை 10 மணி	ஹைதராபாத் சகோதரர்கள் டி. சேஷாச்சாரி & ராகவாச்சாரி பெரி ஸ்ரீராமமூர்த்தி மகாதேவலக்ஷ்மி நாராயணராஜு கே.வி.ஆர்.எஸ். மணி
பிற்பகல் 2 மணி	ஏ. புஷ்பலிங்கம் டி.எஸ். நாராயணராவ் நெய்வேலி பி. வெங்கடேஷ்
பிற்பகல் 3.15 மணி	மால்குடி விஜயலக்ஷ்மி பகாலா ராமதாஸ் கணபதிராமன்
இரவு 7 மணி	மைதிலி குமார் அபிநயா டான்ஸ் கம்பெனி, யு.எஸ்.ஏ. - பரத நாட்டியம்
மாலை 5 மணி	● மதுரை டி.என். மணி மைசூர் நாகராஜ் ஸ்ரீகந்த பிரசாந் கணபதி ராம்கோபால்
இரவு 7 மணி	● டி.என். சேஷகோபாலன் வி.வி. ரவி குருவாயூர் துரை

23.12.92 புதன்

காலை 8 மணி	பி. மாதவன் இசைப்பேருரை
காலை 10 மணி	என்.சி. சௌந்தரவல்லி துவாரம் மங்கதாயாரு மதுரை ராமையா
பிற்பகல் 2 மணி	என். காயத்ரி மேல் காவேரி பாலாஜி தியாகராஜன் என். ஸ்ரீதர்
பிற்பகல் 3.15 மணி	பிருந்தா வெங்கட்ராமன் திருவாரூர் பாலம் சுபாஷ் பஞ்சாபகேசன்
மாலை 5 மணி	இசைப்பேரொளி சுதா ரகுநாதன் உஷா ராஜகோபால் திருவாரூர் வைத்யநாதன்
இரவு 7 மணி	சுதாராணி ரகுபதி - நாட்டிய நாடகம்

24.12.92 வியாழன்

காலை 8 மணி	டி.எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் இசைப் பேருரை
காலை 10 மணி	நெய்வேலி சந்தானகோபாலன் திருச்சி ராமானுஜாச்சாரியலு தஞ்சாவூர் ராமதாஸ்
பிற்பகல் 2 மணி	பிரேமா ரங்கராஜன் டி. ஜெயபாலின் மைசூர் கோபாலகிருஷ்ணன்
பிற்பகல் 3.15 மணி	அருணா சாயிராம் கல்பனா கிஷோர் காரைக்குடி ஜெயராம்
மாலை 5 மணி	சிக்கல் சகோதரிகள் ராதா நாராயணன் மன்னார்குடி சம்பரன் ராமாச்சாரி
இரவு 7 மணி	பரத கலாஞ்சலி வழங்கும் தனஞ்சயன் பங்கேற்கும் 'தியாகராஜ வைபவம்' நாட்டிய நாடகம்

25.12.92 வெள்ளி

காலை 8 மணி	'பதி ஒளி' நூல்வெளியீட்டு விழா
காலை 10 மணி	கதிரி கோபால்நாத் - சாக்ஸபோன் எம்.எஸ். கோவிந்தசாமி அர்ஜுன் குமார்

*● குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஆர்.ஆர். சபா, சுந்தரேஸ்வரர் தெரு, மயிலாப்பூரில் நடைபெறும். இதர நிகழ்ச்சிகள், பாரதிய வித்யா பவன் (ஏ.சி. ஹால்), கிழக்கு மாட வீதி, மயிலாப்பூரில் நடைபெறும்.

சீசன் டிக்கட்டுகள் கிடையாது. அன்றாட டிக்கட்டுகள் மட்டுமே விற்கப்படும். அன்றாட டிக்கட்டுகள் குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். காலை 8 மணி முதல் பிற்பகல் 3.15 மணி வரையிலான நிகழ்ச்சிகளில் அனைவருக்கும் அனுமதி. அன்றாடக் கட்டணங்கள்: ரூ.100, 50, 25, 15. அன்றாட டிக்கட்டுகள் நிகழ்ச்சிக்குரிய நாளுக்கு இரண்டு தினங்கள் முன்பு மட்டுமே விற்கப்படும். டிக்கட்டுகள் விற்பனை: பாரதிய வித்யா பவன் மற்றும் ஆர்.ஆர். சபா.

ஏ.வி.எஸ். ராஜா தலைவர்	எச். கிருஷ்ணமூர்த்தி (C.M.D./M.R.L.) விழாக்குழு தலைவர்	ஆர். ராஜகோபால், எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி செயலாளர்கள்

Efficient

கம்ப்யூட்டில் ஒரு குக்கூ பாட்டு!

"தம்பி, நீங்க இந்த கம்ப்யூட்டர் சமாசாரத்திலெல்லாம் பெரிய ஆளுன்னு கேள்விப்பட்டேன். நம்ம தொழிலுக்கு உங்களால உதவ முடியுமான்னு தெரிஞ்சுக்கத்தான் கூப்பிட்டு அனுப்பிச்சேன்...:" கவிஞர் வைகை வளவன் பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தார்.

"நீங்க கவிதை எழுதறவுங்க; நானோ 'ஸாஃப்ட்வேர்' எழுதறவன்; என்னங்க மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுறீங்க?" என்றேன்.

"என்ன தம்பி! இந்தக் காலத்திலே கம்ப்யூட்டர் நுழையாத இடமே இல்லைங்கிறாங்க. இப்போ கம்ப்யூட்டர் ஒன்னை வெக்கக்கிட்டு கவிதை தயார் பண்ணித் தர முடியாதா?"

எனக்குச் சுவாரசியம் தட்டியது.

விலாவாரியாய்ப் புரிந்து கொள்ள கவிஞரைப் பல கேள்விகள் கேட்டேன். எனக்கு அடிப்படைத் தேவையாக 'டேட்டா பேஸ்' வேண்டிய அவசியத்தை விளக்கினேன். கவிஞர் தாம் எழுதிய சினிமாப் பாட்டுகள் அடங்கிய நோட்டுப் புத்தகங்கள் சிலவற்றையும், பழுப்புக் கலரில் சினிமாப் பாட்டுப் புத்தகங்கள் சிலவற்றையும் கொண்டு வந்து போட்டார்.

"இதிலெல்லாம் நான் எழுதின பாட்டுகள் இருக்கு; இன்னிக்கி ஃபீல்டிலே இருக்கிற மத்த கவிஞர்கள் எழுதின பாட்டுகள் சிலதும் இருக்கு; இதெல்லாம் படிச்சுப் பாருங்க; ஒரு ஐடியா கிடைக்கும்" என்று சொல்லி வழியனுப்பி வைத்தார்.

கவிஞர் தந்த நோட்டுகளையும் பாட்டுப் புத்தகங்களையும் ஒரு வரி விடாமல் படித்துக் குறிப்புகள் எடுத்துக் கொள்ளச் சில பல இரவுகளைத் தியாகம் செய்தேன். அவ்வப்போது கவிஞருக்கு ஃபோன் செய்து சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொண்டேன்.

ஒரே வாரத்தில் 'சினிமாக் கவிதை' ஸாஃப்ட்வேரின் 'லாஜிக்' பிடிபட்டுப் போயிற்று. கவிதையை உருவாக்க அவசியமான வார்த்தைகளின் 'டேட்டா பேஸ்' ரொம்பச் சின்னதாய் இருந்தது வசதியாகி விட்டது.

'டேட்டா பேஸ்' தயாரானதும், மளமளவென்று ஒரே மாதத்தில் 'புரோக்கிராம் கோட்' எழுதி, 'டைப்' செய்து, 'கம்பைல்' செய்து முடித்து, கவிஞரைச் சோதனைக்குக் கூப்பிட்டேன்.

கவிஞர் வைகை வளவன் கம்ப்யூட்டரின் மானிட்டர் முன்பு வந்து உட்கார்ந்து கொண்டார். மனைவியைக் கூப்பிட்டு, கம்ப்யூட்டருக்குக் குங்குமப் பொட்டிட்டு, சூடம் காட்டிச் சொல்லி தொட்டுக் கும்பிட்டார். நான் கம்ப்யூட்டரின் சுவிட்சைப் போட்டு 'பூட்' செய்து 'டாஸ் பிராம்ப்டில்' FILMSONG. EXE ஃபைலைக் கூப்பிட்டு பட்டனைத் தட்டினேன்.

அரை நிமிடக் காத்திருப்புக்குப் பின் 'மெயின் மெனு' திரையில் வந்தது :

1. டூயட், 2. டப்பாங்கூத்து, 3. டிஸ்கோ, 4. நாயகி வர்ணனை, 5. குடிகாரன் பாட்டு, 6. தத்துவப் பாட்டு, 7. பக்திப் பாட்டு. எது வேண்டும்?"

'கர்ஸர்' பதிலுக்காக மினுக்கியபடி காத்திருந்தது. கவிஞர் 'டூயட்'டைத் தெரிவு செய்ய, மானிட்டரில் அடுத்த 'மெனு' வந்தது :

"1. கிராமத்துப் பாட்டா?, 2. நகரத்துப் பாட்டா? எது வேண்டும்?"

கவிஞர் 'கிராமத்துப் பாட்டை' செலக்ட் செய்ய, அடுத்த கேள்வி :

"1. தகிட தகிட, 2. தரிகிட தரிகிட, 3. தகிட தரிகிட. என்ன சந்தம்?"

கவிஞர் 'தகிட தகிட' வென்றார். திரையில், "பாடல் உருவாகிறது; சற்றே பொறுங்கள்..." என்று மின்னி மின்னி வர, கவிஞர் டென்ஷனோடு நகத்தைக் கடித்தவாறே திரையை வெறித்துக் கொண்டிருந்தார். ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு, பளிச்சென்று மானிட்டர் திரையில் பாட்டு வந்தது :

"கூக்கூ, கூக்கு கூக்கூ...
சின்னக் குயிலு பாடுது
சின்னப் பூவு விரியுது
என் அத்தை மவளே உனைக் கட்டியணைக்க
சித்திரை மாதம் வந்ததடி
மாராப்புக்குள்ளே உள்ள மனசு
மாமனை எண்ணி மயங்குதடி!

சாந்தீமஜா



மன்மதன் பாணம் பட்டுடுச்சி
சந்தனக் காத்தும் கட்டுடுச்சி
கூக்கூ... கூக்கு, கூக்கூ...

கவிஞர் சந்தோஷத்தில் நாற்காலியிலிருந்து எம்பிக் குதித்தார்! ''அற்புதம்! அற்புதம்!'' என்று கத்தினார்; ''என் கவிதைப் பாணியை அப்படியே கொண்டு வந்து அசத்திட்டீங்களே!'' என்று என் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

''வேற காம்பினேஷன் டிரை பண்ணிப் பாருங்க'' என்றேன். கவிஞர் மீண்டும் 'மெயின் மெனு'வுக்குப் போய் 'பக்திப் பாட்டை' செலக்ட் செய்ய, ''என்ன சாமி?'' என்று மானிட்டரில் வந்த கேள்விக்கு ''மாரியாத்தா'' எனக் கொடுக்க, அரை நிமிஷத்தில் திரையில் பாட்டு வந்தது :

''ஊ... ஓஓஓஓ....
ஆத்தா ஆத்தா எங்க மாரியாத்தா
நீதான் நீதான் எங்க தெய்வ மாத்தா
மஞ்சக் குளிக்க குங்குமம் சூடி
மனசாரத் துதிச்சோம் மாரியாத்தா
வேப்பிலையைச் சூடி வேண்டும்
வரம் தேடி
உன்னடியை நாடி வந்தோம்
சூலியாத்தா...''

கவிஞருக்குப் பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கண்ணீரே வந்து விட்டது! வெவ்வேறு காம்பினேஷன்களைப் போட்டுப் போட்டுப் பார்த்தார்; கம்ப்யூட்டர் தந்த கவிதைகளைப் 'பிரிண்ட்டரில்' அடித்து வாங்கிக் கொண்டார்.

''கடைசியா ஒரு 'டிஸ்கோ' பாட்டு போட்டுப் பார்த்துடலாம்,'' என்றவாறே கவிஞர் மெனு வில் ''டிஸ்கோ பாட்டு'' - ''பெண்கள் கோரஸ்'' என்று செலக்ட் செய்தார். திடீரென்று மானிட்டர் திரையில் ஏதேதோ 'பளிச் பளிச்'சென்று வெளிச்சமும் புள்ளிகளும் தெரிந்தன.

''என்ன தம்பி, சும்மா 'டிஸ்கோ' எஃபெக்ட்டும் பாட்டுக் கூட வரும் போலிருக்கு!'' என்று அதிசயித்தார். நான் குழம்பிப் போனேன்; அப்படி ஒன்றும் நான் 'புரொக் ராம்' செய்யவில்லையே? சற்றுக் கவலையுடன் நான் பார்த்துக் கொண்டிருக்கையில், மானிட்டரில் பாட்டு ஒன்று கந்தர கோலமாக வெளிவந்தது :

''ரோ சா ப் பூ வே டிஸ்கோ, ஆத்தா ஆளு ஜொள்ளு
சமைஞ்ச மச்சான் மாராப்பு, மயிலுப் பாட்டு குக்கூ
மன்மத ஆத்தா மாமோய், மல்லு வேட்டி ராசாத்தி
ஜாங்கு ஜக்கு கோவிலிலே, முருகா லல்லல்லல்லா....''

நானும் கவிஞரும் அதிர்ந்து போய் நின்றோம். நான் கவிஞரை நகரச் சொல்லி விட்டு ஸாஃப்ட்வேரில் கோளாறு ஏதேனும் உள்ளதா என்று ஆராய ஆரம்பித்தேன்.

''ஏன் இப்படி ஆச்சுன்னு புடிபடலீங்க; நான் எல்லாத்தையும் சரிபண்ணி நாளைக்குக் கொடுத்திடறேன்,'' என்றேன் கவிஞரிடம்.

''ஓ. அதனால என்ன? ரெண்டு நாள் கூட ஆனாலும் பரவாயில்லை. வீட்லே கொண்டு வந்து குடுத்திடுங்க'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினார். வாசல் வரை போனவர், திரும்பி வந்து,

''ஏன் தம்பி, கடைசியா அந்த 'டிஸ்கோ' பாட்டு போட்டமே அதோட 'பிரிண்ட்' எடுத்துத் தர முடியுமா? எனக்கென்னமோ அதை அப்படியே எடுத்து உட்டா 'சூப்பர் ஹிட்' ஆயிடும்னு தோணுது,'' என்றார்.

நான் வாயைப் பிளந்து கொண்டு நின்றேன்!

சக்கரவர்த்தித் திருமகன்

10. வேள்வி காத்தது

காலையானதும் முனிவர் சக்கரவர்த்தித் திருமகனைப் பக்கத்தில் உட்கார வைத்து, ''அப்பனே! உனக்கு மங்களம். என் உள்ளம் திருப்தி அடைந்தது. நீ செய்த காரியத்துக்காக உனக்கு நான் செய்யக்கூடிய கைம்மாறு என்ன இருக்கிறது? இப்போது உனக்கு அஸ்திர உபதேசம் செய்யப் போகிறேன்; பெற்றுக் கொள்வாயாக'' என்று சொல்லி முறைப்படி ராமச்சந்திரனுக்குத் தம் தவத்தினால் பெற்ற சகல திவ்யாஸ்திரங்களையும் உபதேசித்தார்.

அந்தந்த அஸ்திரங்களைப் பிரயோகிக்கவும் அவற்றை அடக்கிப் பின் திருப்பவும் மந்திரங்களையெல்லாம் உபதேசித்தார். அஸ்திரங்களுக்குரிய தேவதைகளும் ராமனுக்குப் பிரத்யட்சமாகத் தரிசனம் தந்து விட்டு, ''உன் உத்தரவுக்கு அடங்கி எல்லாம் செய்வோம்'' என்று சொல்லி மறைந்தன. ராமச்சந்திரனும் அவற்றையெல்லாம் தம்பி லக்ஷ்மணனுக்கும் உபதேசித்தான்.

அஸ்திர மந்திரங்களை ராமன் சரியாகப் பெற்றானா என்பதைப் பரீக்ஷை செய்து திருப்தியடைந்த பிறகு, ''இந்த அஸ்திரங்களைக் கொண்டு தேவாசுர கந்தர்வ உரகர்களையும் நீ யுத்தத்தில் அழித்து வெற்றி பெறுவாய்'' என்று ராமனை முனிவர் ஆசீர்வதித்தார்.

கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின் ராமன் முனிவரைக் கேட்டான் : ''அதோ, அங்கே தென்படுகிறதே பெரிய மலையும் ரமணீயமான வனமும், அதுவா நாம் போக வேண்டிய இடம்? உங்கள் வேள்வியைக் கெடுக்கும் துராத்மாக்கள் யார்? அவர்களை ஒழித்துத் தீர்க்க நாம் என்ன வெல்லாம் செய்ய வேண்டும்? எனக்கு விவரமாகச் சொல்லுவீர்'' என்றான்.

ராமச்சந்திரனுடைய கை துடித்தது. யுத்தம் செய்து வெற்றி பெற்று முனிவருடைய ஆசீர்வாதத்தைப் பெற ஆவல் கொண்டான்.

''அப்பனே! அந்த இடம்தான் நாம் போக வேண்டிய இடம், அதுவே ஆதி நாராயணன் முன்னாள் தவமிருந்த இடம். மகா விஷ்ணு, வாமனனாக அவதரித்த இடமும் அதுவே. அதனாலேயே அந்த ஆசிரமத்துக்குப் பெயர் சித்தாசிரமம் என்று வழங்கி வருகிறது'' என்றார் முனிவர்.

பிரஹலாதனுடைய மகனான விரோசனனுடைய புத்திரன் மகாபலி என்ற அசுரன் புகழுடன் அரசு புரிந்தான். அவனுடைய ஆதிக்கப் பெருக்கத்தைக் கண்டு தேவர்கள் பயந்தார்கள். இந்திரன் ஆதிக்கத்தையெல்லாம் மகாபலி ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான்.

இந்திரனைப் பெற்ற காசியப முனிவரும் மனைவி அதிதியும் மகா விஷ்ணுவைக் குறித்துப் பெரும் தவம் செய்து, ''லோக நாதனே! எங்களுக்குப் புத்திரனாகவும் இந்திரனுக்குத் தம்பியாகவும் நீயே அவதரித்து இந்திரனையும் தேவர்களையும் மகாபலியினிடமிருந்து காப்



பாற்றுவாயாக!'' என்று பிரார்த்தித்தார்கள். அதன்மேல் மகா விஷ்ணு வாமனாவதாரம் எடுத்து, அதிதிக்கு மகனாகப் பிறந்து வளர்ந்தான்.

மகாபலி செய்த ஒரு யாகத்திற்கு அழகிய சிறு பிரம்மசாரியாக வாமனன் சென்றான்.. மகாபலியின் ஆசாரியரான சுக்கிரர் - அசுர குலத்துக்கு இவர் தான் குரு - விஷயத்தைத் தெரிந்து கொண்டு 'இந்த பிராமணன் யாசிப்பதைத் தர வேண்டாம்' என்று எச்சரித்தார்.

''என் பாதத்தால் அளந்த மூவடிப் பிரதேசம் வேண்டும்'' என்று சிறுவன் கேட்டதை பலிச் சக்கரவர்த்தி ''தந்தேன்'' என்று ஜலம் வார்த்துத் தந்து விட்டான். ''மகா விஷ்ணுவே என் யாகத்தில் வந்து யாசகம் கேட்டுப் பெறுவதை விட எனக்கு என்ன மேலான நன்மை உண்டு'' என்று தன் ஆசாரியருக்குச் சொல்லி விட்டான்.

வாமனன் உடனே திரிவிக்கிரமனாகி வளர்ந்தோங்கிப் பூவுலகம் ஓரடியாலும் வானுலகம் ஓரடியாலும் அளந்து விட்டான். மூன்றாவது அடியாகத் தன் திருப்பாதத்தை நாராயணன் மகாபலிக்கு அபயம் என்று அவன் தலைமேல் வைத்தான். உலகப் பரப்புக்குச் சமானம் பக்தனுடைய தலை என்பது இந்தக் கடைசி நிகழ்ச்சியின் பொருள். ஏழு சிரஞ்சீவிகளுள் ஒருவன் ஆனான் மகாபலி.

இந்தப் புண்ணிய கதையைச் சொல்லி ''ஆதியில் நாராயணன் தவமிருந்ததும், பிறகு காசியபர் தவம் செய்து தேவர்களைக் காப்பாற்ற வாமனனைப் பெற்றதுமான இந்த இடம் சித்தாசிரமம் என்கிற பெயர் பெற்றது. இந்தப் புண்ணியப் பிரதேசத்தில் நானும் ஆசிரமம் அமைத்து அதில் இருந்து வருகிறேன். என்னுடைய வேள்விக்குத் தடையாக அரக்கர்கள் இந்த வனத்துக்கு வந்து வேதனை செய்கிறார்கள். யாகம் நடைபெறாமல் செய்து விடுகிறார்கள். இப்போது நீ வந்திருப்பதே அவர்களுடைய முடிவு'' என்றார் விசுவாமித்திரர்.

''அப்படியே ஆகுக'' என்றான் ராமன்.

அரச குமாரர்களுடன் விசுவாமித்திரர் வந்து விட்டதைக் கண்டு அங்குள்ள மற்ற ரிஷிகள் மிக மகிழ்ச்சியடைந்து ஒருவர் பின் ஒருவராக வந்து முனிவரை வணங்கி வரவேற்றார்கள். ராஜகுமாரர்களுக்கும் முறைப்படி அதிதி பூஜை செய்து அமர்ந்தார்கள்.

''இன்றே தாங்கள் யாகதீக்ஷையெடுக்கலாம்'' என்று சக்கரவர்த்தித் திருமகன் பரபரப்புடன் முனிவருக்குச் சொன்னான். அவ்வாறே விசுவாமித்

ராஜாஜி

திரர் வேள்வித் துவக்கத்துக்கு உரிய விரதம் அன்றிரவு எடுத்துக் கொண்டார்.

மறுநாள் காலை சீக்கிரமாகவே ராஜ குமாரர்கள் எழுந்து யாகசாலையிலிருந்த முனிவரை வணங்கி ''ராக்ஷசர்கள் எப்போது வருவார்கள்? நாம் அஜாக்கிரதையாக இருக்கக் கூடாதல்லவா? எங்களுக்கு விவரமாகச் சமயத்தைத் தெரியப்படுத்த வேண்டும்'' என்றார்கள்.

அங்கிருந்த ரிஷிகள் இதைக் கேட்டு வெகு சந்தோஷமடைந்தார்கள்.

''முனிவர் விசுவாமித்திரர் மௌன விரதத்திலிருக்கிறபடியால் இனிப் பேச மாட்டார். ஆறு நாட்கள்; இரவும் பகலும் நீங்கள் தூங்காமல் யாகத்தைக் காப்பாற்ற வேண்டும்'' என்றார்கள்.

ராஜ குமாரர்கள் வில்லும் கையுமாக ஆறு நாட்கள் இரவும் பகலும் காத்தார்கள். ஆறாவது நாள் காலையில் லக்ஷ்மணனுக்கு ராமன் சொன்னான்: ''தம்பி! இப்போது வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதுதான் அரக்கர்கள் வரும் சமயம்'' என்றான்.


இதைச் சொல்லும் போதே, அக்னி குண்டத்திலிருந்து நெருப்பு கொழுந்து விட்டு எழுந்தது. ராக்ஷசர்கள் ஆகாயத்தில் வந்து நின்றது அக்னிக்குத் தெரியும். யாக காரியம் சகலமும் கிரமமாக நடந்து கொண்டிருக்க, மேலே ஆகாயத்தில் ஒரு பெரும் கர்ஜனை கேட்டது. ராமன் மேலே பார்த்தான்.

மாரீசனும் சுபாஹுவும் அவர்கள் பரிவாரமும் மாமிசமும் ரத்தமும் வேதிகையின் மேல் சொரிந்து யாகத்தைக் கெடுக்க ஆயத்தமாக நின்றதைக் கண்டான். ஆகாயம் முழுவதும் நீர் கொண்ட மேகம் மூடினாற் போல் அரக்கர் கூட்டம் நின்றது. உடனே மானவாஸ்திரத்தை எடுத்து, ''லக்ஷ்மணா, பார்!'' என்றான் ராமன்.

அந்த அஸ்திரம் மாரீசனைத் தாக்கி அவனை நூறு யோசனை தூரம் தள்ளிக் கடற்கரையில் கொல்லாமல் வீழ்த்திற்று.

பிறகு ராமன் ஆக்னேயாஸ்திரம் விட்டான். அது சுபாஹுவைத் தாக்கி,

கங்கை நீரில் ஊதுபத்தி!




''**க**ங்கை நீரைக் கொண்டு வந்து, அதிலே ஊதுபத்தி தயாரிப்பதா? நம்புவதற்குக் கஷ்டமாக இருக்கிறதே!'' என்று வெல்வெட் நிறுவனத்தின் தலைவர், ராஜ்குமாரைக் கேட்டபோது, சொன்னார் : ''கங்கை என்பது இந்திய மக்களின் மனதிலே ஒரு புனிதமான இடம் பெற்றுள்ளது. எனவே, விளம்பரத்துக்காக கங்கையின் பெயரைப் பயன்படுத்தி, பிசினஸ் செய்ய நான் விரும்பவில்லை. ஊதுபத்தியில் இருபது சதவீதம் தண்ணீர். அதற்கு உண்மையிலேயே கங்கை நீரைத்தான் பயன்படுத்துகிறோம். ஹரித்துவாரில் கங்கை நதியிலிருந்து பெரிய பிளாஸ்டிக் கண்டெயினர்களில் தண்ணீரை நிரப்பி ரயில்வே வாகன்கள் மூலமோ, வேன்களிலோ கொண்டு வருகிறோம். அதற்குரிய செக் போஸ்ட் மற்றும் ரயில்வே டாகுமென்ட்களைக் கூட, எங்களால் காட்ட முடியும். எனவே இதில் ஏமாற்று வேலை எதுவுமில்லை.''

''கங்கை நீர் கொண்டு, ஊதுபத்தி தயாரிக்கும் எண்ணம் எப்படி உருவாயிற்று?''

''இந்தியாவில் 300 கோடி ரூபாய்க்கு ஊதுபத்தி மார்க்கெட் இருக்கிறது. ஆனால் இதை மட்டுமே நம்பி இத் துறையில் புக முடியாது. அதிலும் ஏதாவது புதுமை செய்ய வேண்டும் என்று யோசித்ததன் விளைவுதான் கங்கை நீர் கொண்டு ஊதுபத்தி தயாரிப்பது. ஒவ்வொரு 'பவித்ர கங்கா ஸ்நான்' ஊதுபத்தி பாக்கெட்டுடன் புனித கங்கை நீர் ஒரு 'சாஷே' வழங்கவும் ஏற்பாடு செய்து வருகிறோம்..''

– ஜூலி



இயற்கை அன்னையின் அன்பளிப்பு
எதிர்கால வாழ்வின் பரிபூரண பாதுகாப்பு

நோபிள் தேக்கு பம்பர் திட்டம்

ரூ. 900|-க்கு இரண்டு மரத்தை விதைத்து 20 ஆண்டுகளில் ரூ.1,50,000|-த்தை அறுவடை செய்வீர்.

இருபது ஆண்டுகளில் மற்ற முதலீடுகளின் லாபம்
வைப்பு நிதியில் — 16 மடங்கு
தங்கத்தில் — 20 மடங்கு
சொத்துகளில் — 50 மடங்கு
ஆனால் மர முதலீட்டிலோ 166 மடங்கு எப்படி?
1 மரத்திற்கு 37.5 கன அடி
2 மரத்திற்கு 75 கன அடி

இன்றைய விலை கன அடி ரூ.750|-
20 ஆண்டுகளில் கன அடி ரூ.2000|-
ஆக ரூ 2.000 × 75 க.அடி = ரூ. 1,50,000|- என்று கணக்கிடலாம்.

வழங்குபவர்கள்:

நோபிள் ஹெல்த் ரிசார்ட் (பி) லிமிடெட்

A-188-B, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்பாக்கம், சென்னை-600 010. போன்: 6412210

தவணை முறை திட்டமும் உண்டு! (ஏஜெண்டுகள் தேவை)



திரு K. குமாரசாமியின் புதல்வன் பாலதாஸ் அவர்கட்கும் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த மறைந்த திரு S. வைரமுத்து (சித்தப்பா) அவர்களின் பேத்தியும் திரு க. வைத்தீஸ்வரனின் புதல்வியும் ஆகிய அன்புச் செல்விக்கும் வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் 1.10.92 அன்று திருமணம் இனிதே நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்.

அவன் மாண்டு விழுந்தான். பிறகு வேறு அஸ்திரங்களைப் பிரயோகித்து அரக்கர் கூட்டத்தை ராஜ குமாரர்கள் முற்றிலும் அழித்தார்கள்.

ஆகாயம் மறுபடி வெளுத்தது.

இவ்வாறு யாகத்தைக் கெடுக்க வந்த அரக்கர்கள் வீழ்த்தப்பட்டு ரிஷிகளுக்கு ஏதொரு தொந்தரவுமில்லாமல் காரியம் முடிந்தது. விசுவாமித்திரர் எல்லை கடந்த மகிழ்ச்சியடைந்தார்.

''சக்கரவர்த்தி தசரதனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் ஆணைப்படி நடத்திக் கொடுத்தீர்கள். உங்களுடைய பராக்கிரமத்தைப் பாராட்டுகிறேன். இந்த ஆசிரமம் மறுபடியும் எங்களுக்கு சித்தாசிரமம் ஆயிற்று'' என்று சொல்லி ராஜகுமாரர்களை ஆசீர்வதித்தார்.

அன்றிரவு இராஜ குமாரர்கள் சித்தாசிரமத்தில் தூங்கிக் களைப்பு தீர்த்துக் கொண்டார்கள்.

மறு நாள் காலை நியமங்களை முடித்து விட்டு ராம லக்ஷ்மணர்கள் முனிவர் முன் நின்று வணங்கி, ''என்ன உத்தரவு?'' என்றார்கள்.

அவதார ரகசியம் முனிவருக்குத் தெரிந்ததுதான். உபதேசித்துத் தந்த அஸ்திரங்களின் வல்லமையும் அவர் அறிந்ததே. ஆயினும் எதிர்பார்ப்பது வேறு. எடுத்த காரியம் முடிந்து அதை நேரில் அனுபவிக்கும் மகிழ்ச்சியே வேறு.

விசுவாமித்திர முனிவருக்குச் சொல்லொணாத சந்தோஷம். அவர் முகம் அக்னிச் சுவாலையைப் போல் பிரகாசித்தது. இன்னும் ராமச்சந்திரனுக்குத் தாம் செய்ய வேண்டிய பணியைப் பற்றி நினைக்கலானார். அதுவே சீதா கலியாணம்.

அங்கு கூடிய ரிஷிகளும் விசுவாமித்திரரும் ராமனை நோக்கிச் சொன்னார்கள் :

''நாங்கள் மிதிலைக்குப் போவதாக இருக்கிறோம். ராஜ சிரேஷ்டரான ஜனகர் ஒரு யாகத்தைச் செய்யப் போகிறார். அங்கே நாம் அனைவரும் போகப் போகிறோம். ராஜகுமாரர்களும் நம்முடன் வருவது நல்லது. ஜனகருடைய அற்புத வில்லைச் சக்கரவர்த்தித் திருமகன் தரிசித்தல் தகும்.''

அவ்வாறே நிச்சயம் செய்தார்கள். ராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திரருடன் மிதிலைக்குச் சென்றார்கள்.


(தொடரும்)

வரி விலக்கில் ஒரு வஞ்சனை!



அண்மையில், மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. அதன்படி நலிந்த மற்றும் உபரித் தொழிலாளர்கள் உள்ள பொதுத்துறை நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் தாங்களே விரும்பி வேலையிலிருந்து ஓய்வு பெற (Voluntary Retirement Scheme) விரும்பினால், அவர்களுக்கு ஓய்வூதியம் உட்பட எல்லாச் சலுகைகளுடனும் ஓய்வு கொடுத்து அனுப்ப வேண்டும். அப்படிக் கொடுத்து அனுப்பும் தொகைக்கு வருமானவரி விலக்கு வழங்கப்படும் என்று மத்திய நேரடி வரிகள் விதிப்புக் குழுமம் அறிவித்தது. இச்சலுகை, இத்திட்டத்தின்படி ஓய்வு பெறும் தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் உண்டு என அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில், சென்னை துறைமுக நிறுவனத்திலிருந்து இத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு மட்டும் வருமான வரியாக சுமார் நாற்பது சதத்தைப் பிடித்துக் கொண்டு மீதியைத்தான் தருகிறார்கள். காரணம் கேட்டால், துறைமுக ஊழியர்கள், பொதுத்துறை ஊழியர்களுமல்ல; தனியார் துறை ஊழியர்களுமல்ல; ''லோக்கல் அதாரிடி'' ஊழியர்களாம்! இந்த அநியாயத்தை, அரசுக்கு எடுத்துச் சொல்லியும் பலனேதும் கிடைக்கவில்லையே!

– வி.ஆர். சந்திரன்



● தாடி(க்)கவு...



● விரும்பி வேண்டிய...




● ''சரணம் ஐயப்பா!''

● ...தற்செயல் சந்திப்பு!

நீங்கள் கேட்டவை

- தராசு



● உத்தரமேரூர் உலா



ஜெ. அரசு, போக வேண்டிய அரசு அல்லவா?

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? வெள்ளப் பகுதியைப் பார்வையிட வந்த மத்தியப் பார்வையாளர்கள் ஜெயாவுக்கு வேண்டாத விருந்தாளிகளாக விளங்குவது ஏன்?

! ரூ 550 கோடி கேட்டு 22 கோடி பெறுகிற சாதனையைப் புரிய வேண்டுமே, அதற்காகத்தான்!

● அ. அப்துல்காதர், அரியநாயகிபுரம்.

? மகாகவி பாரதியை டி.கே.சியின் வட்டத் தொட்டி உதாசீனம் செய்தது என்று சு. சமுத்திரம் குற்றம் சாட்டுகிறாரே?

! பழைய தேசிய கவி - மகாகவி சர்ச்சையை மனத்தில் கொண்டு பேசுகிறார் போலும்! பாரதியை தேசிய கவி என்று பார்த்தவர்கள் கூட அவரை உதாசீனம் செய்யவில்லை; போற்றி மண்டபம்தான் எழுப்பினார்கள் என்பதால் சமுத்திரத்தின் குற்றச்சாட்டில் உப்புமில்லை, சப்புமில்லை..

● இரா. பார்த்திபன், வயலூர்.

? சமீபத்தில் படித்த புத்தகம்?

! இனியவன் எழுதிய ''உத்ரமேரூர் உலா''. தந்தை பிறந்த வட்டம் என்பதால் ம.செ. ரசித்துப் படங்கள் போட்டிருக்கிறார். அசத்துகிறது புத்தகம். ஒவ்வொரு தாலூக்கா பற்றியும் இதே மாதிரி அதன் சிறப்புக்களை உள்ளடக்கிய நூல் வெளியிடப் போகிறாராம், இனியவன். பேஷ்!

● இரா. சம்பத்குமார், இராசிபுரம்.

? ''பாத யாத்திரை மூலம் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்றால் நான் கன்னியாகுமரியிலிருந்து உருண்டே வரத் தயார்'' என்று வாழப்பாடி கூறியிருப்பது பற்றி...?

! அபத்தமான, சிறுபிள்ளைத்தனமான பேச்சு. பாதயாத்திரை மூலம் ஆட்சியைப் பிடிக்க முடியும் என்று யாரும் கூறவில்லை. மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். அந்த விழிப்புணர்ச்சி, பின்னால் ஆட்சியைப் பிடிக்க உதவக்கூடும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. பாத யாத்திரை மூலம் முயற்சி செய்யாமல் முதுகுச் சவாரி மூலமா ஆட்சியைப் பிடிக்க முடியும்? பாதயாத்திரையில் நம்பிக்கை இல்லாமலா காந்திஜி அதை மேற்கொண்டார்? மார்ட்டின் லூதர் கிங் பின்பற்றினார்? வாழப்பாடி சிந்தித்துப் பேசுவது நல்லது.

● ஏ. சுகுமாரன், காட்டுக்கானூர்.

? அ. தி. மு. க. வில் இப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பவர் யார்?

! உங்களுக்குப் பிடிக்காத அமைச்சர் யாராவது இருந்தால் அவர் பெயரைப் பதிலாக எழுதிக் கொள்ளுங்கள்!

● எஸ். ரோஜா, நாட்டரசன்கோட்டை.

? ''வாழ்க வளமுடன்'' என்ற சொற்களைப் பச்சை நிறத்தில் எழுதி அதை ஒவ்வொரு நாளும் பார்க்கும் போது மூளைக்குப் புது சக்தி ஏற்படுவதாக என் நண்பரின் அப்பா சொல்கிறார். இது பற்றி தங்கள் கருத்து...?

! ''பாஸிடிவ் திங்கிங்'' என்ற இத்தகைய பயிற்சிகள் சிலவற்றை மனநல நிபுணர்கள் சிபாரிசு செய்கிறார்கள். பச்சை நிறம் கண்ணுக்கு இதமானது. ஆபரேஷன் தியேட்டர்களில் கூட முன்பு இருந்த வெள்ளை உடை

● குற்றம் சாட்டுகிறார்





● உருண்டு உருண்டு...

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
பாளை. புகம்பொன்,
15, கவிதா நகர்,
மகாராஜ நகர்,
திருநெல்வேலி - 11.

போய் இன்று டாக்டர்களுக்கும் பிறருக்கும் பச்சை உடை வந்து விட்டது. பச்சை நிறமும் சொற்களும் மட்டும் எதையும் சாதித்து விடாது. மனநல நிபுணர்கள் சொல்கிறபடி கேட்டு மனத்தையும் ஒருமுகப்படுத்த வேண்டும்.

● இரா. ரெங்கசாமி, வடுகபட்டி.

? எதற்கும் வன்முறைதான் தீர்வு என்ற "ஞானோதயம்" எங்கும் பரவ மூலகாரணம் என்ன?

! சினிமாவும் அரசியலும் இவ் விஷயத்தில் முதலிடத்துக்குப் போட்டி போடுகின்றன.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? "ஜெயலலிதா - அத்வானி சந்திப்பில் அரசியல் முக்கியத்துவம் எதுவுமில்லை" என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறுகிறாரே?

! இந்த வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வதுடன் 'ஜெ'யைக் கடுமையாக விமர்சிக்க வேண்டிய நிர்பந்தமும் அவருக்கு ஏற்பட்டு விட்டதே!

● எஸ். ஏ. யூசுப், அதிராம்பட்டினம்.

? "சந்திரசேகரின் சந்திப்பு தற்செயலாக நிகழ்ந்தது" என்கிறார் ஜெ. "இல்லை, ஜெயலலிதாவே விரும்பி வேண்டிச் சந்தித்தார்" என்கிறார் சந்திரசேகர். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! எதற்கு வம்பு? 'விரும்பி வேண்டப்பட்ட தற்செயலான சந்திப்பு' என்று எண்ணினால் போச்சு!

● தீபா - ப்ரியா, பாளையங்கோட்டை.

? வெள்ளத்தில் மிதந்து வந்த பாட்டிலிலுள்ள ஏதோ திரவத்தைச் சாராயம் என நினைத்து அருந்தி சில பேர் பலியாகியிருக்கிறார்களே?

! நாற்பத்திரண்டு வருஷ சுதந்திரம் வழங்கியுள்ள கல்வியின் தரம் அந்த அளவில் இருக்கிறது!

● பாளை புகம்பொன், திருநெல்வேலி. ❑

? வெள்ளப் பகுதியைப் பார்வையிடும் போதும் தமிழக முதல்வர் இரு விரல்களைக் காட்டிக் கையசைக்கிறாரே, தேவைதானா?

! ஒருவேளை, 'வெள்ள நிவாரணப் பணி' என்ற பெயரில் கட்சிக்காரர்களும் அதிகாரிகளும் பணம் சுருட்டுவதில் வெற்றி பெறப் போகிறார்கள் என்பதை உணர்த்துவதற்காக இருக்கலாம், அந்த 'வி ஃபார் விக்டரி' சமிக்ஞை.

● லீலா இராம், நக்கலை.

? தாமரைக்கனி அடிக்கடி உணர்ச்சிவசப் படுகிறாரே?

! உணர்ச்சிவசப்பட்டால் கூடப் பாதகமில்லை; அடி(க்)கடிதான் உபத்திரவப் படுத்துகிறது!

● எம். விஜய்குமார், ஆவடி.

? தேவர் மகன் படத்தில் வன்முறைக் காட்சி அதிகமாக உள்ளதே?

! ஆமாம், அதையெல்லாம் குழந்தைகளும் பார்க்க அனுமதிக்கப்படுவது கொடுமையிலும் கொடுமை!

● எஸ். அருண், காரைக்கால்.

? ஜெ. அரசைப் போக வேண்டிய அரசு என்று நீங்கள் நினைக்கவில்லையா?

! நான் மட்டுமென்ன, கருணாநிதி, சு. சுவாமி கூட அப்படி எண்ணவில்லை. ஜெ. போனால் போதும் அதிமுக ஆட்சி நீடிக்கலாம் என்கிறார்கள். ஆனால் ஜெ இல்லாத அ.தி.மு.க. உயிரற்ற உடல் என்கிறேன் நான். ஜெ. இல்லாத அ.தி.மு.க. ஆட்சி நடக்காத காரியம். ஆட்சிக் கலைப்போ மறு தேர்தலுக்கும் அனுதாப அலைக்கும் ஜெ திரும்பப் பதவிக்கு வரவுமே வழிவகுக்கும். எனவே மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதே வழி. நல்லதோ கெட்டதோ அடுத்த தேர்தல் வரை மக்கள் தாங்கள் தேர்ந்தெடுத்த ஆட்சியை அனுபவிக்கத்தான் வேண்டும். இதைத்தான் In a democracy people get the government they deserve என்றார்கள்.

● பரதன், சென்னை.

? சரணம் ஐயப்பா! சபரிமலை சென்ற அனுபவம் உண்டா?

! இல்லை. ஆனால் கடுமையான நியமங்களைக் கடைப்பிடித்து மலைக்குச் சென்று வரும் பலரை என் நண்பர்களாகப் பெற்றிருப்பதில் பெருமையடைகிறேன். அவர்களுள் 22 வயதுக்குள் 18 முறை சபரிமலை யாத்திரை சென்று வந்துள்ள ஐயப்பன் ஒருவர். இவரது முதல் யாத்திரை நான்காவது வயதில்! யார் இந்த ஐயப்பன்? பாலு ஜுவல்லர்ஸ் அதிபர் பாலசுப்பிரமணியம் அவர்களின் அருமைப் புதல்வர்தான்.

என்றும் நிலவட்டும் இப்புன்முறுவல்.



இல்லம், குடும்பம், தொழில் அனைத்தையும்
செவ்வனே பராமரிக்கிறாள். அதே வசீகரப்
புன்முறுவலுடன்.

இப்புன்முறுவலுக்கு அப்பால் சற்று
நோக்குவோம். ஏதோ ஒரு ஏக்கம்
மறைந்துள்ளதோ அதன் பின்.

அவள் உங்கள் மனைவியாக இருக்கலாம்.. உங்கள்
வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு மூலாதாரமான அதே
குழந்தையாக இருக்கக் கூடும்.

அவளுடைய எதிர்காலத்தைப் பற்றி,
அவளுடைய எதிர்காலக் கனவுகளைப் பற்றி
சிந்தியுங்கள். யூ டி ஐ-ன் ராஜ் லக்ஷ்மி மூலம்
அவளுடைய எதிர்காலத்தை நீங்கள் வளமாக்கலாம்.

5 வயது வரையிலுள்ள பெண்
குழந்தைக்கான தனிச்சிறப்பான திட்டமே
ராஜ் லக்ஷ்மி. இத்திட்டத்தின் கீழ்
அவளுடைய முதலீடு 20 வருடங்களில்
21 மடங்கு விருத்தி அடைகிறது.

சிறப்பம்சங்கள்

- எப்பொழுது தேவையோ அப்பொழுது இத்திட்டத்தில் சேரலாம்
- குறைந்தபட்ச முதலீடு ரூ. 1000. உச்ச வரம்பு கிடையாது.
- தனிநபர், மாநில, மத்திய அரசு, ட்ரஸ்ட், சங்கம், கார்ப்பரேட் பாடி அல்லது கம்பெனி, 5 வயது வரையுள்ள பெண் குழந்தைக்காக முதலீடு செய்யலாம்.
- குழந்தை பிறந்த சமயத்தில் செய்யப்பட்ட ரூ. 1000 முதலீடு 20 வருடங்களில் 21 மடங்கு விருத்தி அடைகிறது. விருத்தியடையும் தொகை ஆரம்ப வயதைச் சார்ந்தது.
- பெண் குழந்தை 21 வயது அடைந்ததும் திட்டம் முதிர்வுறுகிறது.
- ஒவ்வொரு காலாண்டிலும் வெளியிடப்பட்ட போனஸ் முதிர்வடைந்ததும் வழங்கப்படும்.
- அக்டோபர் முதல் டிசம்பர் 1993 வரை முதலீடு செய்பவர்களுக்கு தனிச்சிறப்பான ஊக்கத்தொகை.

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

அனைத்து செக்யூரிட்டிஸ் முதலீடுகளும் மார்க்கெட் ரிஸ்க் கொண்டதாகும்
முதலீடு செய்யும் முன் உங்கள் முதலீட்டு ஆலோசகரை கலந்தாலோசிக்கவும்

ராஜ் லக்ஷ்மி

அவளுடைய வளமான எதிர்காலத்திற்காக

Branch Offices: • Madras Ph: 517101 517178 • Coimbatore Ph: 210399
• Madurai Ph: 34597 • Trichy Ph: 27774

UTI.2015/92.TM D

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி, டிசம்பர் 1, 1942

மூன்று வகை இன்பங்கள்

தமிழ்நாட்டில் உள்ள பரதநாட்டியப் பேராசிரியர்களுள் பந்தநல்லூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளைதான் தலைசிறந்தவர் என்பது வடநாட்டிலெல்லாங் கூடப் பரவியிருக்கிறது. அவருடைய தமிழ்நாட்டுச் சிஷ்யைகளில் மிகப் பிரசித்தி பெற்றவர் ஸ்ரீமதி ருக்மணி தேவி; அவருடைய சின்னஞ்சிறு சிஷ்யை குமாரி ஜயலக்ஷ்மி.



குமாரி ஜயலக்ஷ்மி ஆடும் போது, சில சமயம், "குழந்தைதான் ஆடுகிறாளா? அல்லது, பம்பரம் சுற்றுகிறதா?" என்று தோன்றுகிறது. அவ்வளவு விரைவு; அவ்வளவு விறுவிறுப்பு. நாட்டியக் கலையின் நுட்பங்கள் தெரியாதவர்கள் கூடப் பிரமித்து, "இது ஏதோ பிரமாதமான கலை!" என்று தீர்மானித்து விடுவார்கள்.

ராக தாள பாவத்துடன் கூடிய நாட்டியத்தில் ஒரு மகத்தான மோகன சக்தி இருக்கிறது. பாவமில்லாத வெறும் ராக தாளத்துக்கிசைந்த நாட்டியத்திலும் அந்த சக்தி பெரிதும் இருக்கிறது. ராகங் கூட இல்லாமல் லயசுத்தமாக ஆடினாலும், அதைப் பார்ப்பவர்களின் உள்ளத்தில் ஒரு துள்ளுதல் உண்டாகிறது. இந்த மூன்று வகையான இன்பங்களும் குமாரி ஜயலக்ஷ்மியின் நாட்டியத்தில் இருக்கின்றன. மூன்றாவது கூறிய லயசுத்தமான ஆடல் இன்பம் பரிபூரணமாய் இருக்கின்றது.

குமாரி ஜயலக்ஷ்மியின் நாட்டியக் கலையில் ஒரு குறைவு உண்டு என்று சொல்லலாமென்றால், அது பிராயக் குறைவுதான். பாட்டுக்களின் பொருள் அறிந்து உணர்ச்சியுடன் அபிநயம் பிடிப்பதற்குரிய பிராயம் வர வேண்டும். இதற்கிடையில், பூர்வீகமான நமது பரதநாட்டியக் கலையை ஸ்வச்சமாகவும் சாஸ்திர சம்பிரதாயத்துக்கிணங்கவும் பார்த்து அநுபவிக்க விரும்புவோர் குமாரி ஜயலக்ஷ்மியின் நாட்டியத்தைப் பார்த்து அநுபவிக்கலாம்.

பலே, ஆலத்தூர்!

அன்று ஆலத்தூர் சகோதரர்கள் பாடிய முத்துத் தாண்டவர் கீர்த்தனைகளின் மெட்டு அமைப்பு மிகவும் உயர்தரமாயிருந்தது. பாஷை தமிழ் என்பதை மறந்து விட்டுக் கேட்டால், சங்கீத வித்வத் சபை நிபுணர்கள் கூட எவ்விதக் குறையும் சொல்வதற்கு இடமிராது.

விஸ்தாரமாக ஆலாபனம் செய்து பாடுவதற்குத் தோடி ராகத்தையும் கீர்த்தனத்தையும் சகோதரர்கள் எடுத்துக் கொண்டார்கள். மேற்படி கீர்த்தனத்தில் நிரவல்



செய்து மாற்றி மாற்றி சித்திர விசித்திரமாக ஸ்வரம் பாடி ஆவர்த்தனங்களைக் குறைத்துக் கொண்டு வந்த போது, மிருதங்கமும் கஞ்சிராவும் பொருத்தமாய்ச் சேர்ந்து கச்சேரியை ஜிஞ்சாமிர்தமாகச் செய்து விட்டன. ரேடியோவைப் பார்த்து நிமிஷத்துக்கு நிமிஷம் "சபாஷ்!" போட்டுக் கொண்டிருந்தேன்!

ஆம் : சகோதரர்கள் மாற்றி மாற்றி ஸ்வரம் பாடுவது ரொம்ப நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் ராக ஆலாபனத்தில் இந்த முறையைக் கையாளுவது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை. ஒவ்வொரு சகோதரரும் ஒவ்வொரு ராகத்தை ஆலாபனம் செய்வது என்று வைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும்.

கச்சேரி அவ்வளவு நன்கு அமைந்ததற்கு பழனி முத்தையாப் பிள்ளையின் மிருதங்கமும், பழனி சுப்பிரமண்யப் பிள்ளையின் கஞ்சிராவும் வெகு தூரம் காரணமாயிருந்தன. தனி ஆவர்த்தனம் இரண்டு நிமிஷந்தான் வாசித்தார்கள் என்றாலும், அதற்குள்ளே தாளக் கலையின் அபூர்வ வித்தைகளையெல்லாம் கொண்டு வந்து கொட்டி விட்டார்கள்.

அன்றையக் கச்சேரியில் ஆலத்தூர் சகோதரர்கள் பாடிய ஒரு பாட்டை மட்டும் நான் ஆட்சேபிக்க வேண்டியிருக்கிறது. "இனிச் சுமக்க முடியாது இந்த தேகம்" என்று காம்போதி ராகத்தில் மிஸ்ர சாபுவில் பாடினார்கள்.

நமது ரேடியோ நிலையங்களில் இம்மாதிரி கச்சேரிகளை அடிக்கடி கேட்க முடியுமென்றால், ''இந்த தேகத்தையும் சுமக்க முடியும்'' என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– *''கர்நாடகம்'', ஆடல் பாடல்.*

பெண் மோகம்!

''மூன்று நாளாக என் மனதில் ஒரு பெரிய போராட்டம் நடந்து வருகிறது, பொன்னா! கதைகளிலே நான் கேட்டிருக்கிறேன், காவியங்களிலே படித்திருக்கிறேன், பெண் மோகத்தினால் அழிந்தவர்களைப் பற்றி! அந்த கதி எனக்கும் நேர்ந்து விடும் போலிருக்கிறது. மேனகையின் மோகத்தினால் விசுவாமித்திரர் தபஸை இழந்தாரல்லவா? அம்மாதிரி நானும் ஆகி விடுவேனோ என்று பயமாயிருக்கிறது. அந்தப் பெண், பொன்னா, அவ்வாறு என்னை அவளுடைய மோக வலைக்கு உள்ளாக்கி விட்டாள்....''



பொன்னன் குறுக்கிட்டு, ''மகாராஜா! நான் படியாதவன்; அறியாதவன். இருந்தாலும் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அநுமதி தர வேண்டும்'' என்றான்.

''சொல்லு, பொன்னா! உனக்கு அநுமதி வேண்டுமா?''

''விசுவாமித்திர ரிஷி மேனகையினால் கெட்டதை மட்டும் சொல்கிறீர்கள். ஆனால், பெண்களால் மேன்மையடைந்தவர்கள் இல்லையா, மகாராஜா! சீதையால் ராமர் மேன்மையடையவில்லையா? கிருஷ்ணன் போய் ருக்மணியை எதற்காகக் கவர்ந்து கொண்டு வந்தார்? அர்ச்சுன மகாராஜா சுபத்திரையையடைந்ததினால் கெட்டுப் போய் விட்டாரா? முருகக் கடவுள் வள்ளியைத் தேடித் தினைப்புனத்துக்கு வந்தது ஏன்? அதனால் அவர் கெடுதலை அடைந்தாரா?...''

''பொன்னா! சரியான கேள்விதான் கேட்கிறாய். சீதையினால் ராமரும், ருக்மணியினால் கிருஷ்ணனும், சுபத்திரையினால் அர்ஜுனனும், வள்ளியினால் முருகனும் மேன்மையடைந்தது மட்டுமல்ல. அருள்மொழி ராணியினால் பார்த்திப மகாராஜாவும், வள்ளியினால் பொன்னனும் மேன்மையடைந்திருக்கிறார்கள்.''

''அப்படிச் சொல்லுங்கள்! பின்னே, பெண் மோகம் பொல்லாதது என்றெல்லாம் ஏன் பேசுகிறீர்கள்?''

''கல்கி'' – பார்த்திபன் கனவு

ஓடைக்கரை!

மாலை நாலு மணி இருக்கும். ஓடை ஜலம் நிர்மலமாயிருந்தது. ஆங்காங்கே கரையோரத்தில் உட்கார்ந்திருந்த வெண் கொக்குகள் ஜலத்தில் பிரதிபலித்தன. ஓடைக் கரையில் இருபுறமும் வளர்ந்திருந்த கல்யாண முருங்கை மரங்களில் இளந் தளிர்களும் சிவப்புப் பூக்களும் குலுங்கிக் கொண்டிருந்தன. மந்தமாகத் தவழ்ந்து வந்த குளிர்ந்த காற்றில் அவை இலேசாக ஆடின. மரக் கிளைகளில் உட்கார்ந்திருந்த குருவிகள் ஒன்றில் மூக்கை ஒன்று கொத்திக் கலகலவென்று சப்தித்தும், அவ்வப்போது ஜிவ்வென்று பறந்து போய்த் திரும்பி வந்து உட்கார்ந்தும் விளையாடிக் கொண்டிருந்தன.



குருவிகளின் குரலுடன் போட்டியிடுவது போல், கலகலவென்று பெண்கள் சிரிக்கும் ஒலி கேட்டது.

''சரி; நான்தான் அந்தக் காந்தி குல்லாக்காரன் என்று வைத்துக் கொள். நீ என்ன செய்தாய்? அந்த மாதிரியே செய்து காட்டு!'' என்றாள் பங்கஜம்.

செந்திரு தரையில் படுத்துக் கொண்டு கண்களையும் மூடிக் கொண்டாள்.

அப்போது பங்கஜம் நாடக மேடைக் கதாநாயகனுடைய தோரணையில் செந்திருவின் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்து, ''என் கண்ணே! கண்மணியே! தாமரை இதழையும், கருவண்டையும், மீனையும், வேலையும் ஒத்த உன் அழகான கண்களைத் திறந்து என்னைப் பாராயோ?'' என்று சொல்லிக் கொண்டு சட்டென்று குனிந்து செந்திருவின் கன்னத்தில் முத்தமிட்டாள். குபீரென்று சிரித்துக் கொண்டு செந்திரு எழுந்து உட்கார்ந்தாள்.

''கல்கி'' – மகுடபதி

சார்மினார் சாலை :



ஆந்திர முதல்வரின் அவசர நடவடிக்கை!

●● ஆந்திர முதல்வர் விஜயபாஸ்கர ரெட்டி, வழக்கமாக முதலமைச்சர்கள் வசிக்கும் ஆனந்த நிலையத்தில் குடியேறாமல் தமது மகன் பிரகாஷ் சமீபத்தில் கட்டி முடித்த பங்களாவுக்குச் சென்று விட்டார். காரணம் என்ன தெரியுமா? 82 - ல் ஆந்திர முதல்வரானபோது அரசு இல்லமான ஆனந்த நிலையத்தில் குடியேறிய சில மாதங்களிலேயே பொதுத் தேர்தல் வந்து தெலுங்கு தேசத்திடம் படுதோல்வி அடைந்தார் என்கிற சென்டிமெண்ட்தான்!

●● விஜயபாஸ்கர ரெட்டி முதல்வரானதும் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட முடிவுகளில் முக்கியமானது எது தெரியுமா? ராஜீவ் காந்தி படுகொலையின் போது நடந்த அராஜகம் தொடர்பான வழக்குகளை வாபஸ் பெற்றதுதான். இத்தனை அவசரத்திற்குக் காரணம், கட்சி ஊழியர்களின் ஆதரவைப் பெறுவதற்குத்தான். அதோடு, அந்த வன்முறையைத் தூண்டிவிட்ட முக்கியமானவர்களில் சில காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் இருப்பதால், அவர்களைப் பகைத்துக் கொண்டு ரெட்டிகாரு பதவியில் நீடிக்க முடியாது என்பதும் முக்கிய காரணம். ஆனால் அரசு சொல்லும் காரணம் என்ன தெரியுமா? அந்த வன்முறைக் குற்றங்களை நிரூபிக்கத் தேவையான ஆதாரங்கள் இல்லை என்பதுதான்! அந்த வன்முறை பற்றி விசாரணை செய்து நீதிபதி அன்சாரி வெளியிட்ட அறிக்கையைப் படிக்காமலே அரசு இப்படியோர் முடிவை எடுத்திருப்பது பல புதிய பிரச்னைகளுக்கு வழிவகுக்கும் என்று சில போலீஸ் அதிகாரிகளே கருதுகிறார்கள்!

●● சட்டக் கல்லூரி மாணவர்களின் தேர்வு முடிவுகள் சமீபத்தில் வெளியானது. தோல்வியடைந்த மாணவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? கல்லூரிக்குச் சென்று பிரின்ஸ்பால் முதல் பியூன் வரை அடித்து உதைத்தனர். மேஜை நாற்காலிகளையும் விட்டு வைக்காமல் உடைத்துப் போட்டனர். போலீஸ் வரும் வரை கல்லூரி திமிலோகப்பட்டது. சட்டப் பரீட்சை எழுதித் தோல்வியுற்றது மட்டுமல்ல, பிராக்டிகல் பரீட்சை வைத்தால் இப்படித்தான் அதைச் செய்வோம் என்று உணர்த்தினார்கள் போலும்!

- ஸ்ரீப்ரியன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, எக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் : ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

உங்கள் பூஜை அறையில் பிரகாசமாக எரியும் விளக்குத் திரியின் விலை ஒரே ஒரு பைசாதான் என்று உங்களுக்குத் தெரியுமா?



ஒவ்வொரு பைசாவின் அருமையையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்

ஒவ்வொரு பைசாவின் மதிப்பைப்பற்றியும் ஏன் கணக்குப் பார்க்க வேண்டும் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

துகர் இன்வெஸ்ட்மென்ட்ஸ், 11 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்ட போதிலும், துகர் குடும்பத்தினர் 80 ஆண்டுகளாக நிதியுதவி வாணிபத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

துகர் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அதன் நிர்வாக இயக்குநர் திரு. என். தாராசந்த் துகர் மற்றும் சேர்மன் திரு. சி. அன்னாராவ் (முன்னாள் சேர்மன், திருமலை திருப்பதி தேவஸ்தானம்) தலைமையில் இயங்கி வருகிறது. அவர்கள் அந்நாளைய பண்புகளில் ஊறியவர்கள். எனவே எங்கள் வியாபார தத்துவம், அந்நாளைய பண்புகளான சிக்கனம் மற்றும் நேர்மையை அடிப்படையாகக் கொண்டது.

எங்கள் பண்புகளில் எங்களுக்கு அசையாத நம்பிக்கை. எனவே, எங்கள் டெபாசிட்தாரர்களுக்கும் எங்களிடம் மிகுந்த நம்பிக்கை.

இப்போது எங்களிடமுள்ள டெபாசிட்டுகள் என்றுமே இல்லாத அளவுக்கு ஏறக்குறைய 10 கோடி ரூபாயை எட்டி விட்டது. தொடர்ந்தாற் போல் 8 ஆண்டுகளாக நாங்கள் 25% லாபப் பங்கை (டிவிடெண்ட்) வழங்கி வருகிறோம். எங்கள் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை 20,000ஐத் தாண்டி விட்டது.

கணக்கற்ற டெபாசிட்தாரர்கள் பாடுபட்டு சம்பாதித்து எங்களிடம் ஒப்படைத்திருக்கும் பணத்தை நாங்கள் பொறுப்புடன் பாதுகாத்துவருகிறோம்.

இப்பணத்தை, நாங்கள் விவேகத்துடனும், முன் ஜாக்கிரதையுடனும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கும், வேலை வாய்ப்பிற்கும் வழிவகுக்கும் துறைகளிலே மட்டுமே முதலீடு செய்கிறோம். ஏனெனில், உங்கள் வீட்டு பூஜை அறைவிளக்கு என்றுமே பிரகாசமாக எரிய வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

• தவணைக் கொள்முதல் • லீசிங்
• ப்ராப்பர்ட்டி டிவலப்மென்ட் • பப்ளிக் டெபாசிட்

DUGAR
INVESTMENTS LIMITED

இப்பொழுது அணுகுங்கள். இது எங்கள் விசேஷ சேவை காலம்

பதிவு அலுவலகம்: "துகர் டவர்ஸ்", 123 மார்ஷல்ஸ் ரோடு, சென்னை-600 008. போன்: 883535 Tx: 041-6670 DUGR IN Fax: 91-44-881133

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

தெரிந்து கொள்ளுங்கள்

உங்கள் குழந்தையின் மேனிபற்றி

மலர் என்பார் இறகு என்பார் மழலைச் செல்வத்தை. அதன் மேனி மலரிலும் மென்மை. இறகிலும் மிருது. ஆகவேதான் அதற்குத் தேவை உங்கள் சிறப்பான கவனிப்பு.

மென்மையான ஆடைகள், இதமான ஸ்பரிசம். அத்துடன் சிறப்பான சோப்பு- ஜான்ஸன்ஸ் பேபி சோப்.

ஆரம்பத்தில் சில வாரங்களுக்கு குழந்தையின் சருமத்தில் சில மாற்றங்கள் ஏற்படும். அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். அது இயல்பான மாற்றம் ஆகும். சிறிது சிறிதாக மறைந்துவிடும்.

சருமத்தில் பூனை முடி: ஆரம்பத்தில் குழந்தையின் உடல் முழுதும் பூனை முடி போன்ற உரோமம் இருக்கும். அது இரண்டு வாரங்களுக்குள் தானாக உதிர்ந்துவிடும்.

சினைப்பு மற்றும் கரப்பான்கள்: இவை குழந்தையின் உடல் அமைப்பு (சிஸ்டம்) முழுதும் செயல்படத் துவங்காததால், அவை சிலநாட்களில் பொதுவாக மறைந்துவிடும்.

பிறப்புப் புள்ளிகள்: பிறக்கும்போது குழந்தையின் மேனியில் நீல சிவப்பு அல்லது பழுப்பு நிறத்தில் சில புள்ளிக்குறிகள் ஏற்படுகின்றன. சில மாதங்களில் அவை மறைந்துவிடுகின்றன. குழந்தை வளரும்போது சில புள்ளிகள் காணப்படலாம்.

தலையின் கவர்: இளஞ்சிவப்பு நிறத்தில் குழந்தையின் தலை உச்சியில் காணப்படும் பத்தை போன்ற கரப்பான் ஆகும். அது சில சமயங்களில், குழந்தையின் முகம் உடல் அல்லது அரைப் பகுதியிலும் பரவும். அது மறைந்துவிடும். அதற்கு பேபி ஆயில் போட்டு இதமாக்கவும்.

இளஞ்சிவப்பு சினைப்பு: முகம் அல்லது சதை மடிப்பு போன்ற வியர்வை தங்கும் பகுதியில் இளஞ்சிவப்பு சினைப்புகள் ஏற்படும். இது அதிக உஷ்ணத்தால் ஏற்படுகிறது. குழந்தையை வெதுவெதுப்பான நீரில் குளிப்பாட்டவும். மென்மையான சோப்பு உபயோகிக்கவும். பின்பு மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவிக்கவும்.

ஜான்ஸன்ஸ் பேபி சோப்: குழந்தையின் மேனிக்கான சிறப்பான படைப்பு. தூய்மையான பொருட்களால் மட்டுமே தயாரிக்கப்பட்டது ஜான்ஸன்ஸ் பேபி சோப்— இதில் மென்மையான குழந்தை மணம் கமழ்கிறது. ஜான்ஸன்ஸ் பேபி சோப்— ஜான்ஸன்ஸ் பேபி ஆயில் மற்றும் லனோலின் சேர்ந்துள்ளது. இவை குழந்தையின் சருமத்தில் ஈரப்பதம் உண்டாக்கி, மென்மையோடு வைத்துக் கொள்கிறது. இதில் சருமத்தில் அலர்ஜி மற்றும் புள்ளிகளை உண்டாக்கும் கடுமையான இரசாயனம் மற்றும் எரிச்சலான பொருட்கள் இல்லை. அதன் இதமான மென்மையான செயல், இயற்கை எண்ணெய்களை நீக்காமலே, சருமத்தை சுத்தமாக்குகிறது. உங்கள் குழந்தையின் மேனி பனித்துளி போல் மிளிரும், ஒளிரும்.

உங்கள் குழந்தைக்கு வேறு எந்த சோப்பையும் நம்புவீர்களா ?





காரணம், குழந்தையின் மேனிக்கு விசேஷ கவனம் தேவைப்படுகிறது.

"பேபி கேர்" என்ற இலவசப் பிரசுரம் பெற்றிட எழுதுங்கள்:
பேபி கேர் அட்வைஸர், ஜான்ஸன் அன்ட் ஜான்ஸன்,
30, "ஃபோர்ஜெட் ஸ்ட்ரீட், பம்பாய்-400 036.
உங்கள் குழந்தையின் பெயர் மற்றும் பிறந்த தேதியையும் குறிப்பிடவும்.

ஜான்ஸன் & ஜான்ஸன்